
# கல்விச் சிந்தனைகள்

- S.H.M. ஜெமீல்



# கல்விச் சிந்தனைகள்

எஸ்.எச்.எம். ஜெமீல்
B.A. (Econ. Sp.); Dip Ed; M.A

தமிழ் மன்றம்

**Kalvi Chintanaikal**
(Educational Thoughts)

Author : **S.H.M. JAMEEL, M.A.**
Publishers : ISLAMIC BOOK PUBLISHING CENTRE,
SAINTHAMARUTHU, KALMUNAI,
SRILANKA.

***First Edition*** : January, 1990.
***Second Edition*** : December, 1996.

Seventy Seventh publication of:
**THAMIL MANRAM,**
No.10, Fourth Lane,
Koswatta Road,
Rajagiriya, Sri Lanka.

விலை : 60. 00 (இலங்கை)

வடிவமைப்பு : வே. கருணாநிதி
Phone: 826 66 37.

Printers : Kannnppa Art Printers,
Madras - 600 005.

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின்
நிர்வாகச் செயலாளர்
ஜனாப் அ.ஸ. அப்துஸ் ஸமது பி.ஏ. (சிறப்பு) அளித்த

# வெளியீட்டுரை

இலங்கைக் கல்விமான்களுள் ஒருவராக ஜனாப். எஸ்.எச்.எம். ஜெமீல் அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார். நீண்டகாலம் கல்முனை ஸாஹிறாக் கல்லூரி அதிபராகவும், பின்னர் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை அதிபராகவும், அதன் பின்னர் கிழக்கிலங்கை பல்கலைக் கழகப் பதிவாளராகவும் கடமையாற்றி அவர் இதனை நிரூபித்துள்ளார்.

இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் சபைத் தலைவராக இருந்து இன்று இவர் இலக்கியப் பணியாற்றுகின்றார். இதன் மூலம் சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்கின்றார். கல்வி இயல் எம்.ஏ. பட்டதாரியான இவர் அவ்வப்போது கல்வி பற்றிய சிந்தனைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வது இயல்பானதாகும். அந்தச் சிந்தனைகள் தம்மைச் சூழ்ந்துள்ள கல்விப் பிரச்சினைகள் பற்றியதாகவும், தம் பிரதேசம், தம் சமூகம் என்பனவற்றை மையக் குறியாகவும் கொண்டு விளங்குவது இவரது பிரக்ஞை பூர்வமான சிந்தனைத் தெளிவை எடுத்துக் காட்டுகிறது.

அவ்வப்போது இவர் பல்வேறு பத்திரிகைகளிலும் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே "கல்விச் சிந்தனைகள்" என்ற இந்நூலாகும். இடம் பெற்றுள்ள 20 கட்டுரைகளுள் 13 கல்வி பற்றிப் பேசுகின்றன. அவை தம் சமூகத்தைப் பற்றியும், தம் பிரதேசத்தைப் பற்றியுமான கல்வித் தேவைகளையும், கல்வி அமைப்பைப் பற்றியனவுமாக அமைந்துள்ளன. இந்நூலில் இடம் பெற்றுள்ள 'நூற்றாண்டுத் திருப்பத்தில் மட்டக்களப்பு முஸ்லிம்களின் கல்வி' என்ற கட்டுரை என்னை வெகுவாகக் கவர்ந்தது. இத்தகைய ஒரு கண்ணோட்டத்தில் இதுவரை யாரும் நம் கல்வியை நோக்கவில்லை; சிந்திக்கவுமில்லை. அந்த வகையில் ஜனாப் ஜெமீல் முதல் சிந்தனையை எடுத்து முன் வைக்கிறார்.

இன்று கிழக்கிலங்கை முஸ்லிம்கள் கல்வித் துறையில் ஆர்வமும் கணிசமான அளவில் முன்னேற்றமும் காட்டி வருகிறார்கள். எனினும் இது அரசியல் ரீதியான ஓர் எழுச்சி. "வெள்ளத்தனையது மலர் நீட்டம்" என்பது போன்ற தளம்பல் நிலை. எனவே, நாம் இதை ஸ்திரப்படுத்திக் கொள்வது மட்டுமல்ல, ஒரு போட்டிக் கல்வி முறைக்கும் நம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். கிழக்கிலங்கைக் கல்விமான்கள் தம் சிந்தனா பூர்வமான பங்களிப்பை இவ்விடயத்தில் அதிகம் செய்தல் வேண்டும்.

ஜனாப் ஜெமீல் இந்நூலில் சொல்ல வந்த விசயாம்சங்கள் நவீன கல்வி வளர்ச்சியில் பொது மக்கள் மனத்திற்கொள்ள வேண்டியனவாகும். கல்வி வளர்ச்சி என்பது பாடசாலை ஆசிரியர்களுடைய பணி அல்லது அரசாங்கத்தின் கடமை என்பனவற்றோடு முடியும் விசயமல்ல. 16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பியர் வருகையோடு கிறிஸ்தவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு சமயமும் கல்வியும் ஒருங்கிணைந்து செயல்பட்டன. இப் பாடசாலைகளில் கல்வி கற்கப்போன மாணவர்கள் கிறிஸ்தவ சமயத்தைத் தழுவி வந்த சூழ்நிலையை அவதானித்த முஸ்லிம் பெற்றோர் தம் பிள்ளைகளை அப் பாடசாலைகளுக்கு அனுப்ப மறுத்து நின்றனர். இதனால் முஸ்லிம்கள் கல்வி வளர்ச்சியில் ஏனைய சமூகங்களை விடவும் பின்தங்கினர். இவர்களுடைய இந் நிலைப்பாடு சரியானதா? தவறானதா? என்பதை இன்றுகூட நாம் நிச்சயப்படுத்த முடியவில்லை. கல்விக்காக, வாழ்க்கை வசதிக்காக சமயத்தை இழக்காத அந்த உறுதிப்பாடு இன்று நாம் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய ஒரு பெருமை நிலையினைத் தந்துள்ளது. ஆதலால் இன்றைய நவீன கல்வி வளர்ச்சியில் பெற்றார் பாடசாலை அமைப்பினையும் செயல்பாட்டினையும் விளங்கிக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு இந் நூலில் இடம் பெற்றுள்ள கல்வி இயல் சார்ந்த கட்டுரைகள் பெரிதும் பயன்படும்.

இந்நூலில் இடம் பெற்றுள்ள 'எமக்கொரு பல்கலைக்கழகம்" என்ற கட்டுரை மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் எழுப்பிய ஒரு குரலின் எதிரொலியாகும். ஒரு பல்கலைக் கழகத்தின் பதிவாளராக இருந்த நூலாசிரியர் இந்தக் கோரிக்கைக்கு மேலும் அழுத்தம் கொடுப்பதில் அர்த்தமும் நியாயமும் கூடுதலாக இருக்கும் என்பது உண்மை.

தொடர்ந்து முஸ்லிம் உயர்கல்வி பற்றிய இவருடைய கருத்துக்களும் தரவுகளும் நம் இன்றைய உயர்கல்வி நிலையின் தேவையையும் அவசியத்தையும் நன்கு தெளிவுபடுத்துகின்றன.

'உயர் கல்வியின் ஒரிரு பிரச்சினைகள்' என்ற கட்டுரை இலங்கை முஸ்லிம்களின் சிந்தனைக்கு காலம் உணர்த்தும் ஒரு கோரிக்கையாகும். 'ஒரு பாடசாலை சமூகத்துடன் இணைகிறது' என்ற கட்டுரை பாடசாலை ஒரு சமூகத்தின் அக்கறைக்கும் ஆர்வத்துக்கும் உரியது என்பதை விளக்குகிறது.

பாடசாலைகளில் ஒழுங்கும் கட்டுப்பாடும் மீறப்பட்டு, ஆசிரியர்– மாணவர் தொடர்பில் விரிசல் ஏற்பட்டுள்ள இக்காலத்தில் 'பவணந்தி முனிவரின் நன்மாணாக்கர்; நல்லாசிரியர்' பற்றிய இரு கட்டுரைகள் இவ்விரு சாராரும் தம்மை எடை போட்டுக் கொள்ளும் தராசாகும். நன்னூலாரின் இக் கருத்துக்கள் என்றும் மாறாதன என்பதை இவை நிரூபிக்கின்றன.

'கல்வியும் கால மாற்றமும்; பாடசாலை நிர்வாகம்; கற்றலும் நினைவாற்றலும்' போன்ற கட்டுரைகள் கல்வி உளநூல் சார்ந்த கருத்துக் களாகும். ஆசிரிய கலாசாலையில் இப் பாடத்தினை நூலாசிரியர் கற்பித்த காலை, இவ்வாறான கருத்தூண்றல்களுக்கு இவர் உடன்பட்டதன் விளை வாக இவ் அருமையான கட்டுரைகள் நமக்குக் கிடைத்தன.

நூலில் வரும் 'கிழக்கின் சூறாவளிகள்; கிழக்கின் போக்குவரத்து, இலங்கை முஸ்லிம்களின் பொருளாதார நிலை' போன்ற கட்டுரைகள் வரலாற்றுப் பின்னணியோடும் புள்ளி விபரங்களோடும் நமக்குப் பல தகவல்களைத் தருகின்றன. அவை பெரிதும் பயன் உள்ளவை. ஈற்றில் ஜனாப் ஜெமீல் தமக்குள்ள இலக்கிய ஈடுபாட்டை வெளிப்படுத்தி தமிழில் சிறுகதைகள் பற்றிய இரண்டு அருமையான கட்டுரைகளைத் தருகின்றார். அவையும் மிக்க பயனுள்ளவையாகும்.

ஜனாப் ஜெமீல் இவ்வாறான ஆக்கப் பணிகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என்பது எமது ஆசங்கை யாகும்.

அக்கரைப்பற்று - அ.ஸ. அப்துல் ஸமது
01-01-1990.

# குறிப்புரை

இந்நூலில் கட்டுரைகளை வாசிக்க முன்பு இக்குறிப்பையும் வாசிக்குமாறு வேண்டுகிறேன். எனது முதலாவது கட்டுரை 1960ஆம் ஆண்டு, அதாவது எனது இருபதாவது வயதில் எழுதப்பட்டு வெளி வந்துள்ளது. அக்கட்டுரை நபிகள் நாயகம்(ஸல்) அவர்களைப் பற்றிய வொன்றாக இருப்பது எனது பாக்கியமே. அன்றிலிருந்து கடந்த முப்பது வருடங்களுள் சுமார் 40 கட்டுரைகள் என்னால் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவற்றுட் சில குறிப்பிட்டவொரு கால கட்டத் தில் அன்று முக்கியத்துவம் பெற்ற விடயத்தைப் பற்றி மட்டும் எழுதப் பட்டதினால் இன்று குறைந்த பிரயோசனமேயுடையன. அவ்வாறாக சிலவற்றை விடுத்து, பொதுவாக 20 கட்டுரைகள் இத்தொகுப்பில் இடம் பெறுகின்றன.

இக்கட்டுரைகளை வாசிக்கும் பொழுது அவை எழுதப்படும் போதிருந்த எனது வயது, அனுபவம், புறத்தாக்கங்களை மனதில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அடுத்ததாகக் கவனிக்க வேண்டிய விடயம் எனது கட்டுரைகளின் பருமனாகும். அநேக கட்டுரைகள் அளவிற் குறுகியன. இதற்கான காரணம் யாதெனில், பல்கலைக் கழகப் படிப்பை முடித்த உடனடியாகவே பெரிய கல்லூரியொன்றின் அதிபராகக் கடமையேற்க வேண்டியிருந்தது. அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ச் சியாக அதிகரித்தும், பொறுப்பு வாய்ந்ததுமான நிர்வாகக் கடமைகளிலும் அவை சார்ந்த பணிகளிலும் ஈடுபட்டுள்ள காரணத்தினால் ஆற அமர வீற்றிருந்து நீண்ட கட்டுரையொன்றை எழுதும் வாய்ப்பு இற்றை வரை கிடைத்ததேயில்லை. அவ்வாறு எழுத முற்பட்டுப் பல கட்டுரைகள் இடையிலேயே நின்று போனதும் உண்டு. எனவே இருந்த இருப்பில் தொடர்ச்சியாக ஒரு விடயத்தை எழுதி முடித்துவிட்டு எழும்பினாலேயே அக்கட்டுரையை முடிக்கலாம். அதனாற்றான் அநேக கட்டுரைகள் குறுகியவையாகும்.

சமயம், சமூகம், இலக்கியம், கல்வி, வரலாறு பற்றியனவே இக்கட்டுரைகள். அவற்றுட் பல கிழக்கு மாகாணத்துக்கு அழுத்தம்

கொடுப்பவை. இது தற்செயலாக நிகழ்ந்ததல்ல. இலங்கையின் ஏனைய மாகாணங்களை விடக் கல்வியில் பின்தங்கிய பிரதேசம் கிழக்கு மாகாணமாகும். அதனால் இப்பகுதி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு என்னாலான உதவிகளையும் செய்ய வேண்டுமெனும் அவாவிலேயே எனது பணிகளிற் பெரும்பகுதி கிழக்கு மாகாணத்திலேயே கழிந்தது. அவ்வனுபவத்தின் வெளிப்பாடு தவிர்க்க முடியாததே.

மேற்கூறிய தாற்பரியங்களை மனதில் வைத்து எனது கட்டுரைகளை நோக்குமாறு வேண்டுகிறேன்.

பல பத்திரிகைகள், சஞ்சிகைகளிலிருந்து கட்டுரைகளைத் தேடித் தொகுத்துதவிய எனது சகோதரர் ஏ.கே.எம். நியாஸ்; மிக அழகாகத் தட்டச்சிற் பொறித்துதவிய எம்.ஏ.எம். ஜெமீல், பீ.கொம்; நூலாக்கத்தில் ஆலோசனைகள் வழங்கிய கல்வி அதிகாரி யூ.எல். அலியார் எம்.ஏ.; மௌலவி இஸட். எம். நதீர் பீ.எட். வெளியீட்டுரை வழங்கிய பழம்பெரும் எழுத்தாளர் அ.ஸ. அப்துல் ஸமது பீ.ஏ. (சிறப்பு) ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

இக் கட்டுரைகளை அவ்வவ்போது வெளியிட்ட பத்திரிகை, சஞ்சிகை ஆசிரியர்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

நூலைச் சிறப்பாக வெளியிடுவதில் உதவிய கல்ஹின்னைத் தமிழ் மன்ற நிர்வாகி அல்–ஹாஜ் எஸ்.எம். ஹனிபா அவர்களுக்கும் இரண்டாம் பதிப்பை அழகுற அச்சிட்டு உதவிய பார்கர் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்தார் ஆகியோருக்கும் எனது நன்றிகள்.

அல்ஹம்துலில்லாஹ்.

சாய்ந்தமருது. எஸ்.எச்.எம். ஜெமீல்
01. 08. 1996.

## உள்ளே.....

வெளியீட்டுரை

குறிப்புரை

1. அறிஞர் கண்ட நபி பெருமான் (ஸல்) 1
2. தமிழிலே சிறுகதை 8
3. ஐம்பதுகளில் சிறுகதை 14
4. முஸ்லிம் உயர்கல்வி 23
5. எமக்கொரு பல்கலைக் கழகம் 38
6. இலங்கை முஸ்லிம்களின் பொருளாதார நிலை 43
7. கற்றலும் நினைவாற்றலும் 51
8. கல்வியும் கால மாற்றமும் 67
9. பாடசாலை நிர்வாகம் 72
10. நன்னூலாரின் நல்லாசிரியன் 77
11. நன்னூலாரின் நல்மாணாக்கன் 82
12. இலக்கிய ஈடுபாடும் மொழிவளமும் 87
13. ஒரு பாடசாலை சமூகத்துடன் இணைகிறது 90
14. உயர்கல்வியின் ஓரிரு பிரச்சினைகள் 99
15. கிராமமும் தலைமைத்துவமும் 105
16. குர்ஆன் மத்ரஸாவில் மாற்றங்கள் 110
17. முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமியக் கல்வி 121
18. கிழக்கின் சூறாவளிகள் 124
19. நூற்றாண்டுத் திருப்பத்தில் மட்டக்களப்பு முஸ்லிம்களின் கல்வி 135
20. நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிழக்கின் போக்குவரத்து 144

# 1.

# அறிஞர் கண்ட நபி பெருமான் (ஸல்)

அகிலத்தைப் படைத்து அதிலே மனிதனைப் படைத்த அல்லாஹ், அந்த மனிதனை நேரிய, பிழையற்ற வழியில் நடத்திச் செல்வதற்குரிய வழி வகைகளையும் முன்கூட்டியே செய்துவிட்டான். குறைவுள்ள, குற்றமிழைக்கக் கூடிய மனிதனை அவனது பிழைகளினின்றும் நீக்கி, நேர்வழியில் நடத்திச் செல்வதற்கு அல்லாஹ் தன் தூதர்களை அனுப்பினான். அவனால் அனுப்பப்பட்ட இறுதித்தூதர், கடைசித் தீர்க்கத்தரிசி முஹம்மது நபி (ஸல்) அவர்களாவர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இவ்வாறு அல்லாஹ்வின் திருத்தூதர் எனக்கூறும் பொழுது அவர்களது உயர்ந்த லட்சியம், உன்னதக் கோட்பாடு, கொள்கை, நேர்மை, சத்தியம் முதலான பண்புகளை விபரிக்கவேண்டிய அவசியமில்லை. அல்லாஹ்வின் உண்மைத் தூதராக விளங்கும் ஒருவரிடம் இத்தகைய உயர்ந்த குணங்கள் நிறைந்திருப்பது இயல்பு. அவைகள் யாவும் நிரம்பப் பெற்று உலகுக்கே வழிகாட்டும் ஒளிவிளக்காய் விளங்குபவர்கள் தான் தீர்க்கதரிசிகளாய் வாழமுடியும். உலகமும் அவர்களை ஏற்றுக் கொள்ளும். இக்கண் கொண்டு பார்க்கும் பொழுது நபி பெருமானின் குணாதிசயங்களை, வழி முறைகளைப் பற்றிச் சந்தேகம் கொள்வதற்கோ, சர்ச்சைக்கு வழி செய்வதற்கோ இடமில்லாமற் போய் விடுகிறது.

அல்லாஹ்வின் அருளினால் இவ்வித சிறந்த குண வியல்புகளை நபி பெருமான் (ஸல்) நிறையப் பெற்றிருந்த காரணத்தினாலேயே தனது இடையறா முயற்சியில் அவர்கள் வெற்றியடைய முடிந்தது. மூட நம்பிக்கைகளும், மனித இயல்புக்கே ஒவ்வாத பழக்க வழக்கங்களும் கொண்டிருந்த அக்கால அராபியரைத் திருத்தி அவர்களை உண்மை மனிதர்களாயாக்க அவர்களால் முடிந்தது. முந்நூற்றியறுபது விக்கிரங்களை, வெறும் கற்சிலைகளை கஃபாவிற்குள்ளே வைத்து அவற்றை வலம் வந்து அவை தாழ் பணிந்து வணங்கிய அராபியரை மிகக் குறுகிய காலத்துள் உண்மை வழிக்குக் கொண்டு வந்து நேர்மை, சத்தியம், அன்பு முதலியவற்றைக் கொண்டு அவர்களை வாழ வைப்ப தென்றால் நாயகம் (ஸல்) அவர்களின் பெருமைக்கு வேறென்ன சான்று வேண்டும். அவர் பரப்பிய உண்மை வழியாம் இஸ்லாம் சில நூற்றாண்டுகளுக்குள்ளாக உலக முழுவதும் பரவி மிக முக்கிய உலக மதங்களுள் ஒன்றாக விளங்கி வருவது அம்மதத்தின் உயர் சிறப்பை எடுத்துக் காட்டப் போதுமானது.

இத்தகைய சிறப்புக்களை முஸ்லிமான ஒவ்வொரு வரும் நன்கறிவான். எனினும் அச்சிறப்புக்களை உலகம் போற்றும் பிற மத அறிஞர்கள் புகழ்ந்து கூறும் பொழுது நமக்கு மேலும் நிறைவு உண்டாகின்றது. இறுதித்தூதர் நபி பெருமான் (ஸல்) தோன்றிய காலந்தொட்டே அவரைப் பற்றிய புகழ் கூறிப் போற்றிய அறிஞர்கள் எண்ணிலடங்கார். எனினும், சமீபத்திய உலகப் பெரியோர் சிலர் நாயகம் (ஸல்) அவர்களை எக்கண் கொண்டு நோக்கி உள்ளனர் எனப் பார்த்தல் சிறப்புடையது.

"வரலாற்றில் முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த ஒரு அதிர்ஷ்டத்தின் காரணமாக நபிகள் நாயகம் மூன்று விதமான ஸ்தாபகராய் விளங்குகின்றார்கள். அவர்கள் ஒரு சமுதாயத்தின் ஸ்தாபகர், ஒரு சாம்ராஜ்ஜியத்தின் ஸ்தாபகர், ஒரு மதத்தின் ஸ்தாபகர்" இவ்வாறு கூறுகிறார் ரெவரெண்ட் பாஸ்வர்த் ஸ்மித். எவ்வளவு ஆழ்ந்த கருத்துள்ள சரித்திர ஞானம் நிரம்பிய சொற்கள் இவை.

முஹம்மது நபி (ஸல்) அல்லாஹ்வின் திருத்தூதராகப் பிறந்து அகிலத்துக்கு அறிவொளிகாட்டி மடமையினின்று மக்களை விடுவித்தவர். இஸ்லாம் எனும் சன்மார்க்க வழியை உலகுக்கு எடுத்துக்கூறி அந்நேர்மையான வழியிலே தானே முன்னின்று மக்களை வழி நடத்திச் சென்றார்கள். அதனால் உலக மதங்களுள் மிகமிக முக்கியவொன்றான இஸ்லாத்தின் ஸ்தாபகராய் விளங்குகின்றார்.

அதேசமயத்தில் ஒரு சமுதாயத்தின் ஸ்தாபகராயும் விளங்குகின்றார்கள். சில மார்க்க அறிஞர்கள் போதித்தது போன்று மனித வாழ்வு வேறு, சமய வாழ்வு வேறு எனப் பாகுபாடு செய்யவில்லை எம் நபி (ஸல்) அவர்கள். உலகாயத வாழ்வையும் மதவாழ்வையும் ஒன்றுபடுத்த அம்மனித சம்சார வாழ்வு மதவழியிலே செல்லல் வேண்டும் எனப் போதித்ததோடு, தன் வாழ்க்கையிலும் அதைச் செவ்வனே நிறைவேற்றி ஏனையோருக்கும் முன் மாதிரியாகத் திகழ்ந்தார்கள். புனித திருக்குர்ஆனில் என்னென்ன கூறப்பட்டிருக்கின்றனவோ அவை யாவற்றையும் கைக்கொண்டு நடந்தால் ஒருவன் உண்மை நிரம்பிய நேர்மையான சத்திய வழியில் செல்லலாம். அவ்வழியிற் செல்பவன் அல்லாஹ்வை அடைவதில் ஏதும் தடைகளை

எதிர்நோக்க வேண்டிய அவசியமில்லை. அவசியமும் ஏற்படாது. இதனாற்றான் இஸ்லாம் ஒரு வாழ்க்கை முறை என அழைக்கப்படுகின்றது. அதைக் கடைப்பிடித்து நடக்கும் சமுதாயத்தை உருவாக்கிய பெருமை தனியொருவரைச் சாரும். அவர் நபி (ஸல்) பெருமானன்றி வேறு யார்?

நபிகள் நாயகம் (ஸல்) ஓர் அகண்ட சாம்ராஜ்ஜியத்தின் ஸ்தாபகர் எனவும் கூறுகின்றார் ரெவரெண்ட் பாஸ்வர்த் ஸ்மித். ஒரு காலத்தில் ஐரோப்பாவின் அநேக பாகங்களை தன்கீழ்க் கொண்டு வந்த அராபிய இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்திற்குக் கால்கோல் விழா நடத்தியவர் நபி பெருமான் (ஸல்). ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா யாவும் இஸ்லாமிய சாம்ராஜ்ஜியத்தின் அங்கங்களாகின. பைஸாந்தியப் பேரரசு தொடக்கம் ஸ்பானிய சாம்ராஜ்யம் வரை அவர்கள் கையிலே கிடந்தன. அட்சர கணிதத்தையும், கேத்திர கணிதத்தையும், அராபிய கலை கலாச்சாரங்களையும், வானவியலையும் ஐரோப்பியருக்களித்து அவர்கள் நாகரிகத்தை ஒருபடி முன்னேற்றி விட்டவர்கள் அல்லவா அராபியர்கள். இவை யாவற்றிற்கும் அடிப்படைக் காரணமாக விளங்கிய சக்தி ஒன்று உண்டென்றால் அது நபி பெருமானின் (ஸல்) தோற்றமே. அவர்கள் தோன்றியிராவிட்டால் அக்கால அராபியர் அஞ்ஞானத்தினின்றும் விலகியிருக்கமாட்டார்கள். இன்னும் சில நூற்றாண்டுகளாவது அவர்கள் தவறான பாதையிற் சென்றிப்பர். அவ்விதம் ஏற்பட்டு விடாதவாறு காப்பாற்றியது நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றமே. இதைத்தான் அறிஞர் ஜோர்ஜ் பேர்னாட்ஷாவும் “நபிகள் நாயகம் மனித இனத்தை அழிவிலிருந்தும் காப்பாற்றப் போந்தவர் என்பது என் கருத்து” என அழகாகக் கூறுகிறார்.

ஆனால் இவை யாவற்றையும் தான் பிறந்தவுடனேயோ அல்லது மிகச் சில வருடங்களிற்குள்ளோ நபி பெருமான் (ஸல்) சாதித்துவிடவில்லை. உலகுக்கு உண்மையை எடுத்துக் கூறி, அதை ஒப்புக் கொள்ளச் செய்வது என்பது இலேசான காரியமா? உண்மை எப்போதுமே முதலில் கசப்பானதுதான். உண்மையை முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்து இறுதியிலேயே அதை உவந்தேற்கும் மனிதர்கள்தான் அனந்தம். உண்மையைக் கூற முனைந்தவர்களை, உலகிற்குத் தொண்டு செய்ய முற்பட்டவர்களை, உலகம் முதலில் எள்ளி நகையாட வேண்டும் என்பது ஒரு நியதியோ என்னவோ? ஆனால் எள்ளி நகையாடும் அதே மனிதன்தான் பின்னர் அதை மனமுவந்தும் ஏற்றுக் கொள்கின்றான்.

மக்கள் சமுதாயத்தில் இவ்வித போக்கிலிருந்து நபி பெருமானாலும் (ஸல்) தப்ப முடியவில்லை. அவர்களும் அன்றைய சமுதாயத்தின் ஒரு பிரிவினரின் கொடுமைக்கு ஆளாகி மக்காவை விட்டு மதினாவிற்கு ஹிஜ்ரத் செல்ல வேண்டிய கஷ்டங்கள் ஏற்பட்டன. மரணத்தின் வாயிலிருந்து பலமுறை தப்பினார்கள். ஆனால் அதே நபி (ஸல்) பெருமான் தான் தனது உண்மை நிலையினாலும் ஆத்மீக பலத்தினாலும் எதிர்ப்புகள் யாவையும் வெல்ல முடிந்தது. உலகம் அவர்களையும் அவர்களது போதனைகளையும் மனமுவந்து ஏற்றது. ஏற்றத்தோடு நில்லாமல் உலகம் முழுதும் பரப்பவும் செய்தது. இவ்வாறு நபிபெருமான் அனுபவித்த துன்பங்களை சாதாரண ஒரு மனிதன் நோக்குவதைவிடத் தானே துன்பமனுபவித்த - அது வேறு வகையாக இருக்கலாம் - மனிதன் ஒருவன் நோக்கும் பொழுது அங்கு முழு உணர்ச்சியும், உண்மைத் தெளிவும் ஏற்பட இடமுண்

டல்லவா? அதனாற்றான் அண்ணல் காந்தியின் சொற்கள் இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமுடையனவாகத் தோன்றுகின் றன. நபிகள் நாயகம் பெரிய தீர்க்கதரிசி. அவர்கள் அனுபவித்த துன்பங்களை நான் படித்த வேளையில் கண்ணீர் உகுத்தேன்." என உருக்கமாகக் கூறுகிறார் மகாத்மா காந்தி.

நபிகள் நாயகம் (ஸல்) மத போதகராக மட்டும் திகழ வில்லை. மக்களுக்கு ஒவ்வொரு துறையிலும் வழிகாட்டும் தீபமாகவே விளங்கி வந்தார்கள். அவர்கள் காட்டிய வழி அச்சமுதாயத்தோடு மறைந்து விடாமல் அதற்குப் பின்னும் நிலைத்து நின்று இன்றும் எமக்கு வழிகாட்டி வருகின்றது. அத்துடன் என்றும் வழி காட்டவும் வல்லது. என்னென்ன விதத்தில் எவ்வெவ் முறையில் சரியான பாதையைக் காட்ட வேண்டுமோ அவை யாவற்றையும் செவ்வனே காட்டிச் சென்றுள்ளார்கள், அவர்கள். இப்பண்பை நன்கு மனதிற் கொண்டுள்ளார், பெர்னாட்ஷா. அமைதியும், அடக்கமும் அற்ற சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கிய இவ்வறிஞர் சமாதானத்தையும் நல்லுறவையும் கொண்டு வரக்கூடிய பரிகாரம் தேட முயலுகிறார். அந்தப் பரிகாரத்தையும் நபி பெருமான் (ஸல்) அவர்களிலேயே காண்கிறார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த முஹம்மது நபி (ஸல்) அவர்களை இன்றைய உலகுடன் தொடர்புறுத்தி நோக்குகின்றார் பெர்னாட்ஷா. அவர் கூறுவது இதுதான், "தற்கால உலகின் சர்வதிகாரப் பதவியை நபிகள் நாயகம் போன்ற மனிதர் ஒருவர் ஏற்பாராயின் தற்போது இவ் வுலகிற்கு பெரிதும் தேவையான அமைதியையும் மகிழ்ச்சி யையும் கொண்டுவரும் வண்ணம் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வெற்றியடைவார் என்று நான் நம்புகின்றேன்."

நபி பெருமான் (ஸல்) அன்றடைந்த வெற்றிகளே அவர்களை இன்றும், என்றும் வெற்றியடைவார் எனக்கூற அறிஞர்களைத் தூண்டுகிறது. ஆங்கில கலைக் களஞ்சியம் கூறுமாப்போன்று "எல்லாத் தீர்க்கதரிசிகளிலும், மதபோதகர் களிலும் நபிகள் நாயகம் மிகவும் வெற்றிகரமானவர்." பல தெய்வ வழிபாடும், மனிதர் படைத்த கல் உருவங்களை மனிதரைப் படைக்கும் கடவுளர் எனப் போற்றி அவற்றைப் பணியும் வழக்கமுடைய அராபியரிடைப் பிறந்தும், அவ்வித வழக்கங்களை வேரோடு களைந்தெறிந்தது அவரது பெரும் வெற்றி. பிறப்பால் உயர்வு தாழ்வு பேச ஒருவருக்கும் உரிமையில்லை யெனவும் எல்லோரும் உடன் பிறந்த ஒத்த உரிமையுள்ள மக்கள் எனவும் வற்புறுத்தி ஏற்றுக்கொள்ளச் செய்தது அவர்களது வெற்றி; பெண் மகளைப் புதை குழியிலிட்ட இரக்கமில்லா அராபியரை இணையற்ற இதவாதத்தால் துணைவராக்கிய வாய்மை அவர்களது வெற்றி. மக்களுக்கு அழியா நல்வழி காட்டி அவர்களை அவ்வழியில் நடக்கச் செய்தது அவர்களது முழுவெற்றி. இவையெல்லாவற்றையும் தொகுத்து நோக்குமிடத்து பிரெஞ்சுக் கவிஞர் லமார்ட்டின் கூறிய வாக்குகளையே இங்கு கூறுவது பொருத்தமுடையது. "மனிதர்களின் மகத்துவத்தை அளக்கக்கூடிய எந்த அளவு கோலினால் அளந்து பார்ப்பினும் எந்த மனிதன் நபிகள் நாயகத்தைவிட மேலானவன்? ஒருவனுமில்லை."

University Majlis, Volume X,
பேராதனைப் பல்கலைக்கழகம்
முஸ்லிம் மஜ்லிஸ் – 1960,
ப: 31–34.

# 2.

# தமிழிலே சிறுகதை

இருபதாம் நூற்றாண்டையத் தமிழிலக்கிய வளர்ச்சியில் உரைநடை மிக முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம், சங்ககாலத்தில் எவ்வண்ணம் அகத்திணை, புறத்திணை நூல்கள் சிறப்புற்று விளங்கினவோ; சோழர் காலத்தில் மாபெரும் காப்பியங்கள் தமிழ் மொழியை எவ்வாறு அலங்கரித்தனவோ; அதேபோன்று இவ்விருபதாம் நூற்றாண்டில் உரைநடையிலக்கியம் தமிழிலக்கிய உலகில் முக்கியமானதொரு இடத்தைப் பெற்று, அம்மொழி வளர்ச்சிக்குப் பேருதவி புரிகின்றது.

உரைநடை எனும் பொழுது நாம் நாவல், சிறுகதை, விமர்சனம், கட்டுரை, நாடகம் ஆகியவற்றையே குறிக்கின்றோம். இவற்றுள்ளும் சிறுகதையே ஏனையவற்றை விட இன்று பல வகையிலும் முன்னணியில் நிற்பதைக் காண்கின்றோம். நாளுக்குநாள் சிக்கலடைந்து வரும் இன்றைய சமுதாயத்தில் ஆறஅமர வீற்றிருந்து ஆறுதலாக ஒரு நீண்ட நாவலைப் படித்து முடிக்கக் கூடிய நேரமும் வசதியும் அவகாசமும் அனேகருக்குக் கிடைப்பதில்லை. இதனால் சிறுகதையே காலத்திற்கேற்றவொன்றாக, மனிதனது வாழ்க்கையோடொட்டிச் செல்வதாக விளங்குகின்றது; முன்னணியிலும் நிற்கின்றது. மனிதனுக்குக் கிடைக்கும் சொற்ப ஓய்வு நேரத்திற்குள் வாசித்து முடிக்கக் கூடிய அவகாசத்தை அளிப்பது சிறுகதைதான்.

நாவலின் சுருக்கமே சிறுகதை என நாம் கொள்ளலாகாது. நாவல் பல கதாபாத்திரங்களைத் தன்னகத்தே

கொண்டு பல சம்பவங்களை அடுக்கடுக்காகக் கூறி, அளவிலும் எவ்வளவும் நீண்டு செல்லக்கூடியது. வர்ண னைக்கு அங்கே இடமுண்டு. பற்பல தத்துவங்களைக் கதா பாத்திரங்கள் மூலம் வெளியிட வசதிகளுண்டு. சம்பவங் களை அடுக்கடுக்காகக் கூறிட ஏதுவுண்டு. கதாநாயகன் நாயகியின் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு எல்லாவற்றையுமே கூற வழிகளுண்டு.

ஆனால் சிறுகதை அப்படியன்று. அளவிற் குறுகுவ தோடு, ஏனைய விஷயங்களிலும் குறுகியே நிற்கும் சிறுகதை. ஒரு சிறு சம்பவத்தை அல்லது ஒருவனது வாழ்க் கையில் ஒரு தரம் நடைபெறும் ஒரு சிறு விசயத்தை அடிப் படையாகக் கொண்டெழுவது சிறுகதை. நீண்ட வர்ணனை களைப் புகுத்துவதோ, கதாநாயகன் நாயகியின் வாழ்க்கை வரலாற்றை ஆதியோடு அந்தமாகப் படம் பிடித்துக் காட்டு வதோ சிறுகதையின் வேலையுமல்ல; அப்படி செய்வது அழகுமல்ல. சில சம்பவங்களைக் கூறி பல சம்பவங்களை வாசகர்கள் ஊகிக்கும் வண்ணம் விட்டுவிட்டாற்றான் சிறு கதையின் தரம் உயரும். அது சிறந்ததெனப் போற்றப்படும்.

சிறுகதையின் வளர்ச்சியை நாம் காய்தல் உவத்தலின்றி பரந்த நோக்கத்தோடு ஆராயும் பொழுது, அது தமிழிலேயே உற்பத்தியானதொன்றல்ல; வெளிநாட்டிலிருந்து இறக்கு மதி செய்யப்பட்டதே எனும் உண்மையை ஏற்க வேண்டியவர் கள் ஆகின்றோம். மேனாட்டார் தொடர்பினாலும், ஆங்கிலக் கல்வி தமிழ் மக்களிடையே பரவியதாலும் தமிழிலக்கிய உலகிலும் மாற்றமேற்பட்டு உரைநடையும் அதன் முக்கிய அங்கங்களில் ஒன்றாகச் சிறுகதையும் தமிழ்மொழியில் புகுந்துவிட்டன. ஆங்கில முறைகளைத் தழுவித் தமிழில்

இலக்கியங்கள் எழத் தொடங்கின. அதனால் சிறுகதை இலக்கியமும் தமிழில் வளர்ச்சி பெறலாயிற்று. எவ்விதம் சிறுசிறு பாடல்கள் சங்க காலத்திலும், பக்திப் பாடல்கள் பல்லவர் காலத்திலும், காப்பியங்கள் சோழர் காலத்திலும் சிறப்புற்று விளங்கினவோ, அதேபோன்று இன்று நாவல், சிறுகதை முதலியன சிறப்புற்று விளங்குகின்றன. இது இயற்கை நியதி. பழையன கழிதலும் புதியன புகுதலும் மரபே. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு இலக்கியத் துறையே முன்னிற்கும். ஒரே காலத்தில் பல இலக்கியத் துறைகள் சமமாக வளர்ச்சியடைவதுமில்லை; அதேபோன்று ஒரே இலக்கியத்துறை பல காலங்களில் முன்னிற்பது மில்லை. இதற்குத் தமிழ் இலக்கியமும் விதிவிலக்கல்ல. கம்பன், சோழர் காலத்தில் வாழ்ந்ததினாற் காவியமியற் றினான். அவன் இன்று வாழ்ந்திருந்தால் ஒருவேளை காப்பியத்திற்குப் பதிலாக சிறுகதைகளோ அன்றி நாவலோ அல்லது எளிய நடையில் கவிதையோ எழுதிக் குவித்துப் பிரபல்யமடைந்திருப்பான்.

இது மக்கள் யுகம்; அதனால் இலக்கியமும் மக்கள் இலக்கியமாகவே திகழ வேண்டும். மனித உறவுகளை எடுத்துக்காட்டக் கூடியனவாய் இலக்கியப் படைப்புக்கள் அமையவேண்டும். அதனாற்றான் மக்களின் ஆசாபாசங் களை அவர்களது வாழ்க்கையை, அதிலேற்படும் சம்பவங் களை, சிக்கல்களை, சமய சமூகப் பிரச்சினைகளை அடிப் படையாகக் கொண்டெழும் சிறுகதைகள் முன்னின்று, இன்றையச் சிறந்த இலக்கியங்களாகத் திகழ்கின்றன. ஆங்கிலேயரிடமிருந்து பெறப்பட்ட இச்சிறுகதையிலக்கியம் வளர்ச்சியடைந்து தமிழுடன் இரண்டறக் கலந்து மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றது. தமிழிலே சிறுகதைகள்

தோன்றத் தொடங்கிய காலந்தொட்டு இன்று வரையும் எழுதப்பட்டுள்ள சிறுகதைகளில் நாம் சிறிது கண்ணோட்டம் செலுத்தினால் அதன் வளர்ச்சியையும் அது நடந்து வந்துள்ள பாதையையும் அறிவது இலகு.

சிறுகதையிலக்கியத்தைத் தமிழிலே தொடக்கி வைத்த பெருமை வ.வே.சு. ஐயரையே சாரும். அவரது குளத்தங் கரை அரசமரம்" பிற்காலத்தில் சிறுகதைகள் தமிழிலே ஏராளமாகத் தோன்றுவதற்கு முன்னோடியாகத் திகழ்ந்துள் ளது. சிறுகதையிலக்கியத்திற்கு உருவும் உயிரும் கொடுத் தவர் இவரே. இவருடன் தமிழிலே சிறுகதைகள் அரும்பத் தொடங்கிய காலத்தில் அவ்விலக்கியத்துறையை சீராட்டி வளர்த்தவர்கள் மாதவையா, பாரதி, ராமானுஜலு நாயுடு ஆகியோருமாவர்.

எனினும் சிறுகதைக்குப் பூரணத்துவம் கொடுத்து, அதை மக்கள் மத்தியிலே பிரபல்யமடையச் செய்தவர் புதுமைப்பித்தனெனப் பெயர் பெற்றுத் தமிழ் இலக்கிய வுலகில் என்றும் அழியா இடத்தைப் பெற்றுள்ள சொ. விருத்தாசலமேயவார். சிறுகதை மன்னனான புதுமைப் பித்தன் பேச்சு வழக்கிலுள்ள தமிழைப் பிரயோகித்துச் சிறுகதை இலக்கியத்தையே சிறப்படையச் செய்தவர். அவருக்குத் தமிழ்மொழி வளைந்து நெளிந்து கொடுப் பதைப் பார்க்கும்பொழுது தமிழ்மொழியிலும் இப்படியான இலக்கியங்களை இயற்றலாம் என உலகுக்குக் காட்டிய வரும் அவரே எனச் சொல்லத் தோன்றுகிறது. "சாப விமோசனம்", "கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்", "பொன்ன கரம்" போன்றவை புதுமைப்பித்தனின் சிறப்பிற்குத் தகுந்த

எடுத்துக் காட்டுக்கள். சிறுகதை மன்னன் என்ற பெயருக்கு மிகமிகத் தகுதியுடையவர் புதுமைப்பித்தன்.

தமிழ்ச் சிறுகதையிலக்கிய வளர்ச்சியில் "மணிக்கொடி" யின் சேவை நினைவு கூறத்தக்கது. சிறுகதையிலக்கிய வரலாற்றில் வளமுள்ள காலமாக விளங்குவது மணிக்கொடி பிரசுரிக்கப்பட்ட காலமாகும். தமிழ்ச் சிறுகதை பூரணத்துவம் பெற்றது இக்காலத்திற்றான். இத்துறையில் அரும்பணி ஆற்றியவர்களுள் புதுமைப்பித்தனுடன் ந. பிச்சமூர்த்தி, மௌனி, கு.ப. ராஜகோபாலன், லா. ச. ராமாமிருதம், கு. அழகிரிசாமி போன்றோரும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களைத் தவிர பலர் சிறுகதையிலக்கிய வளர்ச் சிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளனர். கல்கி ரா. கிருஷ்ண மூர்த்தி, வ.ரா., தி.ஜ.ர, ராஜாஜி, ஜீவா, பி.எஸ். ராமையா, சிதம்பர சுப்புரமணியம், நாடோடி, அகிலன், மாயாவி, த.நா. குமாரசாமி, மு. வரதராசன், அண்ணாதுரை, கருணாநிதி போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடன் இன்னு மெத்தனையோ பேர் சிறுகதை வளர்ச்சிக்காகப் பணியாற்றி யுள்ளனர், பணியாற்றி வருகின்றனர். தமிழ்ச் சிறுகதை வானின் நட்சத்திரங்களில் ஒன்றிரண்டு மறைந்து விட்டா லும், நூற்றுக்கணக்கானவை புதிதாகத் தோன்றிக் கொண்டே யிருக்கின்றன.

வளர்ந்து வரும் எழுத்தாளர்களுள் விஜய பாஸ்கரன், வல்லிக்கண்ணன், ஜெயகாந்தன், சுந்தரராமசாமி போன்றோர் சிலராவர். இவர்களைப் போன்று இன்னுமெத்தனையோ இளைஞர்கள், தமிழிலக்கிய வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட கலைஞர்கள் நூற்றுக்கணக்கான சிறுகதைப் படைப்புக் களைத் தந்து கொண்டிருக்கின்றனர்.

இலங்கையிலும் தமிழிலே சிறுகதையிலக்கியம் வளர்ச்சியடைந்து வருவதை நாம் காண முடிகின்றது. பல சிறந்த, எவ்விதத்திலும் ஏனைய நாட்டு எழுத்தாளர்களை விடப் பின் தங்கி நிற்காத சிறுகதையாசிரியர்கள் இன்று எம்மிடையே இருப்பதையிட்டுப் பெருமைப்படக்கூடிய நிலையிலுள்ளோம். காவலூர் ராசதுரை, பித்தன் கே.எம்.ஷா, செ. கணேசலிங்கன், அ.ஸ. அப்துல் ஸமது, ஈழத்துச் சோமு, உதயணன், டானியல், இலங்கையர்க்கோன், வரதர், எச்.எம்.பி. மொஹிடீன், முத்துலிங்கம், யூ.எல். தாவூத், எஸ். பொன்னுத்துரை, கனக செந்திநாதன், சொக்கன், வீ.எம்.எம். இஸ்மாயில், அ.ந. கந்தசாமி, எம்.எம். மக்கீன், டொமினிக் ஜீவா, ரகுநாதன் போன்றோரினால் சிறுகதை ஈழத்திலும் வளர்ச்சியடைந்து தமிழ்மொழியின் பரந்த வளர்ச்சிக்குச் சேவை செய்கின்றது.

இவ்வண்ணம் சிறுகதையிலக்கியம் தமிழிலே வளர்ச்சியடைவதை அவதானிக்கும் பொழுது, அது மென்மேலும் வளர்ச்சியடைந்து அதிகம் சிறப்படைவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. சிறுகதைகள் எனும் இவ்விலக்கியப் படைப்புக்கள் காலத்தால் அழியாமல் சங்கப் பாடல்களைப் போல் அல்லது கம்பராமாயணத்தைப் போல் அல்லது கலிங்கத்துப் பரணியைப் போல் நிலைத்து நின்று ஒரு தனிப்பட்ட காலச் சமுதாயத்தைக் காட்டக்கூடிய தன்மையைப் பெற்றுச் சிறப்புற்று விளங்க வேண்டுமென்பதே எனது அவா.

PALLADIUM

**ஜனநாயக சோஷலிஸ சங்கம்,**
**இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை, 1960**
**பக்: 79–83.**

# 3.
# ஐம்பதுகளில் சிறுகதை

எழுத்தாளன் யார்? அதிலும் சிறுகதை எழுத்தாளன் யார்? முதலும் முடிவும் தெரிந்து கொள்ள முடியாத இந்த வாழ்க்கையின் சின்னஞ்சிறு காட்சியோ, மின்னல் போன்ற நிகழ்ச்சியோ, மெல்லிய அசைவோ, நீர்க்குமிழியின் வட்டமோ - இப்படி ஏதாவது ஒரு அணுவின் சலனமே சிறுகதை. அமைதியும் அடக்கமுமற்ற, ஆரவாரமும் அவசரமும் நிறைந்த இன்றைய உலகில் ஆறுதலாக வீற்றிருந்து ஒரு நீண்ட நாவலைப் படித்து முடிக்கக்கூடிய அவகாசமும் நேரமும் பல பேருக்குக் கிடைப்பதில்லை. குறுகிய நேரத்தில் வாசித்து முடிக்கக் கூடிய சிறுகதை அதனால் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நடைச் சித்திரமாகவோ, நிகழ்ச்சி வர்ணனை யாகவோ, பாத்திர வர்ணனையாகவோ அல்லது விசித்திரக் கற்பனையாகவோ பல்வேறு ரூபம் பெற்றுச் சிறுகதை தோன்றலாம். எப்படியாயினும் எந்த இலக்கிய சிருஷ்டியைச் சிறுகதை எனும் வேலிக்குள் பொதுவாய் நாம் அடைக்க முடிகின்றதோ, அதன் கர்த்தாவைச் சிறுகதை எழுத்தாளன் என்று கூறலாம். எஸ்ரா பவுண்டு கூறுவது போன்று "அந்த எழுத்தாளன் சமுதாயத்தின் ஸ்பரிசக் கொம்பு" (*The Writer is an antennal of the race*). தன் சமுதாயத்தை, தான் வாழும் பிராந்திய மண்ணின் மணத்தை, தன் மக்களின் வாழ்க்கையை அவன் எடுத்துக் காட்டுகிறான். அந்த மட்டில் அவன் சமுதாய சேவை செய்யும் ஒரு தொண்டன்.

இந்த நோக்கில் இருபதாம் நூற்றாண்டின் மத்திய காலத் தமிழ்ச் சிறுகதையுலகைப் பார்க்குமிடத்து நூற்றுக்

கணக்கான எழுத்தாளர் எம் பார்வையுள் தென்படுவர். அவர்கள் எல்லோரைப் பற்றியும் ஒவ்வொருவராகக் கூறத் தொடங்கினால் அது வெறும் நாமாவலியாகி விடும். தனித்து ஒருவரையோ அல்லது இரண்டு மூன்று பேர்களையோ பற்றி எழுதத் தொடங்கினால் அது அவர்களைப் பற்றிய விமர்சன மாகி விடும். இந்த இரு எல்லைகளுக்குமிடையே நின்று, இன்று சிறந்த சிறுகதை எழுத்தாளர் எனக் கொள்ளப் படுகின்ற சிலரை அவர்களது ஆக்க சிருஷ்டிகளின் அடிப் படையில் வைத்துத் தொட்டுத் தடவிப் பார்த்து, அவர்களது ஆக்கத் திறனையும், சிறுகதைகளின் போக்கையும் ஒருவாறு கணிக்க முடியும்.

வ.வே.சு.ஐயரின் "குளத்தங்கரை அரசமரம், மங்கை யர்க்கரசியின் காதல்" முதலியவற்றுடன் தமிழில் ஆரம்பித்த தாகக் கருதப்படும் சிறுகதை நல்ல வளர்ச்சி அடைந்து இன்று ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதைக் காணலாம். கலைமகள், ஆனந்த விகடன் போன்றவை இலக்கண வரம்பிற்குட்பட்ட சிறுகதைகளையே பிரசுரித் தன. ஆனால் சிறுகதைத் துறையில் பல துணிகரப் பரீட்சைகளை நடத்தி அதற்கு உயிரும் உணர்வும் கொடுத் தவர் மணிக்கொடி பரம்பரையினரே. புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், மௌனி, ந. பிச்சமூர்த்தி, லா.ச. ராமாமிருதம், கு. அழகிரிசாமி ஆகியோர் கையாண்ட நடை மறுமலர்ச்சியின் பலம் பூராவும் பெற்றது. இவர்களுள் இறந்தோர் சிலர்; இன்னுமிருப்போர் சிலர். மணிக் கொடி குழாத்தினரிலும் விசேஷமாகச் சிறுகதைத் தொண்டு செய்தவர் சொக்கலிங்கம் பிள்ளையின் குமாரனும்

விருத்தாசலம் எனும் பெயரையுமுடைய புதுமைப்பித்தன் ஆவார். நந்தி, சுக்கிரச்சாரி, கூத்தன், வேரூர் வெ. கந்தசாமிக் கவிராயர், ரசமட்டம் முதலிய புனை பெயர்களுள் புகுந்து பல சிறுகதைப் பரீட்சைகள் நடத்தி வெற்றியும் கண்டவர் தமிழ்ச் சிறுகதையின் சம்ராட் புதுமைப்பித்தன். அவரது சிருஷ்டிகளான "பொன்னகரம்", "கடவுளும் கந்த சாமிப்பிள்ளையும்" ஆகியனவெல்லாம் தலை சிறந்தன வாகக் கொள்ளப்படுகின்றன. "நாசகாரக் கும்பல்", "துன்பக் கேணி" முதலிய படைப்புக்களில் இலங்கைச் சூழ்நிலையை ஆதாரமாகக் கொண்டு அதைப் பகைப் புலமாக வைத்து எழுதியுள்ளார். இன்றைய எழுத்தாளரைப் பற்றிக் கூறும் பொழுது புதுமைப்பித்தனைப் பற்றிக் கூற வேண்டிய அவசிய மேற்படுகின்றது. ஏனெனில் சிறுகதைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து அதன் உருவத்தில், குணத் தில், அமைப்பில் மாற்றமேற்படுத்தி, அதன் வளர்ச்சியில் விடிவெள்ளியாகத் திகழ்ந்த புதுமைப்பித்தனைத் தமிழ் இலக்கிய உலகம் என்றும் மறக்க முடியாது.

நாவலாசிரியர்களாகத் திகழும் பலர் சிறுகதைத் துறையிலும் சிறப்புற்று விளங்குகின்றனர். அவர்களிற் பலர் தரமான பல சிறுகதைகளை எழுதியுள்ளனர். ராஜம் கிருஷ்ணன், நா. பார்த்தசாரதி, ஜெகசிற்பியன், அகிலன், தி ஜானகிராமன், கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி, மு. வரதராசன் போன்ற நாவலாசிரியர்கள் பலர் சிறுகதைகளைச் சிருஷ்டிப் பதிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தி வருகின்றனர். ராஜம் கிருஷ்ணனின் மருந்தும் உண்டோ, யாரை நம்பலாம், தந்தி வந்தது; நா. பார்த்தசாரதியின் "பச்சைக் குழந்தைகள்"

தி. ஜானகிராமனின் "ஆரத்தி" முதலியவை அவர்களது படைப்புக்களிற் சில.

நீண்டகால எழுத்தாளர்களுள் இன்றும் பல சிறுகதை களைத் தந்து கொண்டிருக்கும் விரல் விட்டெண்ணக்கூடிய ஒரு சிலருள் முக்கியமானவர் பி.எஸ். ராமையா. தமிழ்ச் சிறுகதைத்துறையில் மாற்றங்களேற்பட்ட பரீட்சைக் காலந் தொடக்கம் சிறுகதைகளை எழுதிக் கொண்டிருப்பவர் அவர். தலைசிறந்த நாடகாசிரியராகத் தன் ஸ்தானத்தை வலிவுற நிலைநிறுத்திக் கொண்டு, "தேரோட்டி மகன்" போன்ற வற்றைச் சிருஷ்டித்துத் தன் நாடகசிரியர் பதவியை நன்கு நிலை நிறுத்தியுள்ள அவர், சிறுகதைகள் எழுதுவதிலும் சிறந்தவராகக் கொள்ளப்படுகிறார். "பின் தொடர்ந்தவன், காஷியர் குழந்தைவேலு, குறையும் கூறையும்" முதலியன அவரது சிறுகதைகளே.

நாடகாசிரியாராய்த் தன் ஸ்தானத்தை நிலைநிறுத்திக் கொண்டு, நல்ல பல ஹாஸ்ய நாடகங்களைத் தரும் அதே சமயத்தில், சிறுகதைத் துறையிலும் தன் சாமர்த்தியத்தைக் காட்டும் இன்னொரு எழுத்தாளர் கோமதி ஸ்வாமிநாதன். ஏதாவது ஒரு சிறு விடயத்தை வைத்துக் கொண்டு கதையை நீட்டி வளர்த்துக் கொண்டு போய் கடைசியில் விடயத்தை அவிழ்த்துவிட்டு வாசகர்களைச் சிரிப்பில் ஆழ்த்துபவர் அவர். பல ஹாஸ்ய நாடகங்களைத் தந்துள்ள அவர் "இரண்டு கைதிகள், நல்ல நாடகம்" போன்ற பல சிறு கதைகளையும் தந்துள்ளார்.

ஹாஸ்யத்தைப் பற்றிக் கூறும் பொழுது தாமரை மணாளனும் நினைவுக்கு வருவார். அவர் எழுதிய "அல்வா

விடுதூது" சாதாரண ஒரு மனிதன் வாசிக்கும் பொழுது அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கக் கூடியது. கந்தோரில் வேலை செய்யும் ஊழியர், முதலாளியின் கோபத்தைத் தணிக்க அவருக்கு அல்வா அனுப்ப முயற்சித்துக் கடைசி யில் வைத்தியனுடைய லேகியத்தை அனுப்பிவிட்டு படும் அவதி நன்கு சித்தரிக்கப்படுவதோடு, கதையைச் சொல்லும் முறையும் நன்று எனக் கருதப்படுகின்றது. "இங்கே வா, அசடு" முதலியனவும் அவர் சிருஷ்டிகளே.

நீண்டகாலமாகச் சிறுகதை எழுதும் இன்னொரு எழுத்தளார் கி. வா. ஜகந்நாதன். அனேக சிறுகதைகளைத் தமிழிலக்கிய உலகுக்கு அர்ப்பணம் செய்துள்ள கி.வா.ஜ. பல சிறந்த சிறுகதைகளை எழுதியுள்ளார். உள்ளத்தைத் தொட்டு, உணர்ச்சிகளை எழுப்பக் கூடிய, "வேப்பமரம்" அவரது திறனுக்கோர் எடுத்துக்காட்டு.

அநேக கதைகளை எழுதியுள்ள பிறிதொருவர் ராஜாஜி. இராமாயணத்தையும் மகா பாரதத்தையும், சக்கரவர்த்தித் திருமகனாகவும் வியாசர் விருந்தாகவும் தந்து தமிழுக்கு அளப்பரிய சேவை செய்த ராஜாஜியின் சிறுகதைகளில், பழமையைப் போற்றும் பண்பு மிகுந்து காணப்படுவதாக இலக்கிய விமர்சகர்கள் கருதுகின்றனர்.

பழமையில் ஊறித் திளைத்த அவரது படைப்புகளிலும் பழைய சமூக அமைப்புக்களையும் கொள்கை கோட்பாடு களையும் வலியுறுத்திக் கூறும் தன்மை தென்படுவதாகப் பலர் கருதுகின்றனர். "கர்நாடக விஜயம்" முதலிய பல கதைகளை எழுதியுள்ள அவர் இன்று அடிக்கடி பல சிறு கதைகளை எழுதிக் கொண்டிருக்கிறார்.

இவர்களோடு ஸ்ரீப்ரியா (ஏ ரிக்ஷா, யானோ கணவன்), எஸ். ரங்கநாயகி (அப்பா, கானல் நீர், பட்டணம் பார்), கு. அழகிரிசாமி (நல்லவன், இர்ண்டு கணக்குகள்), வடுவூர் நாராயணன் (வாழ்வு தந்த கடிதம்), வாசவன் (ஒரே ஒரு பொய்) போன்று இன்னும் எத்தனையோ பேர் த்மிழ்ச் சிறுகதை வானில் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றனர்.

இன்றைய எழுத்தாளர்களுள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய முக்கியமானவர்களில் ஒருவர் பிலஹரி. அவரது "பெண் எனும் தெய்வம்" பெண்ணுள்ளத்தைச் சிறப்புறப் பிரதி பலித்துக் காட்டுவதோடு அவரது ஆக்கத்திறனுக்கும் ஒரு உரைகல்லாக விளங்குகின்றது. ஏழை வாத்தியார் நாராயணனின் மகள் அகிலாவுக்குக் கல்யாணம். மாப்பிளை ஹோட்டலொன்றில் வேலை செய்யும் கல்வியறிவற்ற ஒரு வாலிபன். அவனைப் பற்றிக் குறை கூறாதார் வீட்டில் ஒருவருமில்லை. எல்லாவற்றையும் கேட்டுச் சகித்துக் கொண்டிருக்கிறாள், அகிலா. ஆனால் அவன் தொட்டுத் தாலிகட்டித் தனக்கு அவனது மனைவி என்னும் பட்டத்தைத் தந்த பின் அகிலா அறைக்கு வெளியே வருகிறாள். அப்பாதான் கண்ணில் தென்படுகிறார். "அப்பா" எனக் கூப்பிட்டதும் "என்னம்மா' எனக் கேட்கிறார் வாத்தியார். "இது வரையில் அவரைப் பற்றி எவ்வளவோ பேசியாச்சி. இனிமேல் என்னெதிர என் காதுபட ஒண்ணும்...." முடிக் காமலேயே உள்ளே போய்விட்டாள் அகிலா. இதுதான் கதை. உள்ளத்தைத் தொடும் முறையில் கதையை நடத்திச் சென்று பெண்மைக்கு வரைவிலக்கணம் வகுக்கும் பிலஹரியின் இச்சிறுகதை அவரது திறமையை எடுத்துக் காட்டுகின்றது.

"குறை கண்ட நெஞ்சம், பிறந்த மண், முள், ஒருத்தி மகனாய்ப் பிறந்து" முதலியனவும் அவரது சிருஷ்டிகளே.

குழந்தை உள்ளத்தைப் பிரதிபலித்துக் காட்டும் சில சிறுகதைகள் தமிழில் தோன்றியுள்ளன. ரஸவாதியின் "வேறு என்ன செய்ய" குழந்தை உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டும் ஒரு சிறுகதை. ஆஸ்பத்திரியில் நோயாளியாகப் படுத்திருக்கும் தாத்தா முறைக்காரரைப் போய்ப் பார்க்கச் சிறுவனுக்கு விருப்பமில்லை. ஆனால் அவன் விபத்தொன்றில் அகப்பட்டு ஆஸ்பத்திரியில் தாத்தாவுக்கு அடுத்த கட்டிலுக்கே போய்ச் சேருகிறான். எப்படியிருக்கும் அவன் நிலை? இதை நன்கு சித்தரிக்கிறார் ரஸவாதி. சரித்திர சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு சில சிறுகதைகளை எழுதியுள்ளவர் கௌசிகன். "கல்சுவர்", "சோகத்திரை" முதலிய அவரது சிறுகதைகள் சரித்திர ரீதியில் எழுதப்பட்டவை.

சிறுகதைத் துறையிலே புதுப்புது முயற்சிகளைச் செய்து நவீன யுத்திகள் பலவற்றைப் புகுத்தி, சிறுகதைக்கு உயிரும் ஊட்டமும் அளித்து அதை வெவ்வேறு சிறப்பான பாதைகளிற் திருப்பிவிடும் ஒரு குழாத்தினரையும் இன்று நாம் காண முடிகின்றது. ஜெயகாந்தன், வல்லிக்கண்ணன், சுந்தர ராமசாமி, ரகுநாதன், விஜய பாஸ்கரன், விந்தன் போன்ற இன்னும் பலர் இவ்விதம் புதுப்புது வகையான சிறுகதைகள் எழுதும் ஆற்றலைப் பெற்றுள்ளனர். அவர்கள் முயற்சி பாராட்டுதற்குரியது. சுந்தர ராமசாமியின் "ஒன்றும் புரியவில்லை" அவரது படைப்புக்களில் ஒன்று.

ஜெயகாந்தனது "உறங்குவது போலும்" விசித்திரக் கற்பனையிலுதித்த சிறுகதை. அவரது கற்பனைத் திறனையும் எழுத்து ஆற்றலையும் புலப்படுத்தக் கூடியது இது எனக் கருதப்படுகின்றது. செத்துச் சுடுகாட்டில் கொண்டு போய்ப் போடப்பட்ட ஒருவன் உயிர் பெற்று ஊருக்குள் வருகிறான். இதுதான் கதையின் அடிப்படை. "அந்தப் பேருறக்கத்திலிருந்து அவன் விழித்தான்... நாலுபேர் தோள் மீது சுடுகாட்டுக்குச் சென்ற பிணம் உயிர் பெற்று உருமாறி சிகை எரிந்து முகம் கரிந்து புண்பட்டுத் தீய்ந்த மேனியுடன், தீக்கிரையாகி மீந்த கோடித்துணியால் உடலை மறைத்துக் கொண்டு அதோ தெருக்கோடியில் வந்து கொண்டிருக் கிறது..." அந்தப் பிணம்-சிவராமன்-எத்தனையோ எண்ணங் களை மனதிற் சுமந்து தன் வீட்டிற்குள் பிரவேசிக்கிறான். எவ்வளவு சந்தோசத்துடன் தன்னை வரவேற்பார்கள் என எண்ணிக்கொண்டு வருகிறான். ஆனால் கண்ட பலன்... வீறிட்டலறிக் கொண்டு ஆளுக்கொரு பக்கமாய்ப் பாய் கிறார்கள். "பேய் பேய்", என ஒரே கூக்குரல். கடைசியில் சிவராமன் தன் ஆசை அக்காவிடம் சென்று அக்கா நான்தான் உன் தம்பி என்கிறான். அக்கா கூறிய பதில் - "தம்பி செத்து விட்டான், நீ பேய்" பேயாட்டுபவன் அழைக்கப்படுகிறான். கடைசியில் சிவராமன் தானாகவே வீட்டைவிட்டு வெளியேறு கிறான். அவனைப்பின் தொடர்ந்து சென்றது அவனது அருமைநாய் சர்தார் மட்டுமே. இவ்விசித்திரச் சிறுகதையில் நாம் ஜெயகாந்தனின் உண்மை ஆக்கத் திறனைக் காண முடிகின்றது. அவரது சமீபத்திய சிறுகதைத் தொகுதி "இனிப்பும் கரிப்பும்".

இவ்வாறெல்லாம் சிறுகதைத் துறைமூலம் தமிழ்த் தொண்டு செய்யும் இவர்களது சேவையை மக்கள் முன் கொண்டு நிறுத்துவன பத்திரிகை, சஞ்சிகைகளே. இவைகளின் மூலம்தான் இவர்களது சிறுகதைகள் மக்கள்முன் வைக்கப்படுகின்றன. சமீப காலமாகச் சிறுகதைத் தொகுதிகளும் வெளிவருதல் கவனத்திற்குரியது. ஆனால் சிறுகதையின் முழுமையை நாம் இன்று கணித்தல் சிறிது கஷ்டம்தான். ஏனெனில் இன்றைய எழுத்தாளர்களில் ஏறக்குறைய எல்லோருமே இன்று உயிரோடு வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். அதிலும் பலர் இளம் வாலிபர்கள். இவர்கள் இன்னும் எழுதிக் கொண்டேயிருப்பார்கள். இன்னும் பல சிறந்த சிறுகதையாசிரியர்களும் தோன்றக் கூடும். ஆகையினால் சிறுகதைத் துறை வளர்ந்து செல்லக் கூடிய பாதை நீண்டு கிடக்கின்றது. அதில் சிறிது தூரந்தான் நாம் வந்துள்ளோம். இன்னும் செல்லவேண்டிய தூரம் எவ்வளவோ உள்ளது. அவற்றைப் பற்றியெல்லாம் இன்று கூறுவது சிறிது கஷ்டமான காரியமே. எதிர்காலமே சிறுகதையின் உண்மை நிலையை, தமிழிலக்கிய உலகில் அதன் ஸ்தானத்தை எடைபோட்டு நிலை நிறுத்தும்.

இளங்கதிர் – தமிழ்ச் சங்கம்,
இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை, 1961–62.
பக்: 112–117.

# 4.

# முஸ்லிம் உயர் கல்வி

இலங்கை முஸ்லிம்களின் இன்றையக் கல்வி நிலை யென்ன? (1965). அல்லாஹ்வின் வேத வாக்கான திருக்குர்ஆனையும் அவனது தூதரான முஹம்மது நபியின் (ஸல்) ஹதீஸ்தனையும் ஒன்றுவிடாது வாழ்க்கையிற் கடைப்பிடித்து நன்னெறியில் நடந்து வருவதாகக் கூறிக் கொள்ளும் நாம் கல்வி விடயத்திலும் முஹம்மது நபியின் (ஸல்) சொற்களைக் கடைப்பிடித்துள்ளோமா?

“சீனா தேசம் சென்றாயினும் சீர் கல்வி தேடு” எனக் கூறினார்கள் முஹம்மது நபி (ஸல்). இதன் பூரணத் துவமும், முக்கியத்துவமும் இலங்கையில் வாழும் எம்மை விட, சீனாவுக்கு வெகு தூரத்திற்கு அப்பாலுள்ள மத்திய கிழக்கு மக்களுக்கு மிக நன்கு புலப்படும். அதிலும் இவ் வாக்கியம் கூறப்பட்டது, இன்று நேற்றல்ல. இற்றைக்குச் சுமார் ஆயிரத்தி நானூறு ஆண்டுகளுக்கு முன் என்பதை நினைத்துப் பார்த்தால் இதன் பரிபூரணத்துவம் இன்னும் தெளிவாகப் புலப்படும். ஓரிடத்திலிருந்து சமீபத்திலுள்ள இன்னோர் இடத்திற்குச் செல்வதற்கே பலவித இன்னல்களை அனுபவித்துப் பல நாட்கள் பிரயாணம் செய்யவேண்டிய - அப்படிப்பட்ட ஒரு காலத்திலே, கடல் கடந்து, தரை நடந்து, மிக மிகத் தூரத்திலுள்ள ஒரு தேசத்திற்குச் சென்றாவது கல்வியறிவு பெறு எனக் கூறும்பொழுது முஹம்மது நபி (ஸல்) கல்விக் களித்திருக்கும் முக்கியத்துவம் நன்கு தெளிவாகுகின்றது. இவ்வாறு மக்களுக்கு அறிவுறுத்தப் பட்டது கி.பி. ஏழாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் ஆகும்.

நவீன வசதிகளுள்ள 20 ஆம் நூற்றாண்டில் வாழும் நாம் நாயகம் (ஸல்) கூறிச் சென்றுள்ளதை நடைமுறையில் செய்துகாட்டி, எமக்கும் எம் சமுதாயத்திற்கும் பெருமை தேடிக் கொடுத்திருக்கின்றோமா? ஒவ்வொரு முஸ்லிம் சிறாரும் அரபி மொழியைக் கற்று, திருக்குர்ஆனை அதன் மூலமொழியிலேயே படித்துத் தெளிவாக விளங்கிக் கொள் வது சிறப்புத்தான். கட்டாயம் செயல்பட வேண்டியதுமாகும். ஆனால், இன்றைய நவீன உலகத் தேவைகளைக் கொண்டு நோக்குமிடத்து, அது மட்டும் பூரணக் கல்வியாக முடியாது. அவ்வாறு அரபி மொழியை மட்டும் கற்பதே கல்வியாக விருந்தால் அரபு மொழி பேசும் தேசத்திலிருந்து வேற்று மொழி பேசும் தூர தேசமான சீனாவுக்குச் சென்று கல்வி கற்குமாறு முஹம்மது நபி (ஸல்) கூறியிருக்க மாட்டார் களே! ஆகவே, காலத்துக்கேற்ற முறையில் ஒரு சமுதாயம் தாம் வாழும் நாடு, காலம், சமூக அமைப்பு முதலியவற்றின் அடிப்படையில் வேறுபட்ட பல துறைகளில் பாண்டித்தியம் பெற்றிருப்பதோடு, பல தலை சிறந்த கல்விமான்களையும் உற்பத்தி செய்தாற்றான் அச்சமுதாயம் அறிவுத்துறையில் முன்னேறியிருக்கிறதெனக் கூறமுடியும்.

ஏனைய சமூகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் கல்வித்துறையில் மிகப் பின் தங்கித் தேக்கமடைந்தவொரு நிலையில் சமீப காலம் வரையும் ஸ்தம்பித்தே நின்றனர். அந்நிலையில் ஓரளவு மாற்றமேற்பட்டு முஸ்லிம் மக்கள் சில வருடங்களாகக் கல்வித் துறையில் நாட்டம் செலுத்தி வருகின்ற பொழுதிலும் அப்பின்தங்கிய நிலையில் புரட்சிகரமான மாற்றங்கள்

இன்னும் ஏற்படவில்லை. அதே பிற்போக்கான நிலை இன்றும் ஓரளவு நிலவியே வருகின்றது. உயர்கல்வி பயின்று அரசாங்க உத்தியோகங்களிலும், தொழில் நிறுவனங்களிலும் ஆயிரக்கணக்கான சிங்களவரும், தமிழரும் உயர் உத்தியோகம் வகிக்க, அவ்வித அந்தஸ்திலுள்ள முஸ்லிம்களை விரல்விட்டே எண்ணி விடலாம். உயர் கல்வியைப் பொறுத்த வரை முஸ்லிம் மக்களிடையே புரட்சிகர முன்னேற்றம் இன்னும் ஏற்படவில்லை யென்பதையே இது பிரதிபலிக்கின்றது.

பொதுவான ரீதியில் முஸ்லிம் சமுதாயத்தை நோக்கும் பொழுது கடந்த சில வருடங்களாக அது கல்வித் துறையில் ஓரளவு முன்னேறி வருவதைக் காண முடிகின்றது. ஆனால், இம்முன்னேற்றம் ஒரு குறிப்பிட்ட எல்லையை அடைந்தவுடன் முடிவடைந்து விடுகின்றது. இச்சடுதியான முறிவிற்குக் காரணங்கள் பலவிருக்கலாம். ஆனால் அடித்தளத்தில் ஆரம்பமாகும் கல்வி, தொடர்ந்து சென்று உயர் கல்விப் பாதையில் செல்லாமல், எங்கோ நடுவழியில் நின்று விடுகின்றது. இன்று பாடசாலைக்குச் செல்லும் முஸ்லிம் சிறார்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளது. முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கையும் தரமும் உயர்ந்துள்ளன. வருடாவருடம் பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று ஆசிரிய கலாசாலைகளை விட்டு வெளியேறி வருகின்றனர். முஸ்லிம் பெண்களிடையேயும் இந்த முன்னேற்றம் காணப்படுகின்றது.

ஆனால், இந்த வளர்ச்சி சிரேஷ்ட தராதரத்துடனோ, ஆசிரியப் பயிற்சியுடனோ முடிவடையாமல் மேலே தொடர்ந்து உயர் கல்வியிலும் காணப்படுகின்றதா என்பதே பிரச்சினை. உயர் கல்வியெனும் பொழுது முக்கியமாகப் பல்கலைக்கழக கலை, விஞ்ஞான, பொறியியல், மருத்துவ, சட்டக் கல்வித்துறைகளையும் அவற்றோடு சம்பந்தப்பட்ட வேறு சில துறைகளையுமே குறிப்பிடுகிறோம்.

இத்துறைகளில் முஸ்லிம் சமுதாயம் போதிய முன்னேற்றம் அடைந்துள்ளதா எனும் பிரச்சினையை ஆராயும் பொழுது, சடுதியான ஆதாரமற்ற ஒரு முடிவிற்கு வருவதை விட, அவற்றோடு சம்பந்தப்பட்ட பல புள்ளி விபரங்களையும் ஆராய்ந்து அதன் பின்னர் இறுதியானதொரு முடிவிற்கு வருவதே சிறப்பு.

பேராதனைப் பல்கலைக்கழகத்தைப் பொறுத்தவரை கீழ்க்காணும் புள்ளி விவரங்களை நாம் பெறக்கூடியதாக விருக்கின்றது. 1961ஆம் ஆண்டு பல்கலைக் கழகத்திற் கல்வி கற்ற மாணவர்களில் எத்தனை பேர் எச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பல்கலைக் கழகக் கவுன்சிலின் இருபதாவது வருடாந்த அறிக்கை தெளிவாகக் காட்டுகின்றது.

(கடைசியாகக் கிடைக்கும் உத்தியோகபூர்வமான புள்ளி விபரங்கள் இவைதான் என்பதனாலேயே 1961ஆம் ஆண்டு கணக்கில் எடுக்கப்படுகின்றது.)

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| சிங்களவர் | 1233 | 972 | 2205 |
| தமிழர் | 185 | 181 | 366 |
| முஸ்லிம் | 29 | 8 | 37 |
| பறங்கியர் | 11 | 7 | 18 |
| ஏனையோர் | 4 | 6 | 10 |
| மொத்தம் | 1462 | 1174 | 2636 |

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஏனைய சமூகங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது முஸ்லிம் மாணவர்கள் எவ்வளவு குறைவாயுள்ளனர் என்பதை இப் புள்ளி விபரங்கள் வெளிபடுத்துகின்றன. 2205 சிங்கள மாணவரும், 366 தமிழ் மாணவரும் கல்வி கற்கும் அதே சமயத்தில் ஒரு சிறு தொகையினரான 37 முஸ்லிம் மாணவரே உள்ளனர். எனவே பேராதனைப் பல்கலைக் கழக மாணவ சமுதாயத்தில் முஸ்லிம் மாணவர் சுமார் 1.4 சதவிகிதமாகும்.

பேராதனையிலேதான் நிலை இவ்வளவு பரிதாப கரமானதென்றால் இலங்கைப் பல்கலைக் கழகத்தை முழுமையாகப் பார்க்கும்பொழுது பேராதனையிலுள்ள கலை, விஞ்ஞானம், மருத்துவம், விவசாயம் போன்ற ஏனைய எல்லாவற்றையும் அவற்றுடன் கொழும்பிலுள்ள விஞ்ஞானம், பொறியியல், மருத்துவம் முதலிய துறைகளையும் ஒன்று சேர்த்து நோக்கும் பொழுது நிலைமை திருப்தியளிப்ப

தாயிருந்தால், ஒரு தனிப்பட்டதுறையில் அல்லது இடத்தில் முஸ்லிம்கள் தங்கள் உயர் கல்வியில் முன்னேறாது பின் தங்கி நிற்பினும், வேறொரு துறையில் துரித முன்னேற்ற மடைந்துள்ளனர் என்று சந்தோசப்படலாம். ஆனால் எல்லா வற்றையும் ஒன்று சேர்த்து இலங்கைப் பல்கலைக் கழகத்தை முழுமையான ஒரே நோக்கில் பார்க்கும்பொழுது தென்படும் நிலை என்ன? அதைப் பற்றியும் புள்ளி விபரங்களைப் பெறக் கூடியதாயிருக்கிறது. முஸ்லிம்களின் நிலை பற்றி மேலும் விளக்கிட அவை உதவும்.

**முஸ்லிம்**

| | மொத்த மாணவர் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| பேராதனை கொழும்பு | 2636 | 29 | 8 | 37 |
| பௌதிக விஞ்ஞானம் என்ஜினியரிங் | 1012 | 21 | - | 21 |
| உயிரியல் விஞ்ஞானம் மருத்துவம் | 1007 | 25 | 1 | 26 |
| மொத்தம் | 4655 | 75 | 9 | 84 |

பல்கலைக் கழகத்தின் வெவ்வேறு பிரிவுகள் அனைத் தையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் பொழுது நிலைமை சிறிதும் திருப்தியளிப்பதாயில்லை. எல்லா இன, சமயங்

களையும் சேர்ந்த மாணவரின் மொத்தத் தொகை 4655. இதில் முஸ்லிம்கள் ஒரு சிறு தொகையினராகவே உள்ளனர். மொத்த முஸ்லிம் மாணவர் 84. இதில் ஆண்கள் 75, பெண்கள் 9. விகிதாசாரப்படி பார்க்கின் முஸ்லிம்கள் 1.8 சதவிகிதம் உள்ளனர்.

சமுதாய விகிதாசாரத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுதுதான் இந்த நிலையின் தாக்கம் மேலும் தெளிவாகப் புலப்படும். இலங்கை முஸ்லிம்களின் தொகை மொத்தச் சனத்தொகையில் 6.7 சதவிகிதம் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதை இப்போது சிறிது அதிகரித்து 7 சதவிகிதம் என நாம் கொண்டாலும் அதே அளவிற்குப் பல்கலைக் கழகத்தில் முஸ்லிம்கள் உள்ளனரா? அந்த அளவிற்கு மிக மிகக் கீழே 2 சதவிகிதத்திற்கும் குறைவாகவே பல்கலைக் கழகத்தில் முஸ்லிம் மாணவர்கள் உள்ளனர். ஏனைய சமூகத்தினரை விட நாம் கல்வித்துறையில் எந்த வகையிலும் பின் தங்கியவர்கள் அல்ல எனக் கூற வேண்டுமாயின் இன்று பல்கலைக்கழகத்தில் சனத்தொகை விகிதாசாரப்படி பார்த்தால் குறைந்தது 300 முஸ்லிம்களாயினும் கல்வி பயில வேண்டும். ஆனால் இன்றிருப்பது மொத்தம் 84. இதில் இருந்தே முஸ்லிம் சமுதாயத்தின் கல்வி வளர்ச்சியின் குறைபாடு தெளிவாகின்றது.

எனவே பல்கலைக்கழகத்தில் 84 முஸ்லிம் மாணவரே யுள்ளனர்; முன்னர் இதை விடக் குறைவாகவிருந்து இப்போது அதிகரித்துக் கொண்டு வருகின்றனர். இனி மேலும் அதிகரிக்கும் எனச் சிலவேளை காரணங் கூறலாம். ஆனால் ஏனைய மாணவர் தொகை அதிகரிப்பதோடு இந்த

முன்னேற்றத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, அங்கும் நிலைமை மோசமாகவேயுள்ளது. மொத்த மாணவர் தொகை ஆயிரக்கணக்கில் அதிகரித்துக் கொண்டு வர, முஸ்லிம் மாணவர் தொகை ஒன்றிரண்டு எண்களாலேயே கூடிக் கொண்டு வருகின்றது.

| | மொத்த மாணவர் | முஸ்லிம் | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| 51 | | 55 | 51 | 4 |
| 57 | 2178 | 54 | 44 | 10 |
| 58 | 2950 | 72 | 62 | 10 |
| 59 | 3181 | 66 | 58 | 8 |
| 60 | 3684 | 67 | 59 | 8 |
| 61 | 4655 | 84 | 75 | 9 |

பெருமளவில் மொத்த மாணவர் தொகை வருடா வருடம் பெருகிக் கொண்டு வரும்பொழுது, முஸ்லிம் மாணவர் தொகை அதற்கொப்ப அதிகரிக்கவில்லையென் பதை இப்புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

உயர்கல்வி பெறும் முஸ்லிம் பெண்களைப் பொறுத் தவரை ஒருவித ஸ்தம்பித நிலையே காணப்படுகின்றது. இலங்கைப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் இற்றைவரையும் ஒரு வருடத்திலேனும் அவர்களது எண்ணிக்கை பத்துக்கு மேல் அதிகரிக்கவில்லை.

இவ்வித பரிதாபத்துக்குரிய நிலை மாறி, முஸ்லிம் சமுதாயம் கல்வித்துறையில் முன்னேறி ஏனைய சமுதாயங்களுடன் எண்ணிக்கையிலும் திறமையிலும் ஒப்பிடப்பட வேண்டுமாயின், நாம் அத்துறையில் துரித முன்னேற்றமடைந்தால் மட்டும் போதாது. வாயு வேகத்தில், இடைவிடாது முன்னேறினாற்றான், இன்னும் சில வருடங்களிலாவது ஏனைய சமுதாயங்களிற்குப் பின்தங்கி நில்லாது அவர்களோடு சரிநிகர் சமானமாக முஸ்லிம் சமுதாயமும் தலை தூக்கி நிற்க முடியும்.

இவ்வாறான பிற்போக்கு நிலைக்கு அதிமுக்கிய காரணமாகக் கூறப்படுவது, முஸ்லிம்கள் வியாபாரத் துறையில் நாட்டத்தைச் செலுத்துவதினால், கல்வித்துறையில் நாட்டமின்மை என்பதே. பொதுவாகக் கூறப்படும் இக்கருத்து இலங்கை எங்கும் பரந்து கிடக்கும் முஸ்லிம் சமுதாயத்தைப் பொறுத்தவரை உண்மையாகவே காணப்படுகின்றது. பண்டைக் காலந்தொட்டே இலங்கை முஸ்லிம்கள் வர்த்தகர்களாகத் தொழில் புரிந்து வந்துள்ளனர். வாழ்க்கைக்குத் தேவையான வசதிகளையெல்லாம் வர்த்தகத்தின் மூலம் பெறக்கூடிய வாய்ப்பிருந்தமையினால், அவர்கள் கல்வியில் அதிக கவனம் செலுத்தவில்லை. சில வேளைகளில் பாடசாலைக்கு அனுப்பப்படும் சிறார்கள் சில வருடங்களுக்குள்ளேயே பாடசாலையை விட்டு விலக்கப்பட்டு வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனால் தொடர்ந்து கல்வி கற்று உயர் கல்வி பெறும் முஸ்லிம் மாணவரின் தொகை அருகியே காணப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை வேறு சில காரணங்களையும் காணமுடிகின்றது. இலங்கை முஸ்லிம் சனத்தொகையில் கணிசமான தொகையினர் ஒருங்கு வாழும் கிழக்கு மாகாணம், இலங்கையின் ஏனைய மாகாணங் களோடு ஒப்பிடப்படும் பொழுது உயர் கல்வியில் மிகமிகப் பின்தங்கியுள்ளது. பல்கலைக்கழகத்திற் கல்வி பயிலும் மொத்த மாணவர்களில் மேல் மாகாணத்தவர்கள் 2229 பேரும், தென் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 699 பேரும், வட மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 716 பேரும், மத்திய மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் 480 பேரும் இருக்கும் அதே சமயத்தில் இம் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 77 பேரேதான் உள்ளனர். இதில் ஆண்கள் 59, பெண்கள் 18. அதிலும் பெரும்பான்மையான முஸ்லிம்கள் கிழக்கு மாகா ணத்தில் வசித்த பொழுதிலும், இன்று பல்கலைக்கழக கல்வி பயிலும் கிழக்கு மாகாண முஸ்லிம் மாணவர் தொகை பத்திற்கும் குறைவாகவே உள்ளது. அதுவும் எல்லோரும் ஆண்களே. பெண்கள் எவ்ருமிலர்.

இந்நிலைக்குரிய காரணங்கள் பல. சிறார்களைப் பிந்திப் பாடசலையிற் சேர்த்தல் போன்ற சிறுசிறு காரணங்கள் பலவிருந்த போதிலும், பொருளாதார நிலையே முக்கிய மானதாகத் தோன்றுகிறது. கிழக்கு மாகாண முஸ்லிம்களுட் சிலர் வர்த்தகத்திலீடுபட்டிருந்த பொழுதிலும் பெரும்பாலா னோர் விவசாயத்திலும் மீன் பிடியிலுமே தங்கள் வாழ்க் கையை நம்பி நிற்பவர்கள். அவர்களது அன்றாட வருமானம் நாளாந்தச் செலவிற்கே போதுமானதாயிருப்பதால் சேமிப் பைப் பற்றிய பேச்சுக்கே இடமில்லாது போய் விடுவதோடு,

தங்கள் பிள்ளைகளுக்கு உயர் கல்வியளிப்பதில் இது பெரும் பிரச்சினைகளிரண்டை உருவாக்குவதினால் கல்வி வளர்ச்சி தடைப்படுகின்றது.

ஒன்று:- அவர்களது வறுமை நிலை. கல்வியளிப்பதில் ஏற்படும் சிறுசிறு செலவுகளையே சமாளிக்க முடியாது வறுமை நிலை பெருந்தடையாகவுள்ளது.

இரண்டு:- குடும்பத்தின் அன்றாடச் செலவுகளைச் சரிப்படுத்துவதற்கும், தங்கள் வேலைகளில் உதவி செய்வதற்கும் தங்கள் பிள்ளைகள் தேவைப்படுவதினாலும், பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதில் தகப்பனோடு வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஆண் மக்களுக்கு ஏற்படுகின்றது. பெண் மக்களைப் பொறுத்தவரை அவர் களைப் பாடசாலைக்கு அனுப்பாது விடுவது, ஏனைய காரணங்களோடு, அவர்களுக்குக் கல்வி புகட்டுதல் அவசிய மில்லை என்ற தவறான கொள்கையின் விளைவு ஆகவும் இருக்கலாம்.

தவறான கொள்கைகளைப் பொறுத்தவரையில் சிலர் அந்நாட்களில் செய்த தவறான பிரச்சாரம், மூட நம்பிக்கை களை மக்களிடையே வளர்த்துள்ளது. ஆங்கிலம் படிப்பது ஹறாம், காற்சட்டைபோடுவது ஹறாம், தலையைச் சிரைத்து மொட்டை அடிக்காமல் விடுவது ஹறாம்." என்றெல்லாம் அந்த நாட்களில் சிலர் பிரச்சாரம் செய்திருக்கின்றனர். அவ்வாறு கூறிப் பாமர மக்களை ஏமாற்றித் தவறான பாதையில் இட்டுச் சென்று, ஆங்கிலக் கல்வி மேல் அவர்களுக்கு வெறுப்பையுண்டாக்கி அதை ஒதுக்கித்

தள்ளுமளவிற்கு அவர்களது பிரச்சாரம் நடைபெற்றிருக்கின்றதென அந்நாட்களில் வாழ்ந்து இன்று வயோதிபராயிருக்கும் சிலர் மூலம் அறிய முடிகின்றது.

இன்றுங்கூட கிழக்கு மாகாணத்தின் கிராமப் பிரதேசங்களிலே இவ்வாறு வரட்டு வேதாந்தம் பேசி மக்களைத் தவறான வழியில் நடத்திச் சென்று அவர்களது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் ஓரிருவர் இல்லாமலில்லை. வீட்டில் ரேடியோவை வாங்கிவைத்து, அதில் தினசரி மாலை எட்டு மணி முதல் ஒன்பது மணிவரை நடைபெறும் இஸ்லாமிய நிகழ்ச்சியைத் தவிர வேறு எதையுமே, செய்தியறிக்கையைக் கூடக் கேட்கக்கூடாது எனக் கடும் கட்டுப்பாட்டிற்குள் தம் மனைவி மக்களை வைத்திருக்கும் சிலரை இன்றுங்கூடக் காண முடிகின்றது. அவர்களைப் பற்றி ஒன்று மட்டும் கூறலாம். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் உலகம் வாழும் பொழுது, அவர்கள் இன்னமும் அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறார்கள். எனினும் அவர்களது சொற்களுக்குச் செவி சாய்க்க இன்றைய முஸ்லிம் சமுதாயம் தயாராயில்லை. நல்வழியில் நடத்திச் செல்லும் எவரினதும் தலைமையை ஏற்றுக் கொள்ள முஸ்லிம் சமுதாயம் தயாராயுள்ளது. ஆனால் தங்கள் சொந்த நன்மைகளுக்காக மக்களைப் பொம்மலாட்டம் ஆட்டி அவர்களை அறியாமை இருளில் மூழ்கடித்துச் சமுதாய வளர்ச்சிக்குத் தடையாகவிருக்கும் ஒரு சிலரின் செய்கைகளைப் பார்த்து பொறுமையோடு சகித்திருக்க, முஸ்லிம் சமுதாயம் அவ்வளவு பிற்போக்கான நிலையிலில்லை. நிலைமையை அவர்கள் இன்று நன்குணர்ந்து விட்டார்கள்.

உயர் கல்வியில் அவர்கள் இன்னும் ஒரு நல்ல நிலையையடையாது விடினும், அவர்களிடையே இன்றேற் பட்டுள்ள விழிப்புணர்ச்சி, உணர்வு நிலை அவர்கள் நிலைமையைப் புரிந்து கொண்டார்கள் என்பதைக் கூறு கின்றன. இன்று பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகள் - ஆண்களும் பெண்களும் - இடையில் தங்கள் பள்ளிப்படிப்பை நிறுத்தவதில்லை. அவர்கள் பெற்றோர், நிறுத்த முயற்சிப்ப தில்லை. தங்கள் பிள்ளைகளை இயன்றளவு படிப்பித்தல் வேண்டும் என்ற ஒரு நல்லுணர்வு, ஓர் ஆர்வம் இன்றையக் கிழக்கு மாகாண, குறிப்பாக கிராமப்புற முஸ்லிம் பெற்றோரிடையே எழுச்சியுற்ற ஒரு பண்பாகப் பரந்து காணப்படுகின்றது. ஆனால் அவர்களது பிரதேசங்களைப் பொறுத்தவரையில் தரமுள்ள சிறந்த பாடசாலைகள் குறைவான போதிலும் நாளாவட்டத்தில் அந்நிலை மாறிவிடுமென அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். எல்லா வசதிகளும் பொருந்திய சிறந்த பாடசாலைகள் அபரிமிதமாகத் தங்கள் பிரதேசங்களிலும் தோன்றும். தங்கள் பிள்ளைகளும் உயர் கல்வி பெறுவர். அதனால் கல்வித் துறையில் தங்கள் சமுதாயமும் முன்னேறும் என ஒவ்வொரு தந்தையும் இன்று எதிர்பார்க்கிறான்.

முஸ்லிம் சமுதாயம் கல்வித் துறையில், குறிப்பாக உயர் கல்வித் துறையில் முன்னேற்றமடையாது பின்னிலை யிலுள்ளது. இவ்வாறான பல காரணங்களின் விளைவேயன்றி அவர்களின் அறிவாற்றல் வரட்சியோ அன்றி கல்வி கற்கக்கூடிய தகுதிக் குறைவின் விளைவோ அல்ல. கல்வி கற்றுப் பாண்டித்தியம் பெறக்கூடிய திறமை, தகமை, ஆற்றல் முதலியவற்றில் முஸ்லிம் சமுதாயம் எந்த வகை

யிலும் ஏனைய சமுதாயங்களை விடக் குறைந்ததல்ல. அவ்வாறிருந்தும் இவ்வளவு பின் தங்கிய நிலையில் அவர்கள் உள்ளதற்கான ஒரேயொரு காரணம் அவர்கள் அத்துறையில் முழு மூச்சாக ஈடுபட்டு ஏனைய சமூகத்தினரைப் போல் முயற்சி செய்யவில்லையென்பதே.

சமீபத்திற் கிடைத்த சில புள்ளி விபரங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. 1956ஆம் ஆண்டில் நடைபெற்ற பல்கலைக் கழகப் புகுமுகத் தேர்வில் வழங்கப்பட்ட மூன்று கலைப் புலமைப் பரிசில்களில் இரண்டை இரு முஸ்லிம் மாணவரே பெற்றுள்ளனர். 1961ஆம் ஆண்டு நடைபெற்ற பல்கலைக்கழக இறுதிப் பரீட்சையில் அளிக்கப்பட்ட இரு கலைப் புலமைப் பரிசில்களில் ஒன்றை ஒரு முஸ்லிம் மாணவரே பெற்றிருப்பதோடு, 1961ஆம் ஆண்டு நடந்த பல்கலைக்கழக முதற் பரீட்சையில் தமிழுக்குரிய பரிசையும் ஒரு முஸ்லிம் மாணவரே பெற்றிருக்கிறார். அப்பரீட்சைக்குத் தோன்றிய சுமார் எண் நூறு மாணவருள் ஆகக்கூடிய புள்ளி அடிப்படையில் இரண்டாமிடத்தைப் பெற்றவரும் ஒரு முஸ்லிம் மாணவரேயாவார். 1961ஆம் ஆண்டு நடந்த தமிழ்ப் பேச்சுப் போட்டியிலும் ஒரு முஸ்லிம் மாணவரே முதலிடத்தைப் பெற்றுள்ளார். 1961ஆம் ஆண்டு நடந்த சிவில் சேவைப் பரீட்சையில் ஒரு முஸ்லிமே முதல் ஸ்தானம் பெற்றதோடு, 1962ஆம் ஆண்டைய சிவில் சேவைப் பரீட்சையின் முதல் ஸ்தானமும் ஒரு முஸ்லிமுக்கே கிடைத்தது.

இவ்வித சம்பவங்களைக் கொண்டு நாம் ஒரு முடிவுக்கு வர முடிகின்றது. கல்வித் துறையில் முஸ்லிம்கள் ஏனைய

சமூகத்தினரைவிட முன்னேற்றத்தில் வெகு தூரத்திற்குப் பின்னால் நின்றாலும் அது அவர்களின் கல்வித்துறையின் மேல் நாட்டம் செலுத்தாத கவலையீனத்தாலே ஏற்பட்டதே யன்றி, வேறு தகமைக் குறைவினாலோ அல்லது ஆற்றல் வரட்சியினாலோ ஏற்பட்டதல்ல. அவர்கள் அத்துறையில் ஈடுபட்டு முயற்சி செய்யாததின் விளைவே இப்பின்னிலை. அவர்கள் முயற்சி செய்தால் திறமாகச் செய்யக் கூடிய சக்தி அச்சமுதாயத்திடமுண்டு என்பதை மேற்கூறிய சம்பவங்கள் நிரூபிக்கின்றன.

இனிமேலாவது, இத்துறையில் தீவிரமாக ஈடுபட்டு கல்வித்துறையில் முன்னேறி சமுதாயத்தின் அந்தஸ்தை உயர்த்தி அதன் மாசைத் துடைக்க வேண்டும் என்ற எழுச்சி மனப்பான்மை இன்று முஸ்லிம்களிடையே தோன்றியுள்ளது. ஆனால், அது மனவுணர்வாக மட்டும் நின்று விடாது, செயலிலும் வெளிப்பட்டாற்றான் உயர் கல்வியில் முஸ்லிம் சமுதாயம் உன்னத நிலையொன்றினை அடைய முடியும்.

மாணவ மஞ்சரி,
சாய்ந்தமருது மகா வித்தியாலய
மாணவர் மன்ற வெளியீடு,
கல்முனை – 1965.
பக்.50–58.

# 5.

# எமக்கொரு பல்கலைக்கழகம்

"வழமையைவிட அதிகம் திறந்ததாயிருப்பதற்காகப் பேராதனைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டதென எலிசபெத் மகாராணியாரும் எடின்பரோ கோமகனும் அப்பல்கலைக் கழகத்தைத் திறந்து வைத்தபொழுது திரை நீக்கஞ் செய்த படிகம் பிரகடனப்படுத்துகின்றது.

எல்லாத் துறைகளிலும் பரந்தவொரு அடிப்படையினை, விரிந்த மனப்பான்மையினை, பக்குவப்பட்ட சூழ்நிலையைப் பேராதனையிற் காண முடியுமெனினும், வருடா வருடம் பல்கிப் பெருகும் மாணவர் தொகையைச் சமாளிக்கக் கூடிய அளவு இடவசதி அங்கில்லை. ஆரம்பத்தில் அதைத் திட்டமிட்ட விற்பன்னர், கறுவாக்காட்டுக் குமரிகளுக்கும் வெள்ளவத்தை வாலிபருக்குமாகவே அதைக் கட்டினரே யன்றி கிராமப்புற மத்திய மகா வித்தியாலயங்களில் இருந்து ஆயிரக் கணக்கான மாணவர் ஒரு காலத்திற் படை யெடுப்பரென எதிர்பார்க்கவில்லையெனவொரு குற்றச்சாட்டு முண்டு. எனினும், இன்றைய நிலைமையைச் சமாளிப்பதற் குக் கொழும்பு குதிரைப் பந்தய மைதானத்தில் பல்கலைக்கழக அதிகாரிகள் போராடிக் கொண்டிருக்கும் சமயத்திலேதான் கலாச்சார பல்கலைக் கழகங்கள் அமைக்க வேண்டுமெனும் பேரவா, எல்லா இன மக்கள் மத்தியிலும் தோன்றியுள்ளது.

வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்களைப் பல்கலைக் கழகங்களாக மாற்றும்பொழுது, அவை பௌத்த

மத கலாசார வளர்ச்சிக்குப் பெரும் தொண்டாற்றுமென எதிர்பார்க்கப்பட்டது போலவே இன்று அவை சிங்கள மக்களின் மத, கலாசார, பாரம்பரிய மறுமலர்ச்சிக்குப் பெரிதும் உழைக்கின்றன. எம் நாட்டில் ஆங்கிலேயர் வேரூன்றி அவர்களது மொழி, கலை, உடை, நடை ஆகியவை நாகரிகமாகக் கருதப்பட்ட காலத்து, பௌத்த மத கலாசாரத்தைப் பாதுகாத்து வந்தவை பிரிவேனாக்களே. அவற்றின் சேவையை மேலும் நன்முறையில் பயன் படுவதற் காகச் சர்வகலா சாலைகளாக்கப்பட்டன.

பௌத்த பிக்குகளுக்குத் தனியானதொரு பல்கலைக் கழகம் அநுராதபுரத்தில் ஸ்தாபிக்கப்படுமென இன்றைய ஆட்சியாளர் கூறியுள்ளனர். எனவே, இலங்கைப் பல்கலைக் கழகம் நாட்டு மக்கள் அனைவருக்கும் பொதுவான தேசியப் பல்கலைக்கழகமாக இருப்பதோடு, வித்தியோதய, வித்தியா லங்கார, பிக்கு சர்வ கலாசாலை ஆகியன பௌத்த மக்களின் கலை, கலாசார, மத வளர்ச்சியில் அடிப்படை ஸ்தாபனங் களாக அமையும்.

இப்பின்னணியிற்றான் இந்து பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட வேண்டுமெனும் முயற்சியைக் காலஞ்சென்ற மூதவையுறுப்பினர் திரு. எஸ். நடேசன் ஆரம்பித்து, வரவு செலவுத் திட்டத்திலும் அடையாள நிதியொன்றையும் ஒதுக்குவித்தார். இந்து கலாசாரப் பல்கலைக் கழக இயக்கத் தின் ஆரம்பம் இதுவே.

நிலைமை இவ்வாறிருக்கும் பொழுது எமக்கென தனியானதொரு முஸ்லிம் கலாசார பல்கலைக்ழகம் நிறுவப்

படவேண்டுமெனக் கேட்பதில் என்ன தவறு? ஒரு நாட்டில் வாழும் பல்வேறு இன, மத, மொழி, கலாசாரப் பிரிவுகளுள் ஒன்றுபட்டு ஐக்கியத்துடனும் நல்லெண்ணத்து -னும், சமூக உறவுடனும் வாழ வேண்டுமென்பது உண்மையே. “வேற்றுமையில் ஒற்றுமை” காண வேண்டியது அவசியம். ஆனால் அதே சமயத்தில் ஒவ்வோரினமும் தத்தமது கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை முற்றாகத் துறந்து, ஐக்கியத்தின் பேரால் அவை யாவற்றையும் தியாகம் செய்ய முடியாது. எமக்கென ஒரு இனமுண்டு, கலாசாரமுண்டு, வாழ்க்கை முறையுண்டு, பண்பாடுண்டு, பாரம்பரியமுண்டு. ஏனைய இனத்தார் அனைவருக்கும் அவர் தம் பாரம்பரியத்தைப் பிரதிபலித்து மேலும் வளர்க்கக் கூடிய உயர் கல்விப் பீடங்கள் இருந்தால், எமது கலாசாரத்தைப் பேணி வளர்ப்பதற்கும் அவ்வாறானவொரு மத்திய நிலையம் அவசியமே.

முஸ்லிம் கலாசார பல்கலைக்கழகம் ஏனைய கலாசார பல்கலைக் கழகங்கள் போன்று சகல வசதிகளும் பொருந்தியதாகவிருக்க வேண்டும். வெறும் கட்டிடங்களினதும், சில வகுப்பறைகளினதும் கூட்டாகவில்லாமல் பல்கலைக் கழகத்துக்குரிய வசதிகளுடனும் மிடுக்குடனும் அது திகழ வேண்டும். இடவசதியின்மை, போதிய விரிவுரையாளர்கள் இல்லாமை, வாசிகசாலை வசதியில்லாமை போன்ற நெருக்கடிகளை இப்பல்கலைக் கழகம் நோக்காது, அது நிறுவப்படுவதாயின் சகல வசதிகளுடனும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்து கலாசார பல்கலைக்கழகம், இஸ்லாமிய கலாசார பல்கலைக்கழகம், கிறிஸ்தவ பல்கலைக்கழகம் என்றெல்

லாம் ஆளுக்கொரு புறமாய்க் கூச்சலிடாமல், தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எல்லோருக்கும் பொதுவான தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்றிற்காகப் பாடு படவேண்டுமெனச் சில அரசியற் தலைவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். சமீபத்தில் தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சிலர் அரசாங்கத்திடம் சமர்பித்துள்ள மகஜரில், இச்சர்வகலாசாலை கீழ் மாகாணத்திலோரிடத்தில், ஆனால் யாழ்ப்பாணத்தோடு இலகுவாகத் தொடர்பு கொள்ளக் கூடியவிடத்தில் அமைய வேண்டுமெனவும் கூறியுள்ளனர்.

இக்கோரிக்கைக்கு செவி சாய்த்து இலங்கை முஸ்லிம்களும் யாவருக்கும் பொதுவாக தமிழ் சர்வகலா சாலையொன்றிற்காகப் பாடுபடுவதானால் சில திட்ட வட்டமான நிபந்தனைகளின் கீழேயே அவ்வாறு செய்ய முடியும். மதம், கலாசாரம், பாரம்பரியம் பற்றிய எமது அடிப்படை உரிமைகள் யாவும் முறையாகக் கௌரவித்துப் பாதுகாக்கப்பட வேண்டும், எனவே தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தில் முஸ்லிம்களும் சேர்வதாயின் கீழ்வரும் நிபந் தனைகள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டு அப்பல்கலைக் கழகச் சட்டத்தில் இடம்பெற வேண்டும்.

1. சனத்தொகை விகிதாசாரத்தில் தமிழ் மாணவரும், முஸ்லிம் மாணவரும் தெரிவு செய்யப்பட வேண்டும். இதன் பிரகாரம் சுமார் 45 சதவீதமானோர் முஸ்லிம் மாணவராயிருக்க வேண்டும்.

2. பல்கலைக் கழகப் பேராசிரியர், விரிவுரையாளர், நிர்வாக உத்தியோகஸ்தர், இலிகிதர், சிறு சேவை

யாளர் அனைவரும் இவ்விகிதத்திலேயே தெரிவு செய்யப்படவேண்டும்.

3. அரபு மொழிப் போதனா பீடம் நிறுவப்படல்.

4. இஸ்லாமிய கலாச்சாரப் போதனா பீடம் நிறுவுதல்.

5. முஸ்லிம்களின் மத வளர்ச்சிக்கு (மசூதி கட்டுதல் போன்றவை) கலாசார முன்னேற்றத்திற்கும் பூரண சுதந்திரமும், போதிய வசதிகளும் அளிக்க வேண்டும்.

மேற்கூறியவைகளும் இஸ்லாமியப் பாரம்பரியம் பாது காக்கப்படுவதற்குத் தேவையென இவ்வியக்கத்திற் பங்கு கொள்ளும் முஸ்லிம் கல்விமான்கள் கருதும் ஏனைய உரிமைகளும் எவ்வித தயக்கமுமின்றித் திட்டவட்டமாகத் தரப்பட்டால் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தில் நாம் பங்கு கொண்டு அதனையே பெற முயற்சி செய்வது பொருத்தமானதே. ஆனால் அவ்வாறின்றி இவ்வித அடிப் படை உரிமைகளைத் தருவதில் இவ்வியக்கத்தினர் தயக்கம் காட்டினால், எமக்கெனத் தனியான சுதந்திரமானவொரு முஸ்லிம் கலாசார பல்கலைக் கழகத்திற்காகப் போராடுவதை விட, வேறு வழியில்லை.

அல்–இஸ்லாம்

கொழும்பு, ஜூலை 1966,

பக்: 9.

# 6.
# இலங்கை முஸ்லிம்களின் பொருளாதார நிலை

பிறநாட்டுக் குடியேற்றங்கள் பெரும்பாலும் வர்த்தகம் நாடு பிடித்தல், மதம் பரப்புதல், செல்வத்தைச் சுரண்டித் தாய் நாட்டை வளர்த்தல், பொருளாதார சுபீட்சம் கருதிக் குடியேறுதல் போன்ற பல காரணங்களின் தொகுப்பு விளைவாகவோ, அன்றித் தனியொன்றின் விளைவாகவோ ஏற்பட்டு வந்துள்ளன. இலங்கையைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் வாசனைத் திரவியங்களுக்கும், கிறிஸ் தவத்தைப் பரப்புவதற்கும் இந்நாட்டை அடிமையாக்கினர். தொடர்ந்து வந்த ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும் இவற் றோடு சாம்ராஜ்யப் பலப் பரீட்சையின் ஓர் அங்கமாகவும் எம் நாட்டைக் கைப்பற்றி மத, பொருளாதார, கலாசாரச் சூறை யாடல்களை மேற்கொண்டனர்.

ஆனால் இலங்கையில் குடியேறி ஆரம்ப கால அரபிய ரிடையோ, அல்லது பிற்பகுதி முஸ்லிம்களிடையோ நாடு பிடிக்கும் ஆசையோ, சூறையாடும் மிலேச்சத்தனமோ எச்சந்தர்ப்பத்திலேனும் சிறிதளவாவது காணப்பட்டதற்கான அறிகுறிகள் எதுவுமே கிடையாது. வர்த்தகத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு இலங்கையிற் குடியேறி, முஸ்லிம் களின் நெறி பிறழா மார்க்கப் பற்றையும், சீரிய ஒழுக்க சீலங்களையும் வியாபார நேர்மையையும் கொண்டே அவர் களின் தொகை கௌரவத்துடனும், நாட்டின் பிற சாகியத் தாரின் முழு ஆதரவுடனும் பெருகியது.

அரபியர் ஆரம்ப காலந் தொட்டே வணிகத்தைத் தமது தலையாய தொழிலாகக் கொண்டிருந்தனர். கடல் மார்க்கமாகவும், பாலைவனப் பாதையூடாகவும் தம் வர்த்தகத்தை அவர்கள் திறம்பட நடாத்தினர். இன்றைய மத்திய கிழக்கு, அரபு நாட்டுப் பாதைகள் பொரும்பாலானவை இவ்வொட்டக மார்க்கங்களை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவையாகும். இவ்வனாந்தரப் பிரயாணத்தின் அவசியத்தினாற்றான் ஐரோப்பியருக்கு வெகு காலத்திற்கு முன்னரேயே நட்சத்திரம், கிரகம், பருவ மாற்றங்கள் ஆகியவற்றின் தெளிந்த நுண்ணிய அறிவை முஸ்லிம்கள் பெற்றிருந்தனர். அராபிய யாத்திரிகரும், வணிகரும், கப்பலோட்டிகளும் தாம் பெற்ற அறிவை தம் பிற்சந்ததியினரும் அனுபவிக்கும் பொருட்டுப் பல நூல்களை விட்டுச் சென்றுள்ளனர். இப்னு குறுதாத்பிஹ் எழுதிய "பாதைகளும் இராச்சியங்களும்" எனும் நூல் அராபிய வணிகப் பாதைகளைப் பற்றிக் கூறுவதோடு, சீனா, யப்பான் போன்ற மிகத் தூர இடங்களைப் பற்றியும் தெளிவாகக் கூறுகின்றது.

இப்பரந்த வணிகத்தின் பயனாய் பல அரபிச் சொற்கள் இன்றும் கூட ஆங்கிலச் சொற்களாக வழங்கி வருகின்றன. ஸ்டேலின் (Sterling), திரபிக்(Traffic), தரிப்(Tariff), செக் (Cheque) போன்ற இன்றைய ஆங்கிலச் சொற்களின் மூலத்தை நாங்கள் அரபு மொழியில் காணமுடிகிறது.

மேற்கிலும் கிழக்கிலும் தம் வர்த்தகத்தை வியாபித்த அராபியரே இலங்கை முஸ்லிம்களின் ஆதிக் குடிகளாவர். நாடு பிடிக்கும் ஆசையோ அல்லது நாட்டின் செல்வத்தைச் சுரண்டும் வேணவாவோ எதுவுமின்றி வர்த்தக நோக்கத்

திற்காக மட்டுமே இலங்கைக்கு வந்த அராபியர் நேரடியாகவே இங்கு வந்தார்களா அல்லது தென் இந்தியாவிற் குடியேறி அங்கிருந்து இங்கு வந்தார்களா, வரும்போதே தம் மனைவியரையும் அழைத்து வந்தனரா, அல்லது இலங்கையின் உயர் குலப் பெண்களை மதமாற்றஞ் செய்து மணந்தனரா என்பவை ஆராய்ச்சிக்குரிய விடயங்களாயினும், நாம் அவ்வாறு குடியேறிய முஸ்லிம்களின் வழித் தோன்றல்களே என்பதில் சந்தேகமில்லை.

ஆரம்பத்தில் வந்தோர் தம் வர்த்தகத்திற்குகந்ததான துறைமுகப் பட்டணங்களிலேயே தம்மிருப்பிடங்களை அமைத்துக் கொண்டனர். சேர் அலெக்சாண்டர் ஜோன்ஸ்டன் கூற்றுப்படி, "எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் முஸ்லிம்கள் இங்கு குடியேறினர். திருகோணமலை, யாழ்ப்பாணம், மாதோட்டம், மன்னார், குதிரைமலை, புத்தளம், கொழும்பு, பார்பரின், காலி ஆகிய இடங்களில் அவர்கள் குடியேறினர்."

இவர்கள் ஆரம்பத்தில் மூன்று வகையான வர்த்தகங்களில் ஈடுபட்டனர். முதலாவது, பிறநாட்டு வர்த்தகம்; இரண்டாவது உள்நாட்டு தாவள வர்த்தகம்; மூன்றாவது மாணிக்கக்கல் வெட்டுதல் வர்த்தகம் ஆகியவையாகும். காலப்போக்கில் நெசவுத் தொழிலையும், விவசாயத்தையும் இவற்றோடு சேர்த்துக் கொண்டனர்.

இலங்கையின் ஆரம்பகால முஸ்லிம்கள் பெரும்பாலான வர்த்தகத்துறைகளில் ஏகபோக உரிமையைக் கொண்டிருந்த தோடு தம் நேர்மையின் விளைவாய் மிகக் கௌரவமான

அந்தஸ்தையும் பெற்றிருந்தனர். சிங்களக் கிராமப் புறங்களில் முஸ்லிம் வர்த்தகர்கள் மிகுந்த மரியாதையோடு நடாத்தப்பட்டனர். இலங்கை பல இராச்சியங்களாக இருந்த போது கூட அவ்விராச்சியங்கள் யாவற்றிலும் அவர்கள் செல்வாக்குப் பெற்றிருந்தனர். கண்டி ராச்சியத்தோடும், கரையோர ராச்சியத்தோடும் சுமுகமாக வர்த்தக, சமூக, அரசியல் உறவுகளை மேற்கொண்டனர். அதனாற்றான் கண்டியோடு நேரடித் தொடர்புடைய துறைமுகமாயிருந்த புத்தளம், முஸ்லிம்களின் குடியேற்றத்தில் ஒரு முக்கிய ஸ்தானமாக விளங்கியது. போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் வருகையினால் முஸ்லிம்களின் வர்த்தகம் அடக்கி ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்ட வேளையிலே அவர்கள் விவசாயத்தில் இறங்கினர். ஆகவே வர்த்தகத்துறையிலும் விவசாயத்துறையிலும் இந்நாட்டு முஸ்லிம்கள் காலத்திற்குக் காலம் பெரும் பங்கு வகித்துள்ளனர்.

ஆயினும் காலப்போக்கில் முஸ்லிம்களின் பொருளாதார ஆதிக்கம் தேய்ந்தே வந்துள்ளது. வெளிநாட்டு வர்த்தகம், உள்நாட்டு வர்த்தகம், மாணிக்க வியாபாரம், விவசாயம், நெசவு ஆகிய துறைகளிற் பொருளாதார அபிவிருத்தியில் முஸ்லிம்களின் பங்கு குறிப்பிடக்கூடிய அளவு இல்லை. இந்நாட்டை சுமார் 500 ஆண்டுகள் ஆண்ட, முஸ்லிம் விரோதிகளான ஐரோப்பியரின் பகைமை சார்ந்த நசுக்கல் ஒரு காரணமாயினும், முஸ்லிம்களின் சொந்த ஊக்கமின்மையும், புதிய மாற்றங்களை உணர்ந்து அவற்றிற்கேற்ற பொருளாதார யுக்திகளைப் பயின்று கொள்ள இயலாத கல்வியறிவின்மையும் இப்பொருளாதார வீழ்ச்சிக்குரிய காரணங்கள் எனக் கொள்ளலாம்.

ஆரம்பகால அராபியரே இலங்கையின் வாசனைத் திரவியங்களையும், ஏனைய பொருட்களையும் பிற நாடுகளுக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து எமக்குத் தேவையான பொருட்களை இங்கு கொணர்ந்தனர். போர்த்துக்கீசர், வருகையோடு இவ்வாதிக்கம் முற்றாகச் சீரழிந்தது. ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் நிலைமை ஓரளவு சாதகமாக மாறியதாயினும் முஸ்லிம்கள் தம் பண்டைய வர்த்தக மகிமையையும், கியாதியையும் என்றுமே பெற முடியாது போயிற்று. இன்று சில முஸ்லிம்கள் ஏற்றுமதி இறக்குமதியில் ஈடுபட்டிருக்கின்ற பொழுதிலும், அவர்களிற் பெரும்பாலோர் கௌரவப் பிரசா உரிமையும், தற்காலிக அரச உத்தரவுப் பத்திரமும் பெற்ற இந்திய வர்த்தகர்களே யாவர். இந்நாட்டு முஸ்லிம்களின் வளர்ச்சிக்கோ, அல்லது தேசப் பொருளாதாரச் செழிப்பிற்கோ மனமுவந்து தியாகம் எதையும் இவர்கள் செய்வரென எதிர்பார்க்க முடியாது.

உள்நாட்டு வர்த்தகத்திலும் இலகுவான போக்குவரத்து முறையைப் புகுத்தியோர் முஸ்லிம்களேயாவர். மாடுகளின் மேல் பொதிகளை ஏற்றி, அவற்றை இடத்துக்கிடம் கொண்டு செல்லும் தாவள முறையை இலங்கையில் ஆரம்பித்தோர் இவர்களேயாவர். மிகச் சமீப காலம்வரை கல்முனைப் பிரதேச முஸ்லிம் கிராமங்களுக்கும், கண்டிப் பிரதேசங்களுக்கும் இடையே ஒக்காஸ்பிட்டி, வெல்லஸ்ஸ, பிபில ஆகிய பாதைகளினூடாக இத்தாவள வர்த்தகம் நடந்து வந்தது. கல்முனைப் பிரதேச முஸ்லிம் கிராமங்களிலிருந்து உப்பு, வெற்றிலை, புகையிலை, சுண்ணாம்பு, கருவாடு ஆகிய பொருள்கள் கண்டி பிரதேசங்களுக்குக் கொண்டு செல்லப்

பட்டு, அங்கிருந்து சோளம், குரக்கன், இறுங்கு, தினை, மண்டு, வத்தாளைக் கிழங்கு, மிளகு, பாக்கு, பழ வகைகள் ஆகிய பொருள்கள் பண்டமாற்றின் மூலம் இங்கு கொண்டு வரப்பட்டன.

பொதுமக்களுக்கு அப்பொருட்களை விநியோகிக்கும் சிறு வர்த்தகர்களாகவும் முஸ்லிம்கள் விளங்கினர். சிங்களப் பிரதேசங்களிலும் இவர்களே செல்வாக்குப் பெற்றிருந்தனர். இன்றுங்கூட இலங்கையின் பெரும்பாலான பட்டினங்களில் சில்லறைக் கடைகள், உணவு விடுதிகள், புடவைக் கடைகள், இரும்புக் கடைகள் போன்ற சில்லறை வர்த்தக ஸ்தாபனங் களை முஸ்லிம்களே நடத்தி வருவதை நாம் காண்கின்றோம். வர்த்தகத்தில் இன்று எஞ்சியுள்ளது, இத்துறை ஒன்றேயாகும். அதிலும் பிற சாகியத்தாரின் ஆதிக்கம் அதிகரித்து வருகின் றது. முஸ்லிம்கள் இத்துறையை மட்டும் நம்பியிருத்தல், அவர்களது வருங்காலப் பொருளாதார மறுமலர்ச்சிக்கு உதவாது. பெரும் முதலீடுகளைச் செய்வதற்கோ, அல்லது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதற்கோ இத்துறை உபயோகமானதல்ல. ஆகவே பெரும் முதலீட்டு வர்த்தகத் துறைகளில், கூட்டு அடிப்படையில் ஈடுபட வேண்டியது அவசியமாகும்.

வர்த்தகர்களாய் வாழ்ந்த முஸ்லிம்கள் காலத்தில் தேவையினாலும் நிர்ப்பந்த சூழ்நிலையினாலும் விவசாயத் திலும் நெசவுத் தொழிலும் இறங்கினர். குறிப்பாக மட்டக் களப்புப் பிரதேச முஸ்லிம்கள் விவசாயத்தையும், மீன் பிடித்தலையும் தம் தொழில்களாகக் கொண்டுள்ளதோடு, மருதமுனை போன்ற கிராமங்கள் நெசவுத் தொழிலை தம்

வாழ்க்கையின் அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆனால் இத்துறைகளிலும் கூட எம்முடைய முன்னேற்றம் போதியதாக அமையவில்லை. திட்டமிட்ட, முறையான, பரந்த அடிப் படையில் அவை அமையவில்லை. அம்பாறை மாவட்ட நெல் வயல்களின் விளைச்சல் ஓரளவு அதிகரித்துள்ள போதிலும் செலவு அதிகரிப்போடு ஒப்பிடுமிடத்து விவசாயிக்குரிய இலாபம் அவ்வளவு அதிகரிக்கவில்லை. நவீன முறை களுக்குத் தன்னை உடனடியாக மாற்றிக் கொள்ளமுடியாத விவசாயிகளின் அந்தர நிலையே இதற்குரிய முக்கிய காரணமாகும். மீன்பிடியும் தானாகக் கரைக்கு வந்து வலைக் குள் விழும் மீனை வெளியில் கொண்டு வந்து சேர்ப்பதாகவே பெரும்பாலும் அமைந்துள்ளது. மீனைத் தேடிச்சென்று நவீன யுக்திகளைக் கடைப்பிடித்து அவற்றைப் பிடிக்கும் முறை இப்பிரதேச மக்களிடையே இன்னும் அவ்வளவாகப் பரவ வில்லை. நெசவுத்துறையிலும் கூட அதில் ஈடுபடுவோரின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்தாலும் உற்பத்தித் திறமையும் தன்மையும் அதிகரித்திருக்கிறதெனக் கொள்ள முடியாது.

பொதுவாகப் பார்க்குமிடத்து ஆரம்பகால இலங்கை முஸ்லிம்களின் வர்த்தக அந்தஸ்தை, இன்று நாம் பெற்றி ருக்கவில்லை. எம் சமூகத்தின் பொதுவான பொருளாதார நிலை திருப்தியானது அல்ல. கையளவு முஸ்லிம் தனவந்தர் களின் ஆடம்பர விவாக விழாக்களையும், பிரியாணி வைபவங்களையும், உல்லாச வாழ்வையும் கொண்டு முஸ்லிம் சமூகம் மிகப் பெரும் தனவந்த வர்க்கம் எனப் பிற சமூகத்தவர் எண்ணினாலும், உண்மையில் பெரும்பான்மை

யான முஸ்லிம்கள் வறியவர்கள். கொழும்பு மாநகர சேரி களிலும், கிழக்கு மாகாண குடிசைகளிலும் ஏனைய பல பாகங்களின் கடைப் பின் பகுதிகளிலும் அநேக முஸ்லிம் குடும்பங்கள் அல்லலுறுகின்றன. றமழான் மாதத்து 27 ஆம் நாள் கொழும்பு நகர வீதிகளிலும், முஸ்லிம் கிராமப் புறங்களிலும் பெரும் படையெனத் திரண்டு ஊரெல்லாம் ஊர்வலமாகச் செல்லும் முஸ்லிம் பெண்கள், குழந்தைகள் கூட்டத்தைக் கண்டால் இது ஒரு தரித்திரப் பரம்பரையோ என எண்ணத் தோன்றும். எனவே முஸ்லிம் சமூகம் தனிப் பட்ட ஒவ்வொருவரினது பொருளாதார நிலையினை உயர்த்தி, சமூகத்தின் சுபீட்சத்தையும் வளர்த்து நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ வேண்டியது இன்றி யமையதாகும்.

அல்–அரப், மலர் 2, இதழ் 1,
கல்முனை, செப்டம்பர், 1970,
பக்: 25–26.

# 7.

# கற்றலும் நினைவாற்றலும்

இளமைப் பருவத்திலிருந்து இறக்கும் வரை நடை பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு காரியம் கற்றலாகும். பாடசாலைப் பருவத்தில், பள்ளிக் கூடத்தில் படித்தல் மட்டுமே கற்றல் அல்ல. பாடசாலை செல்லாதோரும் தினமும் வாழ்க்கை அனுபவங்கள், காண்பவை, கேட்பவை மூலம் ஏதாவதொன்றை கற்றுக் கொண்டேயிருக்கிறார்கள். ஒரு குழந்தை நடக்கப் பழகுகிறது, அதுவும் கற்றல்தான். பாடசாலையிற் புத்தகங்களிலிருந்து புதிய தகவல்களைப் பெறுகிறது; அதுவும் கற்றல்தான். பெரியவனானபின் புதிய தகவல்கள் பலவற்றைப் பெறுகின்றான்; அதுவும் கற்றலேதான்.

புதுப்புது அனுபவங்களையும், தகவல்களையும் பெறுவதன் மூலம் நாம் புதிய மனப்பான்மைகளையும், நம்பிக்கைகளையும், நடத்தை மாற்றங்களையும் பெறு கிறோம். இவைகளின் திரளே கற்றலின் பெறுபேறாகும்.

எம்மைப் போன்று மிருகங்களும், பறவைகளும் கற்கின்றன. ஆனால் அவை 'பார்த்துக் செய்வதன் மூலம்' புதிய பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்கின்றன. தாய்ப் பறவை அல்லது தாய் மிருகத்தின் நடத்தைகளைப் பார்த்துத் தாமும் அவ்வாறே செய்யப் பழகி, அவ்வழி நடக்கின்றன. நாம் மிருகங்களைப் பழக்கும்போது சில கட்டளைகளைக் கூறி, அக்கட்டளைகளுக்கு அவை பணிந்து நடக்கப் பழக்குகிறோம்.

காலக்கிரமத்தில் ஒரு நாயைப் பெயர் கூறி அழைத்தால் அது எங்கிருந்தாலும் எம்மை நோக்கி ஓடி வருகின்றது. 'சீசர்' என்பது தனது பெயர், தன்னையே கூப்பிடுகிறார்கள் எனத் தனது நுண்மதியினால் உணர்ந்து அது ஓடிவரவில்லை. சிறு குட்டியிலிருந்து ஏற்பட்ட பழக்கத்தின் மூலம் அது அவ்வாறு செய்கின்றது. "வா" எனும் போது வருவதும் "வெளியே போ" எனும் போது போவதும் பழக்கத்தினால் ஒழிய அறிவு விளக்கத்தினால் அல்ல. குட்டியிலிருந்து "வா" எனக் கூறும் போது போகவும் "போ" எனும்போது வரவும் பழக்கினால், "சீசர் வா" எனும் சொற்களைக் கேட்கும்போது அது வெளியே போகும். "சீசர் போ" எனும்போது உள்ளே வரும். எனவே மிருகங்கள் எமது மொழியை உணர்ந்து கற்று அதற்கேற்ப நடக்கவில்லை. வெறும் பழக்கத்தின் விளைவாகவே சில நடத்தைகளை அவை வெளிக்காட்டுகின்றன.

மனிதர்களாகிய நாம் மொழி மூலம் கற்கிறோம். சிறு பிள்ளைகளுக்குச் சில பழக்கங்களை நாம் செய்துக் காட்டி அவ்வாறு செய்ய வேண்டுமெனக் கூறினாலும், பெரும் பாலானவற்றை மொழி மூலமே அவர்கள் கற்கிறார்கள். இதனாற்றான் மொழி வளம் ஒவ்வொரு மாணவனுக்கும் மிக இன்றியமையாதது. பாடசாலைகளில் நாம் கற்பிக்கும்-கற்கும் நடத்தை, மொழி மூலமே பெரும்பாலும் நடைபெறுகின்றது. மாணவர்களின் மொழியறிவு விருத்தி செய்யப்பட்டால், ஏனைய பாடங்களைக் கற்பதும் இலகுவாகும்.

இக்கற்றல் விடயத்தில் எல்லா மாணவர்களும் கடைப் பிடிக்க வேண்டிய மூன்று பிரதான படிகள் உள. இவற்றை நன்கறிந்து, உணர்ந்து கைக்கொள்வதன் மூலம் மாணவர்

தமது திறமையை விருத்தி செய்ய இயலும். கற்றல் என்பது முதலாவது படியாகும். இரண்டாவ்து அம்சம் கற்றதை மனதில் நிறுத்தி வைத்தல் ஆகும். மனதில் நிறுத்தி வைத்ததை ஞாபகப்படுத்துதல் மூன்றாவது விடயமாகும். இவை மூன்றிலும் ஒரு மாணவன் திறமையாகச் செயலாற்றும் போதுதான் அவனைத் திறமைசாலியென ஆசிரியர் கணிப்பர்.

முதலாவது படியை மனனம் செய்தல் எனவும் கூறலாம். மனனம் செய்தல் என்பதைப் "பாடமாக்கல்" எனும் பொருளில் நாம் இங்கு குறிப்பிடவில்லை. ஒரு பாடத்தைப் படிக்கும் போது அதன் முக்கியமான உள்ளடக்கத்தை நன்கு உணர்ந்து அறிந்து மனதிலிருத்தலே இங்கு இதன் பொருளாகும். இதை இலகுவிற் செய்வதற்குப் பல வழிகள் உள. நாம் கற்கின்ற பாடம் பொருள் உள்ளதாகவும், கருத்துப் பொதிந்ததாகவும் அமைதல் வேண்டும். பொரு ளற்றவொன்று மனனம் செய்யப்பட்டாலும் காலக் கிரமத்தில் அது மனதைவிட்டு அகன்றுவிடும். கற்கும் விடயத்திலே தொடர்பு இருக்கவேண்டும். அத்துடன் அஃது அமைப்புள் ளதாகவும் இருக்கவேண்டும். கற்பதன் நோக்கம் மிகமுக் கியம். நம் வாழ்வில் எக்காரியத்தை செய்யும் போதும் அதற்கோர் இலட்சியம் வேண்டும். வீட்டிலிருந்து பயண மொன்றை ஆரம்பிக்கும் போது எங்கு போகிறோம், எதற் காகப் போகிறோம், பஸ்ஸிலா அல்லது நடந்தா போகிறோம் எனத் திட்டமிட்டுப் புறப்படுதல் போன்று ஒரு பாடத்தைக் கற்கும் போதும் அதற்கொரு நோக்கம் வேண்டும்.

இன்று நம் கற்பதன் நோக்கம் இரண்டு: புதிய அறிவையும் அனுபவத்தையும் கல்வி மூலம் பெறுவது ஒன்று; அதைவிட, முக்கியமாக பரீட்சைகளிற் சித்தியடைந்து

ஏதாவதோர் உத்தியோகத்தை அல்லது உழைக்கும் வழியைப் பெறுவது ம்ற்றது.

பண்டைக் காலத்தில் முனிவர்கள் தமது ஆசிரமங் களிலே சிஷ்யர்களைப் பயிற்றுவித்த போது அல்லது சில நூற்றாண்டுகளுக்கு முன் எம் மூதாதையர் திண்ணைப் பள்ளிக்கூடங்களை நடத்திய போது அறிவு பெறுவதே இலக்காயிருந்தது. "கல்வி கல்விக்காக" என்பதே அன்றைய கோட்பாடு. ஆனால் இன்றைய யுகத்தில் அதுவும் வளர்வுறு நாடுகளான எம் நாடுகள் போன்றவற்றில் கல்வி கல்விக்காக என்பதைவிட வாழ்க்கைக்கான வழியொன்றை அமைத்துக் கொள்வதே கல்வியின் பிரதான குறிக்கோளாகும். பாட சாலையிற் சேர்ந்த நாள் முதல் எல்லாக் குழந்தைகளும் எதிர்காலத்தில் மருத்துவராக, பொறியியலாளராக, விஞ் ஞானியாக, கணக்கியலாளராக வரவே விரும்புகின்றனர். இவ்வாறான உயர் இலட்சியங்கள் எல்லோருக்கும் இல்லா விட்டாலும், கற்பதில் ஏதோவொரு நோக்கம் எல்லா மாணவருக்கும் இருத்தல் வேண்டும்.

இந்நோக்கங்களை வகுக்கும்போது, மாணவர் நிச்சய மாகத் தமது பாடசாலை அதிபர், ஆசிரியரின் ஆலோசனை களையும், வழிகாட்டலையும் செவிமடுக்க வேண்டும். பாடசாலைகளில் மேல் வகுப்பிற்கு வரும் மாணவர் அனைவரும் விஞ்ஞானம் கற்கவே விரும்புகின்றனர். அவ்வாறு விரும்புவது தவறல்ல. ஆனால் அத்துறையிலே திறமையாகக் கற்கக் கூடிய நுண்ணறிவு எல்லா மாணவர் களுக்கும் இருக்காது. ஒரு மாணவன் கலை, விஞ்ஞானம், வர்த்தகத்துறை என்பவற்றுள் எதிலே திறமை காட்டுவான். திறமை காட்டும் துறையிலும் எவ்வெப் பாடங்களில் நன்கு

தேறுவான் என்பதை அந்தப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களே நன்கறிவர். ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளை மிகப் புத்திசாலி, எதையும் திறமையாகச் செய்வான் என எண்ணுவது இயல்பு. அதனாற் சில வேளைகளில் ஒரு துறைக்குப் பொருத்தமற்ற மாணவன் அத்துறைகளிலே தான் கற்கவேண்டுமென விடாப்பிடியாக நிற்பதோடு, சில வேளை களில் பெற்றோரும் பாடசாலை நிர்வாகத்தினரை வற்புறுத்து வதையும் காண்கிறோம். இறுதியிற் காணும் பலன் யாது? மாணவர் தமக்கும் பொருத்தமற்ற துறையிற் கற்கப் புகுந்து பலமுறை பரீட்சைகளிலே தோல்வியடைந்து விரக்தி அடை கின்றனர். ஆசிரியர்களின் ஆலோசனைகளைச் செவிமடுத் துத் தமது திறமைக்கும் பொருத்தமான பிரிவுக்குச் செல்வதனால் இந்நிலையைத் தவிர்க்கலாம்.

மனனம் செய்வதில் அடுத்த அம்சம், நாம் கற்பதில் முன்னேற்றம் தெரிதல் வேண்டும். நாம் ஒரே இடத்தில் ஸ்தம்பித்து நிற்கவில்லை. முன்னேறிச் செல்கிறோம் என்பதை அறியும்போது உற்சாகம் ஏற்பட்டுக் கற்றலின் வேகமும் அளவும் அதிகரிக்கும்.

எனவே மனனம் செய்வதை மேற்கொள்ளும்போது பாடத்தின் பொருள், தொடர்பு, அமைப்பு, நோக்கம், முன் னேற்றம் தெரிதல் என்பவற்றைக் கருத்திற் கொள்ள வேண்டும். இவ்வாறு மனனம் செய்வதற்குப் பல முறைகள் உள்ளன. ஒரு பாடத்தைப் பல முறைகள் வாசிக்கலாம். அவ்வாறு வாசிப்பதன் மூலம் அதன் முக்கிய அம்சங்கள் மனதிற் பதிந்து விடும். ஆனால், இதுவொரு சிறந்த முறையல்ல. விரிவான பகுதிகள் கொண்ட பல பாடங்களை மாணவர் கற்க வேண்டியுள்ளது. க.பொ.த. சாதாரண தரம்,

உயர்தரம் போன்ற பரீட்சைகளுக்குத் தயார் செய்யும் மாணவர் தமது பாடங்கள் யாவற்றையும் பலமுறை மீண்டும் மீண்டும் வாசிக்கக் கூடிய நேர அவகாசம் இருக்காது. அவ்வாறு நேரம் இருப்பினும் வாசித்த அவ்வளவுமே ஞாபகத்தில் இருக்கு மெனக் கூறவும் முடியாது. எனவே அந்தப் பாடங்களை முதலில் சில முறைகள் வாசித்தபின், அவற்றின் சுருக்கக் குறிப்புகளைத் தயாரிக்கலாம். பின்னர் அச்சுருக்கக் குறிப்பு களை நினைவுகூர்தல் மூலம் பாடத்தின் மீதான பிரதான உட்பொருளை நன்கு மனதிலிருத்த முடியும். பலமுறை தொடர்ந்து வாசிப்பதைவிட இவ்வாறு சுருக்கக் குறிப்புக் களைத் தயாரித்து, அவற்றைப் படித்துப் பின்னர் அடிக்கடி நினைவுகூர்வதன் மூலம் பாடம் நன்கு மனதிற் பதியும்.

அவ்வாறு நினைவுகூரும் பொழுது, உரத்து மீட்டலும், இலக்கங்களின் அடிப்படையிற் பார்ப்பதும் இலகுவா யிருக்கும். உரத்து மீட்டலானது பிறரது கவனத்தை ஈர்க்கும் அளவுக்கு, அல்லது அருகிலிருந்து கற்போருக்கு இடஞ்ச லேற்படுத்தும் அளவுக்குச் சத்தமிடுதலல்ல; ஓரளவுக்கு எமக்குள்ளேயே உரத்து மீட்கலாம். அத்துடன் எமது சுருக்கக் குறிப்புகளுக்கு இலக்கமிட்டு மீட்டுவதன் மூலம், எமது பயிற்சி வலுப்பெறும். அநுராதபுரம் இலங்கையின் தலை நகரமாயிருந்து வீழ்ச்சியடைந்ததற்கு ஐந்து காரணங்கள் எனக் கொண்டால், அவ்வைந்தையும் 1,2,3,4,5 என இலக்கமிட்டு மீட்டும்போது நாம் நான்கையே நினைவு கூர்ந்தால் விடுபட்ட ஐந்தாவது யாது என உடன் அறிந்து அதை வலுப்படுத்திக் கொள்ளலாம்.

எமது கற்றல் முறை தொடராயிராது, இடைவிட்டு பயிற்சியாயும் அமைதல் வேண்டும். ஒரே பாடத்தைத்

தொடர்ந்து கற்றல், அதிக பயனைத் தராது. ஒரு முறை அல்லது சில முறைகள் கற்றபின், இடைவெளிச் சிறிது விட்டு பின்னர் கற்க வேண்டும். இவ் இடைவெளியில் ஓய்வெடுத்தல் அல்லது வேறு பாடங்களைக் கற்றல் சிறப்பாகும். இதனாற்றான் பாடசாலைகளின் பாட அட்ட வணைகளில் வெவ்வேறு பாடங்கள் மாற்றி அமைக்கப் பட்டுள்ளதோடு, இடையில் ஓய்வு நேரமும் வழங்கப் படுகின்றது. பிறநாடுகள் சிலவற்றில், ஒவ்வொரு பாடத் துக்குமிடையில் ஓய்வு நேரம் வழங்கப்படுகின்றது. ஒவ் வொரு பாடவேளையும் நாற்பத்தைந்து நிமிடங்களைக் கொண்டுள்ளதையும், அடுத்த பாடம் தொடங்குவதற்கு முன் பதினைந்து நிமிட இடைவேளை அளிக்கப்படுவதையும், காணலாம். நீண்டநேரம் பாடசாலை நடைபெறும் நாடு களுக்கே இது பொருந்தும்.

சிலர் ஒரு பாடத்தைப் படிக்கும்போது முதலிலிருந்து முடிவுவரை முழுமையாகப் படிப்பர். வேறு சிலர், பகுதி பகுதியாகப் படிப்பர். வேறு சிலர் இரண்டும் கலந்த முறையில் படிப்பர். இவை எல்லாமே நல்ல முறைகள்தான். முதலில் ஒரு பாடத்தை இரண்டொரு முறைகள் முழுமை யாகக் கற்று, பின்னர் பலமுறை பகுதி பகுதியாகக் கற்று, அதன் பின்னரே இரண்டொரு முறை முழுமையாகக் கற்கும் கலப்பு முறை அதிக பலனைத் தரலாம்.

******

மனனம் செய்வதற்கு அடுத்த அம்சம், அவ்வாறு கற்றதை மனதில் நிறுத்தி வைத்தலாகும். இதுவொரு நனவிலி நிகழ்ச்சி. மூளையிலுள்ள சில நரம்புகளின் அமைப்

பினால் இது நடைபெறுகின்றது. எனினும் இதை ஊக்கக் கூடிய அல்லது இதற்கு தொய்வை ஏற்படுத்தக்கூடிய சில நடவடிக்கைகள் உள்ளன. சில பயிற்சிகள் மனதில் நிறுத்தி வைத்தலை வலுப்படுத்தக் கூடியனவாகும். சில மாணவர் குறிப்பிட்ட அளவே கற்பர். ஆயினும் பொதுப் பரீட்சையில், திறமையாகத் தேறுவர். தாம் கற்பதைச் சிறப்பாகக் கற்று, அவ்வாறு படித்ததை நன்கு ஞாபகத்தில் இருத்தி, தேவைப் படும்போது மீட்கக்கூடிய வல்லமையுடையவர்கள் அவர்கள் என்பதே இதன் தாற்பரியமாகும். வேறு சில மாணவர் இரவு பகல் கற்றுக் கொண்டே இருப்பர். ஆனால், பொதுப் பரீட்சைகளிலே தவறி விடுவர். கற்றல், நினைவிருத்தல், மீட்டல் முறைகள் ஒழுங்காக நடைபெறாததாலேயே இது ஏற்படுகின்றது. இவ்வாறான மாணவர் தமது பலவீனத்தை உணராது, பரீட்சைகளிலும் பரீட்சை நடத்துவோரிலும் பிழை கண்டுபிடிக்க முற்படுவது அடிக்கடி காணக்கூடிய சாதாரண நிகழ்ச்சியாகும்.

கற்றதை மனதில் நிறுத்துவதைப் பாதிப்பவற்றுள் மாணவர் கற்கும் விடயம் முக்கிய இடம் பெறுகிறது. கருத்து நிறைந்தவை, பொருள் பொதிந்தவை அதிகம் நினைவில் இருக்கும். ஒன்றை வாசிக்கும்போது அதன் பொருளுணர்ந்து வாசித்தால் அது நன்கு பதிந்துவிடும். அதேபோன்று எதுவுமே புரியாமல் வாசிப்பது சில நாளில் அடியோடு மறந்து விடும். எனவே, கருத்துள்ளவற்றைக் கற்பதோடு, எல்லாவற்றையும் பொருள் உணர்ந்தும் கற்றல் அவசியமாகும்.

தேவையைவிடக் கொஞ்சம் அதிகமாகவும் கற்றல் வேண்டும். பல வருடங்கள் கற்றபின் பொதுப் பரீட்சைக்குத்

தோற்றும்போது, கற்றவை எல்லாமே ஞாபகத்துக்கு வருவதில்லை. இரண்டொரு விடயங்கள் எழுதப்படாமலே விடுபட்டுவிடும். குறிப்பிட்ட தேவையின் அளவு மட்டுமே படித்தால், பரீட்சைக்கு விடை எழுதும் போது அவற்றுட் சில பகுதிகள் மறந்து போக, எஞ்சியிருப்பவை நல்ல விடையொன்றை எழுதப் போதியனவாய் இருக்கமாட்டா. ஆகையால் எப்போதும் தேவையை விடச் சிறிது அதிகமாகக் கற்கவேண்டும். இஃது அளவுக்கு மீறி விடவும் கூடாது. அளவுக்கு மீறிக் கற்றாலும் எல்லாம் ஒருங்கே சேர்ந்து குழப்பத்தை உண்டாக்கிவிடும்.

கற்றல் ஒரே சீராக விரைவாய் நடைபெற்றால், கற்றவற்றை மறக்கும் வேகம் குறைவாகவிருக்கும். சில நேரங்களில் வேகம் கூடியும், வேறு சில நேரங்களில் வேகம் குறைந்தும் கற்பதால் அதிக பயன் விளையாது. நேர காலத்தோடு பாடத்தைத் திட்டமிட்டு ஒரே வேகத்தில் சிறிது விரைவாகக் கற்றுச் செல்லும் போது மறத்தல் குறைவாகவே நடைபெறும்.

இவை மட்டுமன்றி, நுண்மதியிலும், உடலியற் காரணியிலுங்கூட மனதில் நிறுத்தி வைத்தல் தங்கியுள்ளது. நுண்மதியைப் பிறப்பும், சூழலும் தீர்மானிக்கின்றன. இவற்றின் விளைவினால் சில பிள்ளைகள் நுண்மதி கூடியோராய் இருப்பர். அவர்களின் ஞாபக சக்தி அதிகமாயிருக்கும். அடிக்கடி நோயினால் அல்லலுறும் மாணவர், தமது பாடங்களிற் போதிய கவனம் செலுத்தாத காரணத்தினால் அவற்றை ஞாபகத்திலிருத்தலிலும் பின்தங்கியே காணப்படுவர். இதேபோன்று வயது அதிகரிக்கும் போது

ஞாபக சக்தி குறையத் தொடங்கி கிழவர்களாகும் போது அநேகமானோர் மிகவும் மறதியுடையோராக மாறி விடுவர். சிலர் தமது மூக்குக் கண்ணாடியை நெற்றிக்கு உயர்த்தி விட்டுப் பின்னர் வீடு முழுவதும் அதைத் தேடுவதும், அல்லது காதிற் பென்சிலைச் செருகி வைத்துக் கொண்டு வீட்டிலுள்ள பிள்ளைகள் பென்சிலை எங்கோ போட்டு விட்டார்கள் எனக் கூப்பாடு போடுவதும் இவ்வாறான மறதியின் விளைவுகளேயாகும்.

எனவே கற்கும் விடயத்திற் பொதிந்துள்ள கருத்து கற்கும் விரைவு, தேவையை விடச் சிறிது அதிகமாகக் கற்றல், நுண்மதி, வயது என்பன அவ்விடயத்தை ஞாபகம் வைத்திருப்பதைப் பாதிப்பவையாகும்.

******

ஒரு பாடத்தை மனதிற் பதித்து ஞாபகம் வைத்திருந்தால் மட்டும் போதாது. உரிய நேரத்தில் அதை மீட்கக் கூடியதாயிருத்தலும் வேண்டும். நினைத்த மாத்திரத்தே அப்பாடத்தை நாம் எழுதவோ, கூறவோ, ஞாபகத்தில் வெளிக்கொணரவோ முடியுமாயிருந்தாலே அதை ஆழ்ந்து படிப்பதனாலும், ஞாபகத்தில் வைத்திருப்பதனாலும் உண்டாகும் பயனை அடைவோம். மனதில் உள்ளதை வெளிக் கொணர்தல் மூலமும், தரப்பட்டதை இனங்காணல் மூலமும் இதை நாம் செய்கிறோம். மரத்தில் இலை ஏன் பச்சை நிறமாயுள்ளது எனும் வினாவுக்கு விடையெழுதும் போது, மனதிலே தேங்கியுள்ள அதன் காரணங்களை வெளிக் கொணர்வதன் மூலம் கற்றதனாலாய பயன் ஏற்படுகிறது. விண்வெளிக்கு முதலிற் சென்ற மாவீரன் யார் எனும்

வினாவைத் தந்து "ஆம்ஸ்ரோங், ககாரின், வால்டர் ஷினா" எனும் விடைகளும் தரப்பட்டிருந்தால், அதற்குச் சரியான விடையை இனங் காண்பதன் மூலமும் மீட்டல் நடைபெறுகின்றது.

இவ்வாறான வெளிக்கொணரலை, பிரயோகமின்மை நிச்சயமாகப் பாதிக்கும். அடிக்கடி ஞாபகப்படுத்தாத, அடிக்கடி காணாத, அடிக்கடி கேட்காத விடயங்கள் காலக் கிரமத்தில் மனதைவிட்டு மறைந்து விடும். நீண்ட நாட் களின் பின் ஒரு பாடத்தை நினைவு கூர்ந்தால் அஃது அறவே ஞாபகம் வராது அல்லது அரைகுறையாக அல்லது திரிபு பட்டு ஞாபகத்திற்கு வரும். மிக முக்கியமான சம்பவங்கள் மட்டும் என்றுமே பசுமையாயிருக்கும். எனவேதான், பாடங் களை மாணவர் அடிக்கடி படிக்க வேண்டிய அவசிய மேற்படுகின்றது. இதேபோன்று கற்கும் விடயங்கள் இயல்பான வேறு விடயங்களோடு தொடர்புபடுத்தப் படுவதன் மூலமும் ஞாபகப்படுத்தல் இலகுவாயிருக்கும்.

நாம் ஞாபகத்திலிருத்தும் விடயங்கள் அவ்வாறே மீண்டும் நினைவுக்கு வருவதில்லை. நினைவுச் சுவடுகளின் திரிபு காரணமாக சில வேளைகளிற் கூடியும், குறைந்தும், மட்டுப்படுத்தப்பட்டும், நிறைவு செய்யப்பட்டும், கூராக்கப் பட்டும் வெளி வரலாம்.

கற்றல் தொடர்பான இவ்விடயங்களை உணர்ந்து, கடைப் பிடித்து ஒழுகுவதன் மூலம் மாணவர் நிச்சயம் தமது ஆற்றலை விருத்தி செய்ய முடியும்.

******

எனினும் சில மாணவர் மந்தமாகக் கற்போராயும் கற்றலில் அக்கறையில்லாதோராயும் இருப்பதைக் காண லாம். இவர்களை "மக்குகள்" எனப் பெற்றோரும், ஆசிரி யரும், சக மாணவரும் அழைப்பதையும் உதாசீனம் செய் வதையும் பார்க்கலாம். "இவர்கள் மூளையிற் களி மண்ணைத் தவிர வேறொன்றுமில்லை" என ஒதுக்கப்படுகின்றனர். ஆனால் உண்மையில் அதிக கவனமெடுத்துக் கற்பிக்கப்பட வேண்டியோர் இவ்வகை மாணவர்களேயாவர். இவர்களது உளவியல், உடலியற் குறைபாடுகள் கண்டு பிடிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படக் கூடிய வகையிற் கற்பித்தல் நடைபெற்றால் இம்மாணவரும் திறமை சாலிகளாக வரக்கூடும்.

மந்தம் என்பது சார்பானவொரு சொல்லாகும். பாடசாலையிற் பிற்போக்காயுள்ள மாணவனுக்கும், பல் கலைக் கழகத்திற் பிற்போக்காயுள்ள மாணவனுக்குமிடையே பலத்த வேறுபாடிருக்கும். பல்கலைக் கழக மாணவன் சராசரி நுண்மதியிலும் கூடியவனாயிருப்பான். ஆனால் ஏனைய பட்டதாரி மாணவரை விடப் பிற்போக்காயிருப்பான். ஒரு பாடசாலை மாணவன் மந்தமானவன் எனக் கூறும்போது அவனது பாடஅடைவு கால வயதுக்கேற்ற சராசரி பாட அடைவிலும் 20-25 சதவிகிதம் பின்னடைந்ததாயிருக்கும். அவனது அடைவு ஈவு 85 சதவிகிதத்திற்குக் குறை வாயிருக்கும். தனது வகுப்பிலும் ஒரு வகுப்பு குறைந்த வேலை செய்ய முடியாதோரை மந்தமான மாணவர் எனக் கணிக்கலாம். பொதுவாக எல்லாப் பாடங்களிலும் குறை வாகப் புள்ளி பெறும் மாணவர் பொதுப் பிற்போக்குடை

யோராவர். இவர்கள் மேல் ஆசிரியர் அதிக கவனஞ் செலுத்த வேண்டும். ஆனால் வேறு சில மாணவர்கள் சில பாடங்களிலே திறமைசாலிகளாகவும், ஏனைய சிலபாடங்களிற் பலவீனமானோராயும் இருப்பர். எண்ணற்றோர் கணிதத்தில் மிகக் குறைந்த புள்ளிகளையே பெறுகின்றனர். இவ்வாறானோருக்கும், அவ்வப் பாடங்களில் அதிக விளக்கமும், பயிற்சியும் அளிக்க வேண்டியது இன்றியமையாதது.

இவ்வாறான பயிற்சிகள் எமது நாட்டின் கிராமப்புற பாடசாலைகளில் இன்று அளிக்கப்படுவது மகிழ்ச்சியான தொரு நிகழ்ச்சியாகும். மந்தமான பிள்ளைகள் உட்பட, பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் தம் மாணவரை வகுப்பு ஆசிரியர் பாடசாலை நேரத்திற்கு அப்பாலும், சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும், விடுமுறைக் காலங்களிலும், மாலை நேரங்களிலும் எவ்வித பணத்திற்காகவுமன்றி, மாணவரிற் கொண்ட பற்றின் காரணமாகவே பயிற்றுவதை அப்பாடசாலைகளிற் காணமுடியும்.

ஆனால் நகர்ப்புறப் பாடசாலைகளில் இப்பண்பினைக் காணமுடிய வில்லை. பாடசாலை விட்டபின் அல்லது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சில மணித்தியாலங்கள் வகுப்புகள் நடைபெறுவதை நகர்ப்புற பாடசாலைகளில் அரிதாகவே காணமுடியும். மாணவர் ஓய்வின்றிப் படிப்பது உளவியல் ரீதியிற் தீங்கை விளைவிக்கும் என அவ்வாசிரியர் வாதிடக் கூடும். எனினும் நகர்ப்புற மாணவர் அதைவிடப் பன்மடங்கு நேரத்தை டியூசனிற் கழிக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களிலே பள்ளிக்கூடக் கற்றலை விட, டியூசன் வகுப்பிற்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. இந்நிலைமை கிராமப்

புறப் பள்ளிக்கூடங்களிற் கிடையாது. ஆசிரியர் மனமுவந்து தம் மாண்வரைப் பயிற்றும் பண்பு அங்கு காணப்படுகின்றது.

எமது நகரப் பாடசாலைகளில் சில வேளைகளில் நூற்றுக்கணக்கான மாணவர் ஒரே பாடசாலை மூலம் க.பொ.த. சாதாரண தர அல்லது உயர்தரப் பரீட்சைகளிற் சித்தியடைகின்றனர். அதேவேளை, இதே பாடசாலைகளிற் பன்நூற்றுக் கணக்கானோர் சித்தியடையத் தவறுகின்றனர். எனவே விகிதாசாரப்படி பார்த்தால், கிராமப்புற மாணவர் பொதுப்பரீட்சைகளில் அதிகம் சித்தியடைகின்றனர் எனக் கூறல் பொருந்தும். பட்டினங்களில் கிடைக்கும் கல்வி வசதிகளில் அரைவாசியாவது கிடைத்தால் எமது கிராமப்புற மாணவர் இவர்களை நிச்சயம் மேவுவர் என்பது ஏற்கக் கூடியதே.

மாணவர் கற்றலில் மந்தமடைவதற்கான காரணங்கள் பலவுள. இயற்கையான உள அமைப்பினாலும் மந்த புத்தி ஏற்பட்டு, விடயங்களுக்கு கிடையேயான தொடர்பறிதல் குறைவாயிருக்கலாம். பயம், நரம்புக்கோளாறு, அடிக்கடி தோல்வியேற்படுவதனால் ஏற்படும் தயக்கம் போன்றனவும் மனவெழுச்சியைப் பாதிக்கலாம். கண்பார்வைக் குறைவு, காதுகேட்டல் குறைவு பேச்சுச்சக்தி குறைவு என்பன போன்ற உடல் நிலையும் காலக்கிரமத்தில் பிற்போக்கை ஏற்படுத்தலாம். பாடசலை, வீடு, சமூகம், ஆசிரியர்-மாணவர் தொடர்பு என்பனவற்றால் ஏற்படும் சூழற் காரணிகளும் இந் நிலைக்குக் காரணமாகலாம். எனவே, ஒரு மாணவனை இக்காரணங்களுள் ஒன்றோ பலவோ சேர்ந்து மந்த புத்தியுள்ளவனாக்கலாம்.

இந்நிலை ஏற்படாது தடுப்பதும், அவ்வாறு ஏற்பட்டால் நீக்குவதும் இயலாத காரியங்களல்ல. பாடசாலைகளுக்கு மாணவர் வருவது வெறுமனே புத்தகங்களைக் கற்பதற்காக மட்டுமல்ல, முறையாகக் கற்பதற்குமாகும். வகுப்பிலுள்ள திறமையான மாணவரை மட்டுமே வழிப்படுத்துவதாகக் கற்பித்தல்முறை அமையக்கூடாது. சராசரி மாணவரையும் கூட நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும், தமக்கும் தம் தேசத்திற்கும் உதவுபவர்களாகவும் மாற்ற வேண்டியது ஆசிரியர் பணி. எனவே மந்தமான மாணவருக்கு பரிகாரக் கற்பித்தல் மிக அவசியமாகும்.

ஒரு வகுப்பைப் பல பிரிவுகளாக்கும்போது, இவ்வா றான மாணவரை ஒரு பிரிவில் வைத்துக் கற்பித்தல் சிறந்தமுறை. ஆனால் இது தாழ்வுச் சிக்கலை ஏற்படுத்தி அவர்களை மேலுஞ் சீரழியச் செய்யவுங்கூடும். எனவே இவ்வாறு செய்வதைவிட, ஏனைய மாணவர்களோடு இவர் களையும் வைத்து ஆனால் இவர்கள் மேல் அதிக கவனஞ் செலுத்திக் கற்பித்தல் அதைவிடச் சிறந்த முறையாகும். இம்மாணவர்களுக்கும் ஏனைய மாணவர்கள் ஆசிரியர் களுக்குமிடையே நல்ல தொடர்புகளை ஏற்படுத்தல், பொறுப்புக்களைக் கொடுத்தல், எப்போதும் தோல்வி யடையாமலும், அவர்கள் அடிக்கடி வெற்றி பெறக் கூடிய வாறும் இலகுவான பயிற்சிகளிலிருந்து ஆரம்பித்தல், ஆரம்ப வகுப்புகளாயின் விளையாட்டு மூலம் கற்பித்தல், வெளிக்கள வேலைகள் அளித்தல், கைப்பணிகளில் ஈடு படுத்தல், காட்சித்துணைக் கருவிகளை உபயோகித்தல், அவர்களின் முன்னேற்றத்தை அடிக்கடி மதிப்பிட்டு

கற்பித்தல் முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல் போன்றன மூலம் மந்த மாணவரையும் புத்திசாலிக் ளாக்கலாம். இவற்றோடு அவர்களது வீட்டு நிலைமை களும், தொடர்புகளும் சீரடைந்தாற்றான் முன்னேற்றம் பூரணத்துவம் அடைய முடியும்.

பாடசாலைகளிலே, புத்திசாலி மாணவர் மட்டுமன்றி எல்லா மாணவருமே முறையாக வழிகாட்டப்பட்டு, எதிர்கால வாழ்க்கையை நன்கமைக்கக் கூடியவாறு பயிற்றப்பட வேண்டும். பிரமாண்டமான கட்டடங்களும், கம்பீரமான மண்டபங்களும், சகல வசதிகளும் பொருந்திய வகுப்பறை களும் மட்டுமே கல்விக்கூடமல்ல. இவையெல்லாம் மாணவர் கல்வி பெறுவதை இலகுவாக்குவதற்கேயாகும். அங்குள்ள மாணவரின் ஒழுக்கம், பண்பாடு, கல்வி முன்னேற்றத்தைக் கொண்டே கல்வியின் தரம் அளவிடப் படும். மாணவர் பாடசாலையை விட்டு வெளியேறும்போது அங்குள்ள கட்டடங்களின் கற்களையும், அலங்கார மேசை கதிரைகளையும் தூக்கிச் செல்வதில்லை. நாம் அளிக்கும் கல்வியையும் பயிற்சியையும் ஒழுக்க சீலத்தையுமே சுமந்து செல்வர். அவற்றையளிப்பதே உண்மைக் கல்வி. வாழ்க்கைக்கு உறுதுணையாய் வருவது தூய நற்கல்வி.

வளர்மதி, மதி:1 கலை:6
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
கொழும்பு, 1976,
பக்: 2–6.

# 8.

# கல்வியும் கால மாற்றமும்

பேராதனைப் பல்கலைக் கழக கல்விப் பீடத்தைச் சேர்ந்த சிரேட்ட விரிவுரையாளர் ப. சந்திரசேகரம் அவர்கள் (பின்னர் யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பேராசிரியரும், கல்வித்துறைத் தலைவரும்) ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டு ஐரோப்பாவின் கல்வித் தத்துவங்களிற் செல்வாக்குச் செலுத்தியது ரூசோவின் கோட்பாடுகளாகும். எப்பாதையில் நடந்து சென்றாலும், எக் கதவினைத் திறந்தாலும் அங்கு ரூசோவின் கல்வித் தத்துவங்களைக் காண்கிறோம் எனக் கூறுமளவிற்கு அது வியாபித்திருந்தது. ரூசோ தனது "எமிலி"யை 1760இல் வெளியிட்டார். "எமிலி" பிறப்பதற்குக் காலாக இருந்தது டானியல் டிபோவின் "றொபின்சன் குரூசோ." இது வெளியிடப்பட்டது 1719இல் ஆகும். றொபின்சன் குரூசோவின் கருவை றொபட் நொக்சின் இலங்கை பற்றிய நூலில் காணலாம். இந்நாட்டில் இருபது வருடங்கள் வாழ்ந்து, ஐரோப்பா மீண்ட நொக்ஸ் தனது இலங்கை அனுபவங்களை எடுத்துக் கூறுவதே An Historical Relation of Ceylon எனும் இந் நூல். இது வெளிவந்தது 1691 இல் ஆகும்.

எனவே, தர்க்க ரீதியிற் பார்க்கும் போது, ஐரோப்பாவில் ஆதிக்கம் செலுத்திய ரூசோ கல்வித் தத்துவம் 17ஆம் நூற்றாண்டைய கண்டி இராச்சியத்தில் அரும்பி மலர்ந்ததெனக் கொள்ளலாம். மேலைத்தேயக் கல்வி வளர்ச்சிக்கான ஆரம்ப முனைப்பைக் கண்டி இராச்சியமே அளித்தது எனக்

கருத இடமுண்டு என்பதே ப. சந்திரசேகரம் அவர்கள் வெளியிட்ட கருத்தாகும்.

ஆரம்ப காலத்திலிருந்தே இந்நாட்டுக் கல்வி முறை சிறப்பான ஒன்றாக விளங்கி வந்திருக்கிறது. ஆனால் ஐரோப்பியர் வருகையோடு இந்நிலையில் மாற்றம் ஏற்படு கின்றது. குறிப்பாக, ஆங்கிலேயர் தமக்குத் தேவையான இலிகிதர்களையும் கீழ்மட்ட உத்தியோகஸ்தர்களையும் உற் பத்தி செய்வதற்கான ஒன்றாகவே தமது கல்வி முறையை இங்கு அமைத்தனர். சேக்ஸ்பியரைப் பற்றியும், மில்டனைப் பற்றியும், ஏழாம் ஹென்றியைப் பற்றியும், விக்டோரியா மஹாராணியைப் பற்றியும் நாம் அறிந்த அளவு எமது பண்டைய அரசர்களைப் பற்றியும், அறிஞர்களைப் பற்றியும் அறிந்திருக்கவில்லை. சில வேளைகளில் ஆங்கிலேயரை விட அதிகமாகவே அவர்களது பாரம்பரியங்களைப் பற்றி நாம் அறிந்திருந்தோம்.

இவ்வாறான நிலைக்கு ஓர் உதாரணம் கூறலாம். வெளியூரிலிருந்து கொழும்பு பார்க்கச் செல்பவர்கள் மிருகக் காட்சிசாலை, அரும்பொருட்சாலை, காலிமுகத் திடல், பண்டார நாயகா சர்வதேச மகாநாட்டு மண்டபம், கட்டு நாயக்க விமானத்தளம், துறைமுகம் போன்றவற்றை நிச்சயம் பார்ப்பர். ஆனால் கடந்த பல்லாண்டுகளாக கொழும் பில் வாழும் எனது நண்பரொருவர் தனது சீவியத்திலேயே தெகிவளை மிருகக் காட்சிச்சாலைக்குச் சென்றதில்லை. அதைப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவருக்கு உண்டு. ஆயினும், அது அருகே இருக்கின்ற காரணத்தினால் அதைப் பார்த்து விடுவதற்கான அவசரம் இன்னும் அவரிடம் இல்லை.

அருகே இருக்கும் இவரைவிடத் தூரத்தே இருப்பவர் மிருகக் காட்சிச்சாலையை நன்கு அறிந்திருக்கின்றனர்.

கல்முனைப் பிரதேசப் பாடசாலைகளில் இரு பண்புகளை நாம் இன்றும் அவதானிக்கக் கூடியதாயுள்ளது. இன்றைய கல்வித் திட்டத்தின் கீழான தேசிய பொது முறைக் கல்வி இந்நாட்டின் சகல பாடசாலைகளிலும் ஒரே விதமாகவே அமைந்துள்ளது. குறிப்பிட்ட பாடங்களே நாடெங்கும் கற்பிக்கப்படுகின்றன. ஒரே பாடத்திட்டமும், பாடநூல்களும் உபயோகிக்கப்படுகின்றன. எனவே, எங்கு நல்லாசிரியர்கள் மாணாக்கரின் நலனில் அக்கறை கொள்கிறார்களோ அவ்விடத்தில் கல்வி நிலை சிறப்பாயிருக்கும். ஏனையவிடத்தில் நிலைமை மோசமாக இருக்கும். இதை உணராத சில பெற்றோர் இன்றும் கொழும்பு, கண்டி யாழ்ப்பாணக் கல்லூரிகளே சிறந்தவை, எமது மஹா வித்தியாலயங்கள் மோசமானவையென நினைக்கின்றனர். உண்மை நிலை அவ்வாறல்ல. இந் நாட்டின் எந்தவொரு சிறந்த கல்லூரியோடும் ஈடுகொடுக்கக் கூடிய சில மஹா வித்தியாலயங்கள் எமது பகுதியிலும் உள்ளன என்பதைப் புள்ளி விவரங்களின் மூலம் நிரூபிக்க முடியும். தூரத்துக் காட்சியே கண்ணுக்கு இதமானது எனும் கொள்கையை விடுத்து, எமது முற்றத்து மல்லிகையும் மணக்கும் எனும் தத்துவத்தை நாம் உணரவேண்டும்.

இவ்விடயம் தொடர்பாகச் சில பெற்றோருடன், குறிப்பாக வெளியூரில் கல்வி கற்கும் பிள்ளைகளின் தந்தைமார்களோடு வாதிடும் சில சந்தர்ப்பங்கள் கிடைத்தன.

அவர்கள் கூறுவது: "உங்கள் பாடசாலைகளில் கல்வித் தரம் நல்லதுதான், ஆனால் பிள்ளைகளின், ஆசிரியர்களின் பழக்க வழக்கம் சரியில்லையே." இவ்வாறு கூறுவோர் இப் பாடசாலைகளின் ஒழுக்கம் தரம் எவ்வாறு அதிகரிக்க வேண்டுமென எதிர்பார்க்கிறார்கள்? ஓரளவு பண்பட்ட குடும்பத்தினர் தமது பிள்ளைகளை இப் பாடசாலைகளுக்கு அனுப்புவதன் மூலமும் ஈடுபாடு காட்டுவதன் மூலமும் இக் கல்லூரிகளின் ஒழுக்கத் தரத்தைக் கூட்டவும் முயலலாம்.

இரண்டாவது பண்பு, இன்று பொருளாதார வசதியற்ற குடும்பத்துப் பிள்ளைகளே கல்வித்துறையில் முன்னிற்கின்றனர். நாம் அவதானிக்கும் ஒரு பொதுப்பண்பு இதுவாகும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வசதிபடைத்த குடும்பத்துப் பிள்ளைகள் வகுப்புகளில் பின் நிற்கிறார்கள். படிப்பதற்கு, படுப்பதற்கு, உண்பதற்கு, உடுப்பதற்கு, கஷ்டப்படும் சாதாரண வீட்டுப் பிள்ளைகளே படிப்பில் முன் நிற்கிறார்கள்; வாழ்வில் உயர்கிறார்கள். இதற்கு விதிவிலக்கான சில பெரிய இடத்துப் பிள்ளைகளும் உண்டு. படிப்பில் அவர்கள் கவனம் செலுத்துகின்றனர். எனினும் பெரிய இடத்துப் பிள்ளைகள் அறிவுத்துறையில் பின் நிற்பது ஒரு பொதுப்பண்பாக உள்ளது. புதுப் பணக்காரரின் பிள்ளைகளிடையே இப்பண்பை அதிகமாகக் காணலாம். தாம் சிறு வயதில் உழன்று அல்லற்பட்டது போன்று தமது குழந்தைகளும் இன்னல் அனுபவிக்கக்கூடாது என்பதற்காக இவ்வாறான சில பெற்றோர் அளவுக்கு மீறிய வசதிகளை அளித்து விடுகின்றனர். காலையில் கல்லூரிக்கு வரும் பொழுது நாளாந்தரச் செலவுக்காகத் தினசரி பத்து ரூபா

கொண்டுவரும் மாணவர்களையும் நாம் சந்தித்திருக்கிறோம். வசதியைக் கொர்டுக்கின்றோம் என நினைத்து அளவுக்கு மீறிய சலுகைகளை எம் பெற்றோர் கொடுத்தால் அது எவ்வகையிலும் அம்மாணவருக்கு உதவப் போவதில்லை. இதையிட்டு அப்பெற்றோர் சிந்திக்க வேண்டும்.

ஸாஹிறா
ஸாஹிறாக் கல்லூரி, கல்முனை
டிசம்பர் – 1976,
பக்: 2

# 9.

# பாடசாலை நிர்வாகம்

இலங்கையின் நகரப் புறங்களில் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகச் சிறப்புற்று விளங்கும் பல கல்லூரிகள் இருக்கின்றன. இன்று கிராமப்புறங்களிலும், அவ்வாறான கல்லூரிகள் வளர்ந்து வருகின்றன. அவற்றின் நிர்வாகமும், கல்வித் தரமும் இணைந்து செயற்பட்டு முன்னேறும் போதே அவற்றின் நிலை சிறப்படையும்.

கல்வி நிர்வாகம் எனும் பொழுது கியூலிக், பொபிட், மேரி பாக்கர் பொலட், கிரிபித், பேர்னாட், சைமன், ஆர்கிறிஸ், கெட்ஸல், ஹாட்லி எனும் கல்வி நிர்வாகத் தத்துவ விற்பன்னர்களின் பெயர்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. செயலாட்சி முறை மனிதத் தொடர்பு, சமூக இயல் ஆகியவற்றின் அடிப்படையில் கல்வியின் விழுமியங்களும் வினை முறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டும், பன்முகப்படுத்தப்பட்டும் உள்ளன. ஆசிரியன் என்போன் கற்பிப்போனாயும், கற்பவனாயும் இருத்தல் வேண்டும். அதிபர் என்போன் கற்றல், கற்பித்தலைப் பற்றி நன்கறிந்தவனாயும், கற்பித்தலில் ஈடுபடுவோனாயும் இருத்தல் வேண்டும். கல்வி அலுவலர் என்போன் இவை எல்லாவற்றையும் பற்றி நன்கறிந்தவனாயும், மேற்பார்வைக் கலையில் தேர்ந்தவனாயும் இருத்தல் வேண்டும். இவை ஒருங்கே இணையும்போது ஒரு பாடசாலையின் ஒரு பிரதேசத்தின் கல்வி நிலை நிச்சயம் முன்னேறும் எனக் கூறலாம்.

வளர்வுறும் பாடசாலைகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவது இயல்பு. இப்பிரச்சினைகள் பாடசாலைகளுக்கு மட்டுமல்லாது, கல்வி நிர்வாகத்திற்கே பொதுப் படையானவையாகும். கல்வி நிர்வாகத்துறையில் எதற்கு முதலிடம் அளிப்பது; நிர்வாகிகளிடையே தோன்றும் முரண்பட்ட கருத்துக்களை எவ்வாறு நீக்குவது, அரசியல் தலையீட்டை எவ்வாறு தவிர்க்கலாம் அல்லது சமாளிக்கலாம், திணைக்களங்களுக்கிடையே குறைவான இயைபு இருப்பின் அதை எவ்வாறு நீக்கலாம், போதிய நிதிச் சலுகைகள் இல்லாமை, மேல்கீழ் அதிகாரிகளிடையே தொடர்பு, தகுதியும் திறமையுமற்றவர்கள் பதிவியேற்கும் போது ஏற்படும் சிக்கல்கள், பல துறைகளுக்கிடையே சமன்பாடின்மை, கிராம-நகர ஏற்றத்தாழ்வு என்பன இவ்வாறு தோன்றக்கூடிய சில பொதுப் பிரச்சினைகளாகும்.

இவற்றுள் இன்று பரவலாகப் பேசப்படுவது அரசியல் தலையீடு என்பதாகும். அரசியல்வாதிகள் அடிக்கடி தமது பணிகளிற் தலையீட்டுக் குழப்புகிறார்கள் எனப் பலர் குறைப்படுகின்றனர். ஆனால் இதை ஒரு குறை எனக் கருதமுடியாது. அரசு அதிகாரிகளிடம் தமது அலுவல்களை நேரடியாக முடித்துக் கொள்ளத் தெரியாத பாமர மக்களும் அல்லது அநீதி இழைக்கப்படும் வேளையில் அதற்கு நிவாரணம் பெற விழையும் மக்களுமே அரசியல் அதிகாரம் மூலம் தமது பணிகளைச் செய்து முடிக்க விரும்புகின்றனர். நாம் சில அலுவலகங்களிற்கு நேரடியாகச் சென்றாலும் மாதக் கணக்கில் முடிவடையாத கருமங்கள், அரசியல்வாதி ஒருவரின் கடிதம் அல்லது தொலைபேசிச் சம்பாசணை மூலம்

சில மணித்தியாலங்களுக்குள் முடிவதைக் காண்கிறோம். இலகுவாகக் காரியங்கள் முடிக்கின்ற ஒரு வழி இருக்கு மாயின் அதை ஏன் மக்கள் நாடக்கூடாது? ஆகையால், அரசியல் தலையீடு என்பது விரும்பத்தகாத, வேண்டப் படாத் ஒன்று அல்ல. நிர்வாக இயந்திரத்தைப் பல சந்தர்ப் பங்களில் முடுக்கி விடுவதற்குத் தேவையான ஓர் ஆயுத மாகவே நாம் அதை நினைத்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

எனினும் வெளியாரின் அனாவசியத் தலையீடின்றி இயங்கும் பாடசாலை முன்னேறுவதற்கான சாதக நிலை யுண்டு. அதற்கு அனுகூலமாகத் திட்டமிடல், நிரலிடல் என்பன முறையாகச் செய்யப்படல் வேண்டும். நாம் என்ன செய்யப் போகின்றோம், எமது இலக்குகள் யாவை, இவற்றை அடைவதற்குப் பொருத்தமான முறைகள் என்ன, யாது காலவரையறையுள் அவற்றை அடையப் போகின்றோம் என்பன முன்கூட்டியே பொதுப்படையாகத் திட்டமிடப்படல் வேண்டும்.

இவ்வாறு திட்டமிடும்பொழுது கல்லூரி அதிபர் தன்னிச்சையான முடிவுகளுக்கு வருதல் கூடாது. பெற்றோர்-ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை ஆசிரியர்கள், கல்வி அலுவலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் என்போர் கலந்து ஆலோசிக்கப்பட்டு அவர்களது சாதகபாதக அபிப்பிராயங் கள் காய்தல் உவத்தலின்றிக் கவனத்திற்கு எடுக்கப்படல் வேண்டும்.

கல்லூரியில் உள்ள ஆசிரியர்கள் அனைவரது அபிப் பிராயத்திற்கும் இடம் கொடுக்கப்படுவதோடு, எவ்வரையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக்கூடாது. எல்லா ஆசிரியர் களும் எமது நம்பிக்கைக்கு உரியோர் எனும் அடிப் படையிலேயே அவர்களை நடத்த வேண்டும். அதிபரில் நம்பிக்கை அற்றோர் எவரேனும் இருப்பின் அவர்களைப் பலவந்தமாக வெளியேற்றுவதைவிட, அதிபரின் நற் செயல்கள் மூலம் அவர்களையும் விசுவாசிகளாக்க முடியு மாயின் அது நிச்சயம் பயனளிக்கும்.

ஆகையால் கல்லூரி ஒன்றின் வருங்கால முன்னேற்றம் பற்றிய திட்டமிடலில் எல்லோரது ஆலோசனைகட்கும் அபிப்பிராயங்கட்கும் இடமளிக்கப்படல் வேண்டும். ஆனால் இறுதித் தீர்மானம் தீர்க்கமானதாயும் வலுவுள்ளதாயும் அதிபரின் தனித்துவத்தையும் தலைமைத்துவத்தையும் நிலை நாட்டுவதாகவும் அமைதல் வேண்டும். இத் தீர்மானங்கள் முறையாக அமுல் செய்யப்பட வேண்டுமாயின் நிரலிடல் என்பது இடம்பெறுதல் வேண்டும். நிரலிடல் என்பது பாடசாலை நிர்வாகம் சிறுசிறு அலகுகளாகப் பிரிக்கப் பட்டுப் பகுதித் தலைவர்களின் கைகளிலேயே ஒப்படைக்கப் படுதல் ஆகும். இதைப் பன்முகப்படுத்தப்பட்ட அதிகாரப் பங்கீடு எனவும் கொள்ளலாம்.

பெரிய பாடசாலைகளின் பணிகள் யாவும் அதிபரின் கையிலேயே தங்கியிருந்தால் அது என்றோ நிச்சயம் தோல்வி அடையும். இதை விடுத்து நிரலிடல் முறை கைக்கொள்ளப்படுவது சிறந்ததாகும். பாடசாலையில் உள்ள கணக்கு வைப்பு முறைகளும், அதிகாரங்களும், நிர்வாகமும்

பரவலாக்கப்படுதல் வேண்டும். வளர்வுறும் பாடசாலைகள் மேலும் வளர்ச்சியடைய இதுவே உதவியாய் இருக்கும். ஏனெனில் ஓர் அதிபருடைய வல்லமையினாலோ அல்லது சில ஆசிரியர்களின் ஆதரவினாலோ மட்டும் பாடசாலையொன்று வளரமுடியாது. கல்வித் தரம் முன்னேற முடியாது. மாணவரின் அக்கறை, அரசியலாளரின் ஆசி, கல்வி அலுவலர்களின் ஆதரவு, ஆசிரியர்களின் ஒத்துழைப்பு, பெற்றோர், பழைய மாணவர், பிரமுகர் என்போருடைய தார்மீகப் பற்று என்பனவற்றின் கூட்டு மொத்தமே ஒரு பாடசாலையின் வளர்ச்சியாகும்.

ஸாஹிறா
ஸாஹிறா கல்லூரி, கல்முனை
ஜனவரி–பெப்ரவரி 1977
பக்: 2–7.

# 10.

# நன்னூலாரின் நல்லாசிரியன்

ஒரு சமூகத்தை உயர்த்தும் கல்வியை மாணவர்களுக்கு அளிப்பவன் ஆசிரியன். கல்வி என்பதைக் கல்லியெடுத்தல், தோண்டுதல் எனவும் கொள்ளலாம். கல்லியெடுத்தல் என்பது மாணவரின் உள்ளத்திலே புதைந்து கிடக்கும் அறிவு, ஆற்றல் என்பவற்றை வெளிக்கொணர்ந்து அதன்மூலம் அறியாமையை நீக்கி, மாணவரை முழுமையும், அழகும் பெற வைப்பதாகும். இங்கு அழகு என்பது தோலின் நிறத்தினாலோ உடலின் அமைப்பினாலோ, புறத்தோற்றத்திற் தெரிகின்ற அழகல்ல. உள்ளம் முழுமை பெறுவதினால் வெளிப்படுகின்ற அறிவு, வீரம், நேர்மை, நம்பிக்கை, மதிப்பு, உண்மை என்பவற்றின் கூட்டு மொத்தமே இங்கு அழகு எனப்படுகின்றது. இந்நிலையை ஏற்படுத்தும் கல்வியை அளிப்பவன் கொடையாளன். அக்கொடையாளனான ஆசிரியன் ஒரு ஞானவிளக்கு.

இவ்வாசிரியன் எவ்வாறிருக்க வேண்டும் எனக் கூறும் நூல்களும், ஏடுகளும் ஏராளம். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட பவணந்தி முனிவனின் நன்னூலில் இருந்து சமீபத்தில் கல்வியமைச்சினால் வெளியிடப்பட்ட ஆசிரியர் கை நூல்வரை நல்லாசிரியன் ஒருவன் எவ்வாறிக்க வேண்டும், அவனுடைய கடமைகள் யாவை, அவனிடம் எதிர்பார்க்கப்படும் நற்பண்புகள் எவை என்பன பற்றி வரைவிலக்கணம் கூறுகின்றன.

நல்லாசிரியனது வரைவிலக்கணத்தைப் பவணந்தி முனிவன் தனது நன்னூலிற் பின்வருமாறு கூறுகின்றான்:

குலனரு டெய்வங் கொள்கை மேன்மை
கலைபயி றெளிவு கட்டுரை வன்மை
நிலமலை நிலைகோன் மலர்நிகர் மாட்சியும்
உலகிய லறிவோ டுயர்குண மிணையவும்
அமைபவ நூலுரை யாசிரி யன்னே.

உயர்குடிப் பிறப்பும், காருண்ணியமும், ஆண்டவன் வழிபாடு மாகிய இவைகளால் எய்திய மேன்மையும், பல நூல்களிலே பழகிய தோற்றமும், நூற்பொருளை மாணாக்கர் எளிதில் உணரும்படி தொடுத்துச் சொல்லும் வன்மையும், நிலத்தையும் மலையையுந் துலாக்கோலையும் பூவையுமொத்த குணங்களும், உலக நடையை அறியும் அறிவும், உயர்வாகிய குணங்கள் இவை போல்வன பிறவும் நிறையப் பெற்றவன் நூல் கற்பிக்கும் ஆசிரியனாவான்.

இதேபோன்று நல்லாசிரியராகாதவருடைய இலக்கணத்தையும் நன்னூலார் கூறியுள்ளார்.

மொழிகுண மின்மையு மிழிகுண வியல்பும்
அழுக்கா றவா வஞ்ச மச்ச மாடலுங்
கழற்குட மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங் கொப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோ ரிலரா சிரியரா குதலே

பாடஞ் சொல்லும் குணமில்லாமையையும், இழி குணமாகிய இயற்கையையும் பிறருக்கு வரும் கல்வியைக் குறித்துக் கொள்ளும் பொறாமையையும், பொருளின் மேல்

அதிகமாக வைக்கும் ஆசையையும், மெய்ப்பொருளைக் காட்டி வஞ்சித்தலையும், கேட்போர்க்கு அச்சம் உண்டாகப் பேசுதலையும், கழற்குடமும் மடற்பனையும் பருத்திற் குண்டிகையும் முடத்தெங்கும் ஆகிய நான்கினையும் ஒப்பென்று சொல்ல, மாறுபாடு கொண்ட கருத்தையும் தம்மிடத்திலுடையவர் கற்பிக்கும் ஆசிரியராகுதல் இலராவர்.

முன்னைய தசாப்தங்களில் இந்நாட்டில் வாழும் முஸ்லிம்கள் வர்த்தக சமூகத்தினர் என அழைக்கப்பட்டு வந்தோம். இன்று அந்நிலை மாறி நாம் ஆசிரிய சமூகம் என அழைக்கப்படுகின்றோம். 1956ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் இளைஞர் களும் யுவதிகளும் ஆசிரிய நியமனம் பெற்றிருக்கின்றனர். ஏறக்குறைய எல்லோருமே பலாலியிலும், அட்டாளைச் சேனையிலும், அழுத்காமத்திலும் பயிற்சி பெற்றுள்ளனர். வெகுசிலரைத் தவிரப் பெரும்பாலோர் இன்று தத்தமது சொந்த ஊரில் கற்பிக்கும் போது தன்னிடம் கற்கும் பிள்ளைகள் எல்லாமே தனது இனத்தவர்களின் குழந்தைக ளாகவும், அயலவர்களின் குழந்தைகளாகவும், தெரிந்தவர் களின் குழந்தைகளாகவும் இருப்பதைக் காணலாம்.

வெறுமனே சம்பளத்திற்கு மாத்திரம் சேவை செய்யாது தனது உற்றாரின் குழந்தைகளின் வளர்ச்சிக்கும், ஊரவர் களின் குழந்தைகளின் உயர்ச்சிக்கும், தான் பிறந்து வளர்ந்து வாழ்ந்து மௌத்தாகி அடங்கப்போகும் மண்ணின் மலர்ச் சிக்கும் பாடுபடுபவனாக உயர வேண்டிய ஒரு கட்டாயம் இங்கு ஏற்படுகின்றது.

இதனால் ஆசிரியன் ஒருவன் அத்தொழிலையே முதற் தொழிலாகக் கொள்ள் வேண்டும். தனது கவனத்தில் பெரும் பகுதியைத் தனது முதற் தொழிலிலேயே செலுத்தல் வேண்டும். எஞ்சிய நேரமும் அவகாசமும் கவனமும் மட்டுமே மாணிக்கக்கல் வியாபாரத்திலோ, கடை நடத்து வதிலோ, வேளாண்மை செய்வதிலேயோ செலவழிக்கப் படல் வேண்டும்.

நல்லாசிரியன் ஒருவன் தரமான நூல்களையும், பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் அடிக்கடி வாசித்தல் வேண்டும். தனது பாடங்களைப் பற்றியும், பாடத்திட்டங் களைப் பற்றியும், பாடக்குறிப்புகள் பற்றியும் தெளிந்த அறிவுடையவனாயிருத்தல் வேண்டும். ஒரு வண்டிக் காரன் வீட்டில் மூக்கணக்கயிறு, கேட்டிக்கம்பு, வைக்கோல் போன்றன இருப்பது போல்; ஒரு விவசாயின் வீட்டில் சாக்குக் கட்டு, கைப்பெட்டி, கடகம், வேலைக்காரன் கம்பு போன்றன இருப்பது போல; ஒரு வியாபாரின் வீட்டில் கொச்சிக்காய், வெங்காயம், போன்றன ஒரு மூலையில் பரப்பிக்கிடப்பது போல்; நல்லாசிரியன் ஒருவன் வீட்டில் பாடங்களோடு தொடர்பான நூல்கள், பாடத்திட்டங்கள், பாடக்குறிப்புகள், தரமான பொதுநூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் காணப்படல் வேண்டும். எமது ஆசிரியர்களுட் பெரும்பாலோ ரிடம் இப்பண்பு இருக்கின்ற காரணத்தினாலேதான் முஸ்லிம் சமூகத்தின் கல்வி நிலை முன்னேறுகிறது. அவ்வாறாகப் பண்புகள் குறையக் காணப்படுகின்ற ஒரு சில ஆசிரியர் களும் தம் நிலைமையை மாற்றிக் கொண்டால் முஸ்லிம் சமுதாயம் நிச்சயம் பெருமைப்பட முடியும்.

ஆசிரிய வர்க்கத்தினரில், அடிக்கடி குறைகாணும் பண்பு எமது சமூகத்திலுண்டு என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். சமுதாய வளர்ச்சிக்கு இது ஒரு சுகதேகியான பண்பு அல்ல. கல்வித்துறையில் நாம் ஓரளவாவது முன்னேறியிருக்கிறோமென்றால் அரசாங் கங்கள் தாராளமாக ஆசிரிய நியமனங்கள் வழங்கியதோடு, பல மகா வித்தியாலங்கள் ஆரம்பிக்கப்பட்டதோடு, ஆசிரியர் களின் பணியும் கணிசமான பங்கு வகித்துள்ளது. அத் தகைய ஆசிரியரைப் பெரியோர்கள் கௌரவித்து நடத்தும் பொழுதே மாணவர்களும் தம் ஆசான்களைக் கௌரவித்து நடக்கப் பழகுவர். அதுவே சமூகத்தின் நலமான வளர்ச்சிக்கு வளமாக அமையும்.

**ஸாஹிறா**

**ஸாஹிறா கல்லூரி, கல்முனை,**

**மார்ச் – 1977**

**பக்: 2.**

# 11.

# நன்னூலாரின் நல்மாணாக்கன்

மாணவர்களை மனதில் வைத்து இக்கட்டுரை எழுதப் படுகின்றது. சில நாட்களுக்கு முன்னர் இலங்கை இஸ்லாமிய ஆசிரிய சங்கத்தினர் தமது 25 ஆண்டு கால சேவையை நிறைவு செய்யுமுகமாக வெள்ளிவிழா ஒன்றைக் கொண்டா டினர். அவ்விழாவிலே "இஸ்லாமிய ஆசிரியன்" எனும் மலர் ஒன்று வெளியிடப்பட்டது. அச்சஞ்சிகையிலே சங்கத்தின் பொருளாளர் ஜனாப். ஏ.ஸீ.எம். இப்றாகீம் அவர்கள் "வரலாற்றுப் பின்னணியில் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்" எனும் கட்டுரை ஒன்றில் கூறியுள்ள விடயம் எமக்குப் பெருமை தருவதாகும். முஸ்லிம் பெண்களில் முதல் பயிற்றப்பட்ட ஆசிரியையாக வெளிவந்த பெருமை சாய்ந்த மருதுவைச் சேர்ந்த திருமதி. பாத்துமுத்து ஹலால் தீன் என்பவரைச்சாரும் எனக் குறிப்பிட்டுள்ளார். கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி இச்சாதனையை நிலை நாட்டியுள்ளதைப் பற்றி நாம் எல்லோரும் மிகுந்த பெருமைப்பட முடியும். இவ்வாறான சாதனைகள் இன்னும் பல எமது மாணவர்களினால் செய்யப்பட வேண்டும்.

மாபெரும் செயல்களைச் செய்வதற்கு அடிப்படையாக அமைவது கல்வி. கற்கும்பொழுது எதைக் கற்க வேண்டும். எவ்வாறு கற்க வேண்டும், எவ்வளவு கற்க வேண்டும். அதை என்ன முறையில் கற்க வேண்டும் என மாணவர்கள் அறிந்திருத்தல் வேண்டும்.

நன்னூல் எனும் பழந்தமிழ் இலக்கண நூல் ஒன்று உண்டு. இதை ஆக்கியோனுடைய பெயர் பவணந்தி முனிவன் என்பதாகும். இந்நூலிற்கு யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்கள் திருத்தியும், விளக்கியும், கூட்டியும், புதுக்கியும் உரை எழுதியுள்ளார். இந்நூலின் ஆரம்பப் பகுதியில் பொதுப்பாயிரம் எனும் பகுதி ஒன்று உண்டு. இப்பகுதியில் நூல் வரலாறு, ஆசிரியனது வரலாறு, பாடஞ் சொல்லலினது வரலாறு, மாணாக்கரது வரலாறு, பாடம் கேட்டலின் வரலாறு எனும் பகுதிகள் உள்ளன.

மாணாக்கனது வரலாறு என்பது, மாணாக்கரைப் பற்றிக் கூறுகின்ற வரைவிலக்கணம் ஆகும்.

அன்ன மாவே மண்ணொடு கிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்.

மாணவர்களை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அன்னத்தையும், பசுவையும் போன்றவர்கள் முதல் மாணாக்கர். மண்ணையும், கிளியையும் போன்றவர் நடு மாணாக்கர். ஓட்டைக்குடம், ஆடு, எருமை, பன்னாடை போன்றவர் கடை மாணாக்கர் ஆவர்.

அன்னம் பாலையும், நீரையும், வேறு பிரித்துப் பாலை மாத்திரம் குடிக்கும். முதல் மாணாக்கர் குணத்தையும், குற்றத்தையும் வேறு பிரித்துக் குணத்தை மாத்திரம் கொள்வர். பசு மிகுந்த புல்லையுடைய இடத்தைக் கண்டால் அப்புல்லை வயிறு நிறைய மேய்ந்து பின்பு ஓரிடத்தில்

போய்ப் படுத்து சிறிது சிறிதாக வாயில் வருவித்து மென்று தின்னும்.

மண், விவசாயிகள் வருந்திப் பயிர் செய்யும் முயற்சி அளவினதாகிய விளைவைத் தரும். கிளி தனக்குக் கற்பித்த சொல்லையன்றி வேறொன்றையும் சொல்ல மாட்டாது.

ஓட்டைக் குடத்தில் நீரை விட்டால் அது ஒழுகிவிடும். ஆடு ஒரு செடியிலே தழை நிறைந்திருந்தாலும் வயிறு நிறைய மேயாது செடிதோறும் அலைந்து திரிந்து மேயும். எருமை குளத்து நீரைக் கலக்கி விட்டுக் குடிக்கும். பன்னாடை, தேன் முதலியவற்றைக் கீழே விட்டுவிட்டு அதிலுள்ள குப்பை கூளங்களையும், பூச்சி புழுக்களையும் பற்றிக் கொள்ளும்.

மாணாக்கர் ஆகாதவரைப் பற்றியும் நன்னூல் சூத்திரம் ஒன்றுள்ளது:

களிமடி மானி காமி கள்வன்
பிணிய னேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் றொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் றறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே.

மது அருந்துபவன், சோம்பேறி, அகங்காரம் உடையவன், காமம் உடையவன், திருடன், நோயாளி, அறிவில்லாதவன், மாறுபாடுடையவன், கோபமுடையவன், அளவுக்கு மீறி நித்திரை செய்பவன், புத்தி நுட்பம் இல்லாதவன், பழைய நூல்களைக்கண்டு அஞ்சித் தடு

மாறும் உள்ளத்தையுடையவன், அஞ்சத்தக்கவைகளுக்கும் அஞ்சாதவன், பாவம் செய்பவன், பொய் பேசுபவன் ஆகியோர் மாணாக்கர் ஆகார் என நன்னூல் கூறுகின்றது. இங்குள்ள பிணக்கன், சினத்தன், மந்தன், தறுகணன் ஆகிய சொற்கள் இன்னும் இப் பிரதேசத்தில் உபயோகிக்கப் படுவதைக் கேட்கலாம்.

எமது மாணாக்கர் எல்லோரும் முதன் மாணாக்கராய் இருக்க வேண்டுமெனவே நாம் விரும்புகிறோம். நுண்புத்தி என்பது பிறப்பாலும், வளர்ப்பாலும் வருவதாகும். நாமே எமது அறிவை வளர்த்துக் கொள்ளலாம். அதற்காக மாணவப் பருவத்திலே கல்வியையும் அதனோடு சார்ந்தனவற்றையும் தவிர வேறெதிலும் கவனத்தைத் திருப்பக்கூடாது. பாட சாலை நடைபெறும் எல்லா நாட்களிலும் பாடசாலைக்கு வரவேண்டும். பாடம் தொடங்குவதற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பாவது மாணவன் பாடசாலைக்கு வந்து விடுதல் சாலச்சிறந்தது. மாலை நேரங்களிலும் விடுதலை நாட்களிலும் நடைபெறும் எல்லா வகுப்புகளிலும் மாணவர் பிரசன்னமாயிருக்க வேண்டும். தமது புத்தகங்கள், கொப்பிகள், உபகரணங்கள் யாவும் ஒழுங்காகவும், புனிதமாகவும் பேணப்படுவதோடு, மாதாந்தப் பரீட்சைகள், வருடாந்தப் பரீட்சைகளுக்கு மிகக் கிரமமாகத் தோற்றி, அவற்றில் மிகத் திறமையாகச் செய்ய வேண்டும்.

தமது உடை, ஒழுக்கம், நடத்தை முதலியவற்றிலும் மாணவர் கவனம் செலுத்த வேண்டும். துப்புரவான உடை அணிவதோடு, தலைமயிர், நகம், முதலியன அலங்கோல மாயிருத்தல் கூடாது. நல்ல வார்த்தைகளைப் பேசுதல்,

நல்ல விடயங்களைச் சிந்தித்தல், நல்ல காரியங்களில் ஈடுபடல், பாடசாலைகளில் நடைபெறும் புறக்கிருத்தியங்கள் அனைத்திலும் கலந்து கொள்ளல், தமது பாடசாலை அதிபர், ஆசிரியர், ஊழியர்கள், அங்குவரும் வெளியார் அனைவருக்கும் மிகுந்த மரியாதை செலுத்துதல் போன்ற பண்பாடுகளைப் பழகி, அதன்படி ஒழுகுவதன் மூலம் எமது மாணவர் எல்லோருமே நன் மாணாக்கராக, தலை மாணாக்கராக முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

ஸாஹிறா

ஹாஹிறாக் கல்லூரி, கல்முனை

ஏப்ரல்–மே 1977,

பக்: 2.

# 12.

# இலக்கிய ஈடுபாடும் மொழி வளமும்

இன்றைய முதுசங்களில் எதிர்காலத்துக்கு விட்டுச் செல்வதில் மிக முக்கிய இடம் வகிப்பது இலக்கியமாகும். பண்டைய இராச்சியங்கள் எவ்வாறிருந்தன, மக்கள் வாழ்வு எவ்வாறு அமைந்திருந்தது, கலாசார பாரம்பரியங்கள் யாவை என்பனவற்றை அறிந்து கொள்ள வரலாற்றுச் சான்றுகளும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும் எவ்வாறு உதவுகின்றனவோ, அதேயளவு இலக்கியங்களும் உதவுகின்றன. பழங்காலத் திராவிட நாட்டினதும், தமிழ் மக்களினதும் வாழ்வும் வளமும் எவ்வாறு அமைந்திருந்தன என்பதை அறிய சங்ககால நூல்களைப் போல், பத்துப் பாட்டு, எட்டுத் தொகையைப் போல், பதினெண் மேற் கணக்கு, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களைப் போல் வேறெதுவுமே எமக்கு உதவுவதில்லை.

காலத்தைப் படம் பிடித்துக் காட்டுவது மட்டுமன்றி அவ்வக் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களையும் இறந்தும் இறவாராக்கி, என்றும் வாழச் செய்வதும், அவர்கள் விட்டுச் செல்லும் எழுத்துருவ ஆக்கங்களேயாகும். தாம் வாழும் காலத்தில் ஒருவர் சிறந்த கல்விமானாயிருக்கலாம், சமூக சேவையாளராக இருக்கலாம், பேச்சாளராக இருக் கலாம், அரசியல் மேதாவியாய் இருக்கலாம். ஆனால் நீண்ட காலப் பரப்பில் அவரை அவரது திறமையை, புகழைப் பின்னோருக்கு நிலை நிறுத்துவது எழுத்துருப் பெறும் அவரது பேச்சுகளும், சிந்தனைகளுமேயாகும். அவ்வாறு எழுத்து வடிவம் பெறாவிடில், அவர் இறந்த அன்றே அவரது

திறமை, செயல்வன்மை யாவும் புதைக்கப்பட்டு விடு கின்றன. அதனாற்றான் அறிஞர்கள் தாம் வாழும் காலத்தில் வெறும் வாய்மொழிப் போதனையோடு தமது திறமைகளை நிறுத்திக் கொள்ளாது அவற்றை எழுத்துருவில் வடித்து, முடிந்தளவு நூலுருப் பெறச் செய்தலும் மிக அவசியமாகும்.

வ.வே.சு. ஐயர், மாயூரம் வேதநாயகம்பிள்ளை, ராஜ மய்யர் ஆகியவர்கள் எழுத்துத் துறையிலும் ஈடுபட்டத னாலேயே இன்றும் நினைவு கூரப்படுகின்றனர். சித்தி லெவ்வை, ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், எ.எம்.ஏ. அஸீஸ் போன்றவர்கள் தமது தெளிந்த சிந்தனைகளை எழுத்துருவில் விட்டுச் சென்றதனாலேயே இன்றும் சமுதாயப் போக்கு களிலும் சிந்தனைகளிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். விபுலானந்த அடிகள், ஆறுமுக நாவலர், பாரதியார், சுவாமி ஞானப்பிரகாசர், சோமசுந்தரப் புலவர், பாரதிதாசன், புதுமைப்பித்தன் ரா.பி. சேதுப்பிள்ளை, மு. வரதராசன் போன்ற எண்ணற்றோர் தமது இலக்கியப் பணிகளின் மூலம் இன்றும் செல்வாக்குப் பெற்றுள்ளனர். மார்ட்டின் விக்கிரம சிங்ஹ, ஏர்ஸ்கின்-கோல்டுவெல், ஹார்டி, ஏனஸ்ட் ஹேமிங்வே, ஜேம்ஸ் ஜோய்ஸ், எமிலி சோலா, மாக்சிம் கோர்க்கி, அல்பேட்டா மொறாவியா, டி.எச். லோறான்ஸ், சரத்சந்திர சட்டர்ஜி, தாகூர் என்போரெல்லாம் அவர்களது இலக்கியப் பணிகளின் மூலம் இன்றும் நிலைத்துள்ளனர்.

எனவே இலக்கியத் துறைகளில் ஈடுபடுவதன் மூலம் நிலையான சமுதாயக் கணிப்பைப் பெறல் சாலும்.

இத்தகைய இலக்கிய, எழுத்துத் துறைகளில் மாணவர் கள் ஈடுபடுவதன் மூலம் கருத்துச் செம்மை, மொழிச் செம்மை

ஆகிய இரண்டையுமடைய முடியும். சிறந்த நூல்களையும், கட்டுரைகளையும் வாசிப்பதன் மூலம் கருத்துத் தெளிவு ஏற்பட வாய்ப்புண்டு. புதிய கருத்துக்களை அறியத் தொடங்கும் ஆரம்ப கட்டத்திலேயே மாணவர்கள் தம்மை ஒரு குறுகிய வட்டத்துக்குள் சிறையிட்டுக் கொள்ளக் கூடாது. சமயத்தை அறிகின்ற அதேவேளையில் மாக்சிய சித்தாந்தங்களைப் பற்றியும் அறிதல் வேண்டும். முற் போக்கு வாதத்தைப் பற்றிப் பேசும் பொழுது, பிற்போக்கு வாதத்தைப் பற்றியும் அறிந்திருக்க வேண்டும். அப்போது தான் தெளிவான ஒரு பார்வை ஏற்படும்.

மொழிச்செம்மை எல்லாப் பாடங்களுக்கும் அடிப்படை யாகும். தமிழ்ப் பாட நேரத்தில் மட்டுமே மொழியில் கவனம் செலுத்துவது போதாது. விஞ்ஞானத்துக்கும், விவசாயத் துக்கும் சமூகவியலுக்கும், சமயத்துக்கும் இவ்வாறு எல்லா வற்றுக்கும் மொழி வேண்டும். எமது எண்ணங்களை வெளியிடும் சாதனம் மொழி. அது செம்மையடைந்தால் எமது கருத்துக்களை வெளியிடுவதிலும் தெளிவு பிறக்கும். எனவே மாணவர்களின் மொழிச் செம்மையை வளர்ப்பதற்கான ஒருவழி எழுத்துத் துறையில் அக்கறை செலுத்துவதாகும்.

ஸாஹிறா

ஸாஹிறாக் கல்லூரி, கல்முனை

ஜூன்–ஜூலை 1977,

பக்: 2.

# 13.

# ஒரு பாடசாலை சமூகத்துடன் இணைகிறது

சமீபத்தில் பாடசாலை ஒன்றில் ஏழாம் வகுப்புப் படிக்கும் மாணவரொருவர் அடிக்கடி பீடி புகைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டார். ஒருநாள் பாடசாலை மலகூடத் தினுள் அவ்வாறு புகைத்துக் கொண்டிருக்கும்போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டு அதிபர் முன் கொண்டு வந்து அம்மாணவர் நிறுத்தப்பட்டார். விசாரணையின் போது இம்மாணவன் எட்டு வயதிலேயே புகைக்க ஆரம்பித்து விட்டதாயும் தற்பொழுது நாளொன்றுக்குப் பத்து பீடிகள் தேவைப்படுவதாகவும் தெரிய வந்தது.

இம்மாணவனின் நிலையைப் பற்றிக் கலந்தாலோசிப் பதற்காக அவ்வதிபர் அம்மாணவனின் தந்தையை அழைத்து விடயத்தைக் கூறினார். அத்தகப்பன் ஆச்சரியமோ கவலையோ அடையவில்லை. மாறாக அவர் கூறிய விடயம் அதிபரையும் ஆசிரியர்களையும் பெரும் வியப்பில் ஆழ்த் தியது. தனது மகன் சின்னஞ் சிறுவனாக இருக்கும்போது கடைக்குப் போய் பீடி வாங்கி வருமாறு தான் கூறும்போது, அவ்வாறு செல்ல மறுப்பானாம். அப்போது கடைக்குப் போய் வாங்கும் பீடியில் நீயும் ஒன்றை எடுத்துக்கொள் என்று தந்தை கூற மகன் மிகுந்த சந்தோசத்தோடு கடைக்கு ஓடுவானாம். கூலியாகக் கிடைக்கும் ஒரேயொரு பிடியைப் புகைத்துப் பார்க்க ஆரம்பித்தவன் காலக்கிரமத்தில் அதை

ஒரு பழக்கமாகக் கொண்டுவிட்டான். இச்சம்பவத்தை அத்தகப்பன் சர்வ சாதாரணமாகக் கூறினார். இதில் எதும் பிழையிருப்பதாகவோ அசாதாரணமாகவோ அத்தகப்பனுக்குத் தோன்றவில்லை.

இச்சம்பவத்திலிருந்து நாம் ஓர் உண்மையைத் தெளிவாக அறிகிறோம். ஒரு மாணவனின் கல்வியையும், ஆளுமையையும், விழுமியங்களையும் விருத்தி செய்வது பாடசாலை மட்டுமல்ல; அவனது வீடும், அவன் வாழும் சமூகமும் கூட முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மாணவனின் வளர்ச்சியை நிர்ணயிக்க முற்படும்போது பாடசாலைக் கல்வி நிலையை மட்டுமல்லாது புறக்காரணிகளையும் கவனத்திற்கு எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதனாற்றான் "சமூகவியல்" எனும் ஆய்வுத்துறை சமீப காலமாக வளர்ச்சியடைந்து வருகின்றது. எயில் டேக்ஹைம் என்பவரால் பிரபலப்படுத்தப்பட்ட இத்துறை கல்வியைப் பற்றிச் சமூக அடிப்படையில் ஆராய்வதைத் தனது முக்கிய பணியாகக் கொண்டுள்ளது.

கல்வியின் முக்கிய நோக்கம் மாணவனுக்கு அறிவைப் புகட்டி ஆளுமையை விருத்தி செய்து அவனைப் பயனுள்ள சமூக அங்கத்தவன் ஆக்குதலாகும். இதைச் சமூகவயமாக்கல் எனவும் கூறலாம். காலாதி காலமாகத் தமது குழந்தைகளைப் பயனுள்ளோராகவும் சமூகத்துக்கு உதவுவோராகவும் ஆக்கவே மக்கள் குலம் முனைந்து வந்துள்ளது.

மார்கிறட் மீட் என்பார் மிகச் சிறந்த மானிடவியல் ஆராய்ச்சியாளராவார். அவரது நூல்கள் பல வாசிப்பதற்கு

மிகச் சுவையானவை. பல நாடுகளுக்கும் விஜயம் செய்து அவ்வந் நாட்டு ஆதிவாசிகளோடு தானும் ஒருவராக வாழ்ந்து, அவர்களது பழக்க வழக்கங்களைப் பற்றிப் பல கட்டுரைகளையும், நூல்களையும் எழுதியுள்ளார். எமது நாட்டில் வாழும் வேடர்களைப் பற்றியும் குறவர்களைப் பற்றியும் இவ்வாறான ஆய்வுகளை மேற்கொண்டால் அவற்றிலிருந்து பெறப்படும் முடிவுகளும் நிச்சயம் மார் கிறட் மீட்டின் முடிவுகளை ஒத்தனவாய் இருக்கக்கூடும். சமோவன் நியூகினியிலுள்ள மாறுஸ், அரப்பேஸ், முண்டு கொமார், சாம்புளி, இயாட்முல், பாலினீஸ் போன்ற இன மக்களின் குழந்தை வளர்ப்பு முறைகளைப் பற்றிப் பல விநோத தகவல்களை அவர் தருகிறார். ஆகையால் ஆதி வாசிகளாயினும் சரி, நாகரீக மனிதர்களாயினும் சரி தமது குழந்தைகளைச் சமூகவயமாக்குவதில் எல்லாப் பெற்றோ ரும் கவனஞ் செலுத்தி வருகின்றனர்.

மாணவனைச் சமூகத்தோடு இணைப்பதில் பாடசாலை, குடும்பம், ஒத்த வயதினர் குழுக்கள், வணக்கஸ்தலம், கழகங்கள், பொதுத் தொடர்புச் சாதனங்கள் என்பன தத்தமது பங்கினைச் செலுத்த வேண்டியுள்ளன. கல்வியளிப்பது பாடசாலை மட்டுமேயென எம் பெற்றோரிற் பலர் நினைக் கின்றனர். இதுதவறு. கல்வியளிப்பதற்கென உருவாக்கப் பட்ட தலையாய நிறுவனம் பாடசாலைதான். ஆனால் மாணவர்களைக் கற்றோனாக்குவது ஏகபோகமாகப் பாட சாலை மட்டுமேயல்ல. ஒரு மாணவன் ஒரு நாளில் ஆறு மணித்தியாலங்களை மட்டுமே பாடசாலையில் கழிக்கிறான். வருடத்தில் 200 நாட்கள் பாடசாலைக்குச் செல்கிறான்.

எனவே, ஒரு வருடத்திலுள்ள 8760 மணித்தியாலங்களில் 1200 மணித்தியாலங்கள் மட்டுமே பாடசாலையிற் செலவாகின்றது. வருடத்திலுள்ள நாட்களில் ஏழிலொரு பங்கே அங்கு கழிகின்றது. மிகுதி நேரத்தில் அரைவாசியைத் தூங்குவதற்குச் செலவிட்டாலும், எஞ்சிய நேரம் முழுமையும் பாடசாலைக்கு வெளியேயுள்ளது. அவ்வாறு செலவிடும் நேரத்திலேற்படும் தாக்கங்களையும், பாதிப்புக்களையும் நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும் சமூகத்துக்குமேயுண்டு.

குடும்பச் சூழல் இங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. தமது பிள்ளைகளில் அக்கறையும், கரிசனையும், இலட்சிய அபிலாசையும் கொண்டுள்ள பெற்றோரின் குழந்தைகள் வாழ்க்கையில் முன்னேறுகின்றன. கல்வி என்பது ஆறு வயதில் பாடசாலைக்குச் சென்று முதலாம் வகுப்புப் புத்தகத்தில் முதலாம் பக்கத்திலிருந்து படிக்கத் தொடங்குவது மட்டுமல்ல, சிறு பிராயத்திலிருந்தே உணவருந்தப் பழகுவது, உறங்கப் பழகுவது, உடுக்கப் பழகுவது, குளிக்கப் பழகுவது, உடலைச் சுத்தமாகப் பேணப் பழகுவது, நல்ல வார்த்தைகளைப் பேசப் பழகுவது, பெரியோரைக் கனம் பண்ணப் பழகுவது எல்லாமே கல்வியின் ஒவ்வோர் அம்சங்களாகும்.

கிராமப் புறப் பாடசாலைகளைப் பொறுத்தவரை கூறப்படும் ஒரு பெருங்குறை, மாணவர்கள் நல் வார்த்தைகளைப் பேசுதலும், ஆசிரியர்களையும் பெரியோர்களையும் கனம் பண்ணுதலும் மிகக்குறைவு என்பதாகும். இதற்கான பழியில் ஒரு பகுதியை வேண்டுமானாலும் ஆசிரியர்களில்

சுமத்தலாம். ஆனால் பெற்றோரும் இதற்கான பொறுப்பினை ஏற்க வேண்டும். மாணவரது பழக்க வழக்கப் பயிற்சியில் ஆசிரியர் மட்டுமல்லாது பெற்றோரும் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. வீட்டுச் சூழலும் சிறப்பானதாக அமையவேண்டும். பாடசாலை செல்லும் சிறுவர் படிப்பதற்கேற்ற சூழக நிலை வீட்டில் நிலவ வேண்டும்.

எத்தனையோ நடுத்தர வர்க்கத்தினரின் வீடுகளில் இவ்வாறான வசதிகளைச் செய்து கொடுக்கக்கூடிய வாய்ப் பிருந்தும், அவ்வாறு செய்யப்படுவதில்லை. பல அறை களைக் கொண்ட பெரிய வீடுகளிலும் பிள்ளைகளின் படிப்புக்கென ஓர் அறையில் மேசை, கதிரைகள் போட்டுக் கொடுப்பதில்லை. முன் மண்டபத்தில் ரேடியோ ஒரு பக்கம் பாடும், பெரியவர்கள் இன்னொரு பக்கம் கதைத்துக் கொண்டிருப்பார்கள்; சின்னஞ் சிறுசுகள் விளையாடிக் கொண்டிருக்கும்; மாணவர்களும் பிறிதொரு பக்கம் படிக்க முயற்சி செய்வர். அநேக நடுத்தர வர்க்கத்தினரின் வீடுகளில் இந் நிலையைக் காணலாம். எத்தனையோ வீடுகளில் பிள்ளைகளின் படிப்புக்கென ஒதுக்கப்பட்ட ஒரு மேசையோ கதிரையோ கூட இருக்காது.

இத் தளபாடத் தட்டுப்பாடு சில பாடசாலைகளிலும் நிலவுவதைக் காணலாம். குறிப்பாக கனிஷ்ட வித்தியாலயங் களில் இத் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. பல மாணவர்கள் எவ்வித தளபாட வசதிகளுமின்றித் தரையில் அமர்த்தப்படுகின்றனர். ஒரு சிறு குழந்தை முதன் முதல் பாடசாலைக்கு வரும்போது வெறும் அழுக்குத் தரையிலே

அமர வேண்டியுள்ளது. இக்காரணத்தினால் நல்ல உடை அணிந்துவர முடியாது. எழுதும்போது, கொப்பியைத் தரையில் வைத்து குனிந்து படுக்குமாற் போன்ற நிலையில் எழுதப் பழகுகின்றது. இதனால், ஏற்படும் உளவியற் தாக்கம் நிச்சயம் அக் குழந்தையைப் பாதிக்கும்.

சமீபத்தில் தனது பிள்ளையின் கல்வியில் மிகுந்த அக்கறையுள்ள ஒருவர் அப்பிள்ளையைத் தனது வீட்டிற்கு அருகாமையிலுள்ள ஆரம்ப பாடசாலையில் சேர்த்தார். வீட்டில் அப்பிள்ளையின் உபயோகத்துக்கென சிறிய கதிரையும் மேசையும் வாங்கிக் கொடுத்தார். ஆனால் தனது மகன் அம்மேசையையும் கதிரையையும் ஒதுக்கி விட்டுக் கட்டிலின் மேல் அமர்ந்து கொப்பியை அதில் விரித்து வைத்து எழுதுவதை அவதானித்தார். மேசை கதிரையை உபயோகிக்குமாறு வற்புறுத்தியும் அவ்வாறு செய்ய அக்குழந்தை மறுத்துவிட்டது. இதைப் பற்றி விசாரித்ததில் அப்பாடசாலையில் முதலாம் வகுப்பில் எவ்வித தளபாட வசதியுமற்ற காரணத்தினாற் பிள்ளைகள் அனைவரும் தரையில் அமர்ந்தெழுதுவதன் தாக்கமே இது என்பதை அறிந்தார்.

இந்நிலை மாறுவதற்கான வழிகள் உண்டு. பாடசாலைத் தளபாட வசதிகள் போன்றவற்றை வழங்க வேண்டியது கல்வித் திணைக்களம் என்பது உண்மையே. எனினும் அத்திணைக்களமே எமக்குத் தேவையான அடிப்படை வசதிகளை வழங்கும் வரை காத்திராது மாற்று வழிகளைப் பற்றிச் சிந்தித்தலும் அவசியம். அவ்வப் பிரதேச பெற்றோர், பிரமுகர்களை நாடல் நிச்சயம் பலன் தரும்.

இதற்கான அடிப்படைத் தேவை பாடசாலைக்கும் அதன் சூழலுக்குமிடையே சிறப்பான கவிநிலை நிலவவேண்டிய தாகும். பாடசாலையின் சுற்றாடலைப் பற்றியும், அங்கு வாழ்வோரைப் பற்றியும், தம் மாணவரின் வாழ்க்கை வசதி களைப் பற்றியும் பாடசாலைத் தலைவரும், ஆசிரியர்களும் நன்கு அறிந்திருக்க வேண்டும். இடாப்படையாளமிடல், வகுப்பறைத் துப்புரவு, நேர சூசியை ஆணி அடித்துத் தூக்கல், மாணவத் தலைவர் தெரிவு என்பனவற்றோடு தமது கடமை முடிந்து விட்டதாக வகுப்பாசிரியர் கருதக்கூடாது. தனது வகுப்பிலுள்ள ஒவ்வொரு மாணவனைப் பற்றியும் நன்கறிந்திருக்க வேண்டும். அவனது வீட்டு நிலைமை, திறமைகள், குறைகள் பற்றிய தெளிவான பார்வை வேண்டும். அப்போதுதான் அம்மாணவனது ஆளுமையை விருத்தி செய்து சமூகக் கடமைக் கூறுகளுக்கு ஆயத்தப் படுத்தி, சமூகவயமாக்கி, அச்சமுகத்துக்குப் பயனுள்ள வனாக்க முடியும்.

ஆசிரியர்-மாணவர் தொடர்புகள் சம்பந்தமாகப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அண்டர்சன், புரூவர் லெவின், லிப்பிட், வைட் பிளான்டேர்ஸ் என்போரது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. ஓர் ஆசிரியன் வகுப்புத் தலைமைத்துவத்தை மேற்கொள்பவனாகவும் நீதியை நிலை நாட்டுபவனாகவும் இருக்க வேண்டுமென எல்லா மாணவர் களும் எதிர்பார்க்கின்றனர். குறிப்பாக உயர் வகுப்புகளில் ஓர் ஆசிரியரைப் பற்றிய சிறந்த கணிப்பைச் செய்பவர் அதிபரோ, கல்வி அதிகாரியோ அல்ல. அவரைப் பற்றிய சிறந்த கணிப்பைச் செய்பவர் மாணவர்களேயாவர்.

அதனாற்றான் பெரிய கல்லூரிகளில் மாணவர்களே சில பாடங்களுக்குக் குறிப்பிட்ட ஆசிரியர்களை விரும்பிக் கேட்பதும், சிலரை வேண்டாமென ஒதுக்கும் சம்பவங்களும் ஏற்படுகின்றன.

பாடசாலையின் நியம நிறுவன அமைப்பு, ஆசிரியர்கள், ஏனைய மாணவர்கள் என்பன மாணவர்களின் நடத்தையை நிர்ணயிக்கும் காரணிகளாயுள்ளன. இதில் ஆசிரியர் பங்கு மிகக் கணிசமானது. ஏனெனில் ஆசிரியரது ஆளுமை, நடத்தை, கற்பித்தல் முறைகள் மாணவர்களின் வளர்ச்சிப் படிகளிற் தாக்கத்தை ஏற்படுத்தும். இன்றைய முஸ்லிம் ஆசிரியர்களிற் பெரும்பாலோர் தத்தமது கிராமங்களிலே, அதுவும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தாம் விரும்பும் பாடசாலைகளிலேயே தொழில் புரிகின்றனர். தமக்குப் பரிச்சயமான சூழலில் தாம் நன்கறிந்த பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் போது அப்பணி மிகச் சிறந்தாய் அமைவதற்கான ஏதுவுண்டு.

சமூகத்தோடு பாடசாலையை இணைக்க வேண்டும் எனும் தத்துவத்தை நடைமுறைப்படுத்தும் போது, அதற்கான ஒரு பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்கம், பொது நலச் சங்கம் என்பன திறமையாக இயங்குவதாகும். அவை அடிக்கடி கூடுதலும், ஆலோசனை வழங்குதலும் உதவி செய்தலும் பாடசாலை வளர்ச்சிக்கும் உதவும்.

இவை செய்யக் கூடிய வேறொரு சிறந்த பணியுமுண்டு. அது இலக்கிய சேவையாகும். கல்வியோடு மிகுந்த

தொடர்புடையது இலக்கியம். அதை வளர்க்கவும் பாட சாலைகள் முயலலாம். எமது நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் மகா வித்தியாலயங்கள் உள்ளன. அவற்றில் ஐம்பதுக்கு மேற்பட்டவை ஓரளவு பெரிய மகா வித்தியா லயங்களாகும். இவற்றுள் இருபத்தைந்து மகா வித்தியா லயங்களாவது வருடத்துக்கு ஒரு நூல் வெளியிட முன் வருமாயின் இந்நாட்டின் இஸ்லாமிய இலக்கியங்களும் முஸ்லிம் எழுத்தாளர்களும் பல்கிப் பெருக வாய்ப்பளிக்கும். இவ்வாறான பணியிலும் எமது பாடசாலைகள் இறங்கினால் அது இலக்கிய உலகைப் பாடசாலையோடு இணைப்பதுடன் இலக்கிய வளர்ச்சிக்கு உதவி செய்வதாகவும் அமையும். இதைப் பற்றி எமது பெரிய மகா வித்தியாலயங்கள் சிந்தித்தல் பயனுடையது.

**இஸ்லாமிய ஆசிரியன்**
**25ஆம் ஆண்டு வெள்ளி விழா மலர்**
**இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம்**
**பந்தாவ, பொள்காவெல, 1977**
**பக்: 55–57.**

# 14.

# உயர் கல்வியின் ஓரிரு பிரச்சினைகள்

இலங்கை முஸ்லிம்களின் கல்வி விழிப்புணர்வுக்குப் பாடுபட்ட அறிஞர்களுள் ஒருவரான ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ், தாம் வெளியிட்டு வந்த 'முஸ்லிம் பாதுகாவலன்' எனும் சஞ்சிகையின் 1907ஆம் ஆண்டைய ஐப்பசி மாத இதழில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

"கல்வியையும் கல்வியுடையாரையும் அவர்களின் பரோபகார முயற்சிகளையும் மதிக்காதிருக்கும் குணம் மேற்படி கனவான்களில் மட்டுமல்ல, இலங்கை முஸ்லிம்களுள் பெரும்பாலாரில் காணப்படுவதால் அவர்களின் சீர் திருத்தத்தையும், அறிவையும் அல்லது அறிவீனத்தையும் பொதுவாய்க் கவனிக்கப் புகுந்தோம்.

கல்பைக் காப்பாற்றுவதற்கு அறிவு வேண்டுமென்பது இவர்களுக்குத் தோன்றாதிருப்பதென்ன? அறிவைக் கொடாத வரையில் கல்பு இறந்து போகுமென்பதை இவர்கள் அறியாத காரணமென்ன?

எங்கள் சாதியாரின் மனம் இருளடைந்திருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, அவர்கள் பணமொன்றே பெரிதானதென்று எண்ணியிருப்பது. பணம் மேன்மையுள்ளதென்பது மெய். இவ்வுலகத்தில் எந்தக் காரியத்தைச் செய்யவும் பணம் வேண்டும். கல்வி படிப்பதற்குத்தானும் பணம் வேண்டும். ஆகிலும் பணம்

கருவியாய் இருக்கத்தகுமன்றி முகாந்திரமாயிருக்கத் தகுமன்று....

இரண்டாவது எங்கள் சாகியத்தார் சாப்பாட்டுக்குக் கீழ்ப்பட்டிருப்பது.

இலங்கை முஸ்லிம்கள் பணமொன்றையே பெரிதாய்க் கவனிப்பவர்களாய் இருப்பதாலும், சாப்பாட்டுக்குக் கீழ்ப் பட்டு விட்டதாலும் அவர்கள் கல்வியைக் கவனியாதிருப்ப தோடு, கற்றோரையும், அவர்களது பரோபகார முயற்சி யையும் ஏளனமாய்ப் பாவிக்கிறார்கள். மனக் குருடடைந்தவர் கள் இவ்வாறு செய்வது ஆச்சரியமல்ல. ஆகிலும் அந்நிலை மையிலேயே எப்பொழுதும் இருக்க அவர்கள் நாடுகிறது பெருங்குற்றம். கொஞ்சம் கொஞ்சமாய் ஆவது தங்கள் கல்புக்கு வெளிச்சத்தைக் கொடுப்பதற்கு அவர்கள் துணிய வேண்டும். அதற்குத் தக நூல்களையும் பத்திரிகைகளையும் வாசிக்கவேண்டும். இது அவர்களின் கடமையே."

இவ்வாறு இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐ.எல்.எம். அப்துல் அஸீஸ் கூறியவை இன்றைய சமுதாய அமைப் புக்கும் ஓரளவு பொருத்தம். கல்வியிற் பிற சமூகத்தினர் காட்டும் அக்கறையளவு எம்மிடையே காணப்படுவதில்லை. இடையிற் கல்வியைக் கைவிடும் மாணாக்கர் தொகை முஸ்லிம்களிடையே மிக அதிகமாகவுள்ளது. பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் தொகையும் மிகக் குறைவாகவேயுள்ளது.

எமக்குள்ள 650 முஸ்லிம் பாடசாலைகளில் 250,000 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். சமீபத்திய புள்ளி

விபரமொன்றின்படி ஒவ்வொரு வகுப்பிலும் கற்கும் முஸ்லிம் மாணவர் தொகை வருமாறு:-

| | |
|---|---|
| ஆரம்பப் பிரிவு | 29790 |
| தரம்-1 | 32524 |
| தரம்-2 | 32325 |
| தரம்-3 | 33418 |
| தரம்-4 | 26942 |
| தரம்-5 | 21589 |
| தரம்-6 | 17589 |
| தரம்-7 | 14042 |
| தரம்-8 | 10461 |
| தரம்-9 | 7814 |
| தரம்-10 (1) | 9406 |
| தரம்-10 (2) | 6714 |
| தரம்-11 விஞ்ஞானம் | 1185 |
| தரம்-11 கலை | 803 |
| தரம்-11 வர்த்தகம் | 1061 |
| தரம்-12 விஞ்ஞானம் | 1736 |
| தரம்-12 கலை | 741 |
| தரம்-12 வர்த்தகம் | 1121 |

முதலாம் வகுப்பில் முப்பதினாயிரமாகவிருக்கும் மாணவர் தொகை படிப்படியாகக் குறைந்து, பன்னிரண்டாம் வகுப்பில் மூவாயிரத்தைந்நூறாகக் குறைகின்றது. இவ்வாறு குறைந்து செல்லல் இயற்கையேயானினும், இடையிற் படிப்பைக் கைவிடும் மாணவர் தொகை முஸ்லிம் சமூகத்திடையே அளவுக்கு மீறி அதிகமாய்க் காணப்படுகின்றது.

இதற்கான காரணங்கள் பல. கல்வியின் பலனையும், அதனால் ஏற்படும் வாழ்க்கை முன்னேற்றத்தையும் முஸ்லிம் சமுதாயம் ஒரு பொழுதும் பூரணமாக அனுபவித்ததில்லை. அதனால் அதன் அனுகூலங்கள் முழுதாக உணரப் படவில்லை.

இடையிற் படிப்பைக் கைவிடுவதற்கு இன்னொரு காரணம், சமுதாயத்தின் பொருளாதார நிலையாகும். முஸ்லிம் சமுதாயம் பெரும் பணக்காரச் சமுதாயம் எனும் பரம்பரையான எண்ணமொன்று ஏனையவரிடையே உண்டு. இதுவொரு மாயையாகும். மேல் மட்டத்தார் சிலரும், புதிததாக விரைவாகப் பெருந்தொகைப் பணம் சம்பாதிக்கும் சிலரும் தமது ஆடம்பர செலவுகளின் மூலம் இவ்வாறானவொரு தப்பெண்ணத்தை உருவாக்கி விடுகின்றனர். உண்மை நிலை யாதெனில் இந்நாட்டு முஸ்லிம் சமுதாயத்தின் கூட்டு மொத்தமான பொருளாதார நிலை மிகப் பின் தங்கியதேயாகும்.

சமுதாயத்தின் இந்நிலை எதிர்மறைப் போக்கொன்றினையும் ஏற்படுத்துகின்றது. படிப்பைக் கைவிட்டுத் தொழிலில் ஈடுபடும் சிலர் மிகவிரைவிலேயே பெரும் பணம் சம்பாதித்துத் தமது ஊர்களில் உயர் சமுதாய அந்தஸ்தும் பெற்று விடுகின்றனர். நீண்டகாலப் படிப்பின் மூலமோ பல்கலைக்கழக பட்டத்தின் மூலமோ பெற முடியாத வாழ்க்கை வசதிகளையும் சுகபோகங்களையும் பெறுகின்றனர். கல்வி கற்றுப் பலனடைவதைவிட இப்படியான வழியிற் சீர்பெற முடியுமெனும் எண்ணத் தாக்கத்தினை இளைஞரிடையே இது ஏற்படுத்துகின்றது.

ஒரு மக்கள் கூட்டத்தினரின் எண்ணங்களையும் செயற் பாடுகளையும் அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் சாதனம் கல்வி முறையேயாகும். அடுத்த தலை முறையினரை மேம்பட்டவராக்குவதும் அதுவேயாகும். இன்று இந்நாட்டு முஸ்லிம்களுக்கு மிக அவசியமாகத் தேவைப்படுவது தொழில் நுட்ப உயர் கல்வியுமாகும்.

விஞ்ஞானக் கல்வி பெறுவதற்கான பூரண வசதிகள் எமது மாணவர்களுக்குப் பரவலாக இதுவரை கிடைக்க வில்லை. இது விசேடமாக இந்நாட்டின் கிராமப்புறப் பாட சாலைகள் அனைத்துக்குமான பொதுப் பிரச்சினையாகும். முஸ்லிம்களுக்கான 650 பாடசாலைகளுள் சுமார் 90 மகா வித்தியாலயங்களில் ஜி.சீ.ஈ. உயர்கல்வி கற்பதற்கான வகுப்புகள் உள்ளன. அவற்றுள், சுமார் 40 பாடசாலை களிலேயே விஞ்ஞான உயர் வகுப்புகள் உள்ளன. இவற் றுள்ளும் எல்லாப் பாடங்களுக்குமான போதிய ஆசிரியர்கள், தேவையான விஞ்ஞான கூடங்கள், போதுமான உபகர ணங்கள், நூலக வசதிகள் உள்ளவை மிகமிகக் குறைவாகும். இவ்வசதிகளை ஏற்படுத்துதல் உடனடியாகச் செய்யப் படக்கூடிய காரியமல்ல.

சனத்தொகை அடிப்படையிற் கணக்கிட்டால், வருடாந் தம் பல்கலைக் கழக மாணவர்களுள் எமது தொகை எட்டுச் சதவீதமாயிருக்க வேண்டும். அங்கு கற்கும் மொத்த மாணவர் களிலும் எட்டுச் சதவீதம் இவர்களாயிருக்க வேண்டும். ஆனால் இந்நாட்டுப் பல்கலைக் கழக வரலாற்றில் இவ் விகிதாசாரம் 2,3 சதவீதங்களை என்றுமே தாண்டியதில்லை. முஸ்லிம் சமுதாயத்தின் உயர்கல்வியின் தாழ்ந்த நிலைக்கு இது மிகச் சிறந்ததோர் அளவுகோலாகும்.

இவ்வாறு பல்கலைக் கழகம் செல்லும் மாணவரிலும் அதிகமானோர் பொருளாதார வசதி குறைந்த குடும்பங் களிலிருந்தே செல்கின்றனர். பல்கலைக்கழகத்திலும் பொரு ளாதாரச் சிக்கல் அவர்களைத் தொடர்கின்றது. இச்சிக்கலை நீக்கி, அம்மாணவர்கள் தமது கல்வியில் முழுக் கவனத் தையும் செலுத்தக்கூடிய வகையில் உதவுமுகமான உபகாரப் பணத்திட்டங்களும் பாரிய அளவில் இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வியக்கத்தின் ஸ்தாபகர் அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம் ஜே.பி. அவர்கள் இப் பணிகளிற் காட்டும் தீவிர கரிசனை வியந்து போற்றுதற்கு உரியது. இந்நாட்டு முஸ்லிம் சமூகம் எவ்வெவ் வகையில் உயர் கல்வியைப் பெற முடியுமோ, அத்தகைய கல்வி அனைத்தையும் பெறல் வேண்டுமென அவர் காட்டும் அக்கறையும் அதற்காகத் தம்மாலியன்ற எத்தகைய தியாகத்தையும் செய்யச் சித்தமாயிருப்பதும் மிக அரிதான வொரு பண்பாகும். அல்லாஹ் எம்மிடம் அடைக்கலமாகத் தரும் செல்வம், எவ்வாறு எமது சகோதரர்களுக்கு உதவுதல் முடியும் என்பது இங்கு யதார்த்தமாகச் செயலுருப் பெற்று உதாரணமாகத் திகழ்கின்றது.

தினகரன்

இலங்கை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கம்,

ஓராண்டு நிறைவு விழா அனுபந்தம்,

கொழும்பு, 20.2.1982,

பக் : 6.

# 15.

# கிராமமும் தலைமைத்துவமும்

ஒரு நாட்டைப் பற்றி அறிய வேண்டுமாயின் அந் நாட்டின் கிராமங்களை நன்கு புரிந்து கொள்வதன் மூலமே, என்பது மரபு. ஏனெனில் அதன் பாரம்பரிய கலாச்சாரங் களையும், உணர்வுகளையும் கிராமங்களிலேயே காணலாம்.

1505ஆம் ஆண்டிலிருந்து 1948ஆம் ஆண்டுவரை போத்துக்கேயராலும், ஒல்லாந்தராலும், ஆங்கிலேயராலும் இலங்கை ஆளப்பட்ட காரணத்தினால் எமது நகரங்களிற் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. அவற்றின் அமைப்பும், பண்பாடும் மாற்றமடைந்தன. ஆனால் எமது கிராமங்கள் அத்தகைய பாதிப்புகளைத் தாங்கி நின்று, இன்றுவரை தேசியத்துவத்தையும், கலாச்சாரத்தையும், தனித்துவத்தை யும் பாதுகாத்து வந்துள்ளன.

தேசத்தின் ஜீவநாடி அதன் பல்லாயிரக் கணக்கான கிராமங்களும், அவற்றில் வாழும் இலட்சக்கணக்கான மக்களுமேயாகும். நகரங்களிலே காணப்படும் அவசரமும், ஓட்டமும் கிராமங்களிலே காணப்படுவதில்லை. அம்மக்கள் ஆறுதலானதும் அமைதியானதுமான வாழ்க்கையை மேற் கொள்பவர்களாவர். அவர்களது ஆசைகள் குறைவு. அதனால் தேவைகளும் குறைவு. இதன் விளைவாய்க் கழுத்தறுப்பும் போட்டிகளும் குறைவாகும். ஒரு வீட்டிலேற்படும் சுக துக்கங்கள் யாவும் அச்சூழலிலுள்ள அனைவரினதும் சுக துக்கங்களாகப் பகிரப்படுகின்றன.

இதற்கெதிரானதொரு நிலைமையினை நகரங்களிற் காண்கிறோம். ஒவ்வொருவரும் தம்மைப் பற்றி மட்டுமே கவலை கொண்டு, பிறரின் எவ்வலுவலிலும் அக்கறை கொள்ளாத தன்மை அங்குண்டு. அடுத்த வீட்டில் வாழ்பவர் யாரென்பதையே அறியாது பல தசாப்தங்களாக வாழும் நிலைமை அங்கு நிரம்பிக் காணப்படும். விடுதிகளில் வாழும் பலர் அடுத்த அறையில் வசிப்பவரின் பெயரைக் கூடத் தெரியாது வசிக்கும் அனுபவத்தினை எம்மிற் பலர் பெற்றிருப்பர். இவ்வாறான சூழ்நிலை எமது கிராமங்களிற் கிடையாது. இதுவே அவற்றின் அடிப்படைப் பலமுமாகும்.

ஆயினும் இருபதாம் நூற்றாண்டின் விஞ்ஞான யுகத்திற் கேற்ப வளர்ச்சியினைப் பெறவேண்டிய அவசியத்தேவை எமது கிராமிய மக்களுக்கு மிக அவசரமானதாயுள்ளது. கல்வி, பொருளாதார, ஆத்மீகத் துறைகளிலே மாற்றங்கள் வேண்டப்படுகின்றன. அதிலும் குறிப்பாக முஸ்லிம் கிராமங் களிலே இத்தகைய முன்னேற்றங்கள் மிகவும் தேவைப் படுகின்றன.

கல்வித்துறையில் மாகாண முஸ்லிம்கள் மட்டுமன்றி, கொழும்பு போன்ற தலைநகர் முஸ்லிம்கள் கூடக் கடந்த காலங்களில் முன்னேறத் தவறி விட்டனர். வர்த்தகத் துறை யில் செழிப்புற்று விளங்கியமை, ஆங்கிலக் கல்வி, கலாசாரப் பிறழ்வை ஏற்படுத்திவிடும் எனும் அச்சம், ஆங்கிலக் கல்வி கற்ற சிலர் சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ்ந்து பிறருக்கு வழி காட்டத் தவறியமை என்பன அத்தகைய நிலை தோன்றுவதற்கான சில காரணங்களாகும்.

சமீபகால வரலாற்றில் எற்பட்ட மாற்றங்களால் இலவசக் கல்வி, மத்திய மகா வித்தியாலயங்கள் நிறுவப்பட்டமை, ஆசிரிய நியமனங்களில் முஸ்லிம்களுக்கான உரிய பங்கு, மாவட்ட அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதி முறை, தனிப்பட்ட நிறுவனங்களின் உபகார நிதியுதவிகள் என்பன முஸ்லிம்களின் கல்வி வரலாற்றிற் பல உயர்வுகளை ஏற் படுத்தி வருகின்றன. நூற்றுக்கணக்கான கிராமப்புற மாணவர்களுக்கு இன்று பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இக்கல்வி மறுமலர்ச்சியினால், தலைமைத் துவமும் வழிகாட்டலும் கிராமப்புறங்களில் அதிகரிப்பதற் கான வாய்ப்புகள் பலவுண்டு.

கல்வியினால் வாழ்க்கையில் முன்னேறும் இளைஞர்கள் தமது கிராமங்களை என்றும் மறந்து விடுதல் கூடாது. எவ்வாறு தமது வாழ்க்கையில் முன்னேற்றமடைந்தனரோ அத்தகைய முன்னேற்றத்தை மேலும் பலர் பெறுவதற்கான வாய்ப்பினையும் வசதியினையும் ஏற்படுத்திக் கொடுத்து, வழிகாட்டலும் வேண்டும்.

மாணவர்கள் கல்வி வளர்ச்சியில் இன்றிமையாத வொன்று, வழிகாட்டலாகும். பரீட்சைகளிற் சித்தியடைவதன் மூலம் பல்கலைக்கழகம் செல்லல், ஆசிரியர் நியமனம் பெறல், வங்கிகளில் வேலை வாய்ப்புப் பெறல் என்பன மட்டுமே எமக்குள்ள வழிகளல்ல. எண்ணற்ற உயர்கல்வி, தொழில் நுட்பக் கல்வி பெறும் வாய்ப்புகள் இந்நாட்டிலே யுள்ளன. அவற்றைப் பற்றிய தகவல்களையும் வழி வகை களையும் எமது மாணவருக்கு அறிவுறுத்துவதே கற்றோரின் அடிப்படைக் கடமையாகும்.

முஸ்லிம்களின் உயர் கல்வியில் மிகப் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடியது இன விகித அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதியாகும் இதன் மூலமே இந்நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலிருந்தும் பரவலாக முஸ்லிம் மாணவர் பல்கலைக்கழகம் செல்ல இயலும்.

இத்தகைய முன்னேற்றங்கள் அனைத்தும் ஆத்மீக அடித்தளத்தைக் கொண்டனவாயமைதல் வேண்டும். நாம் பெறும் உலகியற் கல்வியானது எமது இறை பக்தியையும் மதப்பற்றையும் அதிகரிக்கவேண்டுமேயொழிய அவற்றில் சறுக்கல்களை ஏற்படுத்துவனவாய் அமைந்துவிடக் கூடாது. இச்சந்தர்ப்பத்திலேயே தலைமைத்துவ வழிகாட்டல் மிக அவசியம் வேண்டப்படுகின்றது. சடுதியான முன்னேற்றம் ஏற்படும் பொழுது கலாசார மாற்றங்களும் தோன்றுவது இயல்பு. அவை எமது வாழ்க்கைக்கு உதவுவனவாய் அமைய வேண்டுமேயொழிய சீரழிவுப் பாதையில் இட்டுச் சென்று விடுதல் கூடாது.

இதேபோன்று பொருளாதார வளர்ச்சியிலும் தலைமைத்துவம் வேண்டப்படுகின்றது. பாரம்பரிய தொழில்களையும் பழமைவாய்ந்த முறைகளையும் நம்பியிராது புதிய தொழில்களிலும் யுக்திகளிலும் ஈடுபடல் மூலமே கிராமம் செழிப்படைய முடியும். சிறு கைத்தொழில்கள் பலவற்றுக்கான மூலப் பொருட்கள் கிராமப் புறங்களிலே நிரம்பிக் கிடக்கின்றன. அவற்றினைப் பிரயோசனப்படுத்துவதற்கான ஆலோசனைகள், பணவுதவிகள், தொழில் நுட்ப வழிகாட்டல்கள் இக்கிராம மக்களுக்கு அவசியமாகும்.

இத்தகைய தலைமைத்துவத்தை இளைஞர்களிலேயே கொடுத்தல் முடியும். சமுதாய சேவையென்பது இலகுவான விடயமல்ல. தியாகம், நெஞ்சுரம், விடாமுயற்சி, பொறுமை என்பன நிரம்பப் பெற்றவர்களே அத்துறையில் வெற்றி காண முடியும். எந்தவொரு சமுதாயத்திலும் எக்கிராமத்திலும் அவ்வாறான சிலர் என்றும் தோன்றுவதுண்டு. அவர்களின் தன்னலமற்ற பணிகளினாலே நேற்றிருந்ததைவிட இன்று நாம் வளர்ந்துள்ளோம், நாளை இன்னும் வளர்வோம் எனும் பசுமை நம்பிக்கை உரம் காண்கிறது.

ஈராண்டு சிறப்பு மலர்
அம்பாறை மாவட்ட அகில இலங்கை முஸ்லிம் லீக்
வாலிப முன்னணிகளின் சம்மேளனம்,
அக்கரைப்பற்று – 1982,
பக்: 19–20.

## 16.

# குர்ஆன் மத்ரஸாவில் மாற்றங்கள்

முஸ்லிம் குழந்தைகளின் மதக் கல்வியினது ஆரம்பக் கட்டம் குர்ஆன் மத்ரஸாவாகும். இது 'ஓதல் பள்ளிக்கூடம்' என அழைக்கப்படுகின்றது. அரபு நாடுகளில் ஆயிரக் கணக்கான வருடங்களாக நடைமுறையிலிருந்து வரும் 'மக்தப்' எனும் அமைப்பினை இலங்கையில் இது கொண்டுள்ளது. கடந்த நூற்றாண்டின் இறுதி வரை இங்கிருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்தின் சாயலும் இதிலுண்டு.

பெரும்பாலும் பள்ளிவாசல்களை அண்டியே இவை நிறுவப்பட்டன. பள்ளிவாசல் நிர்வாகத்தினராலேயே இவை நிர்வகிக்கப்பட்டும் வந்துள்ளன. தனிப்பட்ட சிலர் சேர்ந்தும் குர்ஆன் மத்ரஸாக்களை நிறுவி நடத்துவதும் உண்டு. ஓர் ஊரிற் பிரபலமான லெவ்வை அல்லது ஆலிம் ஒருவர் தமது வீட்டிலேயே மத்ரஸாவை நடத்துவதும் உண்டு.

அரபு எழுத்துக்களைக் கற்பித்தல், குர்ஆனை ஓதப் பழக்கல், தொழுகை முதலான கடமைகளைப் பயிற்றுதல், நல்லொழுக்கங்களை ஏற்படுத்துதல் என்பன இந் நிறுவனத்தின் நோக்கங்கள் எனக் கருதலாம். ஆனால், இவை என்றுமே எவ்விடத்திலும் பூரணமாக நிறைவேறியது கிடையாது. இவற்றின் நிலையைப் பற்றி மர்ஹூம் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் தமது 'இலங்கையில் இஸ்லாம்' எனும் நூலிற் பின்வருமாறு கூறுகிறார்:

"நகரங்களிலும் கிராமங்களிலும் குர்ஆன் பாட சாலைகளுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் போகும் சிறுவர்

சிறுமிகளுக்குப் புகட்டப்படும் மதக் கல்வியில்தான் நாம் முதலாவதாக எம் கவனத்தைச் செலுத்தவேண்டும். இப் பள்ளிக் கூடங்களில் உள்ள உபாத்தியாயர் பொதுவாக அரபியை வாசிக்கக் கூடியவராய், ஆனால் அப்பாஷையை விளங்காதவராய் இருக்கிறார். கிளிப்பிள்ளையைப் போல அவர் புத்தகங்களிலிருந்து பாகங்களை எடுத்து ஓதக்கூடிய வராய் இருக்கிறாரேயல்லாமல், தம் பொறுப்பிலுள்ள பிள்ளை களுக்கு அவற்றை விளங்கப்படுத்த முடியாதவராய் இருக் கிறார். குர்ஆனை வாசிப்பதற்கும் மௌலூதுகளை ஓதுவதற்கும் இப்பிள்ளைகள் சந்தேகமின்றிக் கற்பிக்கப் படுகிறார்கள். ஆனால் அவர்கள் வாசிப்பதையும் ஓதுவதை யும் சரிவர அறிந்துகொள்ள உதவி செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றனவாயில்லை. எனவே படிப்பிக்கின்றவர்களிடம் கற்பதற்கான ஓர் ஆசையை நியாயமான முறையில் எதிர்பார்க்க முடியாது இருக்கின்றது.

குர்ஆனை ஓதப் படித்துக் கொள்ளும் முறையே மிகக் கிரமமற்றதும் களைப்பை உண்டுபண்ணக் கூடியதாயும் இருக்கிறது. இம்முறைகள் சிறுவர் சிறுமிகளின் அறிவு வளர்ச்சியில் எவ்வளவு தூரம் தலையிடுகின்றன என்பது எங்களின் ஆழ்ந்த கவனத்தைப் பெறக்கூடிய ஒரு கேள்வியாய் இருக்கின்றது, எம் சமூகத்தினர் கல்வியில் பிற்போக் கடைந்திருப்பின் சில காரணங்கள் பள்ளிக் கூடங்களிலும் குர்ஆன் பாடசாலைகளிலுமுள்ள தவறான போதனா முறை களில் நின்றும் உண்டானவையே.

முழுமனதுடன் அன்றிக் கிளிப்பிள்ளைக்குப் போதிக்கப் படுவது போல் கற்பிக்கப்படுகின்ற ஒரு தவறான கல்வி

முறையே இவ்விடங்களில் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வுபாத்தியாயர் மார்களிடம் படிப்பிக்கக் கூடிய அறிவு மில்லை. அவர்களுக்குப் போதுமான சம்பளம் கொடுக்கப் படுகிறதுமில்லை. இதற்குப் பொறுப்பாளிகள் உபாத்தி மாருமல்லர்; மாணவருமல்லர். ஆனால் எம்சமூகமே. இவ் வுபாத்திமார் தங்களைத் திருத்திக் கொள்ள எம் சமூகம் அவர்களுக்குத் தைரியம் ஊட்டுவதில்லை சராசரி உபாத்தி யாயன் நிலை மிகவும் திருத்தப்பட வேண்டும். மார்க்கத்தை அவர் அரபியில் படித்து மாணாக்கர்களுக்குத் தமிழிலே படிப்பித்துக் கொடுக்கவேண்டும். எனவே அரபியிலும் தமிழிலும் அவருக்கு நல்ல அறிவு இருக்க வேண்டும். குறைந்த சம்பளம் கொடுக்கப்படும் உபாத்திமார்களுக்குப் போதிய சம்பளம் கொடுத்தல் இன்னொரு விசேஷ தேவையாய் இருக்கின்றது."

மேலே குறிப்பிட்டுள்ளவாறு குர்ஆன் மத்ரஸாக்களின் நிலையையும் குறைபாட்டினையும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான வழி வகைகளையும் மூன்று அடிப்படையில் நோக்கலாம்:

1. கட்டிட, தளபாட அமைப்பு நிலை
2. பாடத் திட்டங்கள்
3. போதனாசிரியர்கள்.

நாட்டின் ஏறக்குறைய எல்லா முஸ்லிம் கிராமங்களிலும் குர் ஆன் மதராஸாக்கள் இருக்கின்றன. ஆயினும் வறுமை யான பிரதேசம், வசதியான பிரதேசம் என்ற வேறுபாடில் லாமல் பெரும்பாலான இடங்களில் அவற்றின் கட்டிட அமைப்பு மிக மோசமாகக் காணப்படுகின்றது. இடிந்து,

பூச்சுக் கழன்ற கட்டிடங்களாகவும், மிக நீண்ட காலம் வெள்ளையடிக்கப்படாது அழுக்கடைந்தும் அல்லது சீரழிந்த ஓலைக் குடிசையாயும் அமைந்துள்ளன. அழுக்கடைந்தும் கிழிந்தும் காணப்படும் பாய்களே மாணவர் உட்காருவதற்கு உபயோகிக்கப்படுகின்றன.

அம் மத்ராஸக்களிலே திட்டவட்டமான பாடத்திட்டம் எதுவும் கிடையாது. அவ்வாறான ஒன்றிருந்தாலும் அதனைப் பின்பற்றக்கூடிய மனோ பக்குவத்தையும் பயிற்சியையும் அப்போதனாசிரியர்களிடம் எதிர்பார்க்க முடியாது. வருடத்தில் எந்நாளிலும் மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அதனால் வகுப்பு ரீதியாகவோ அல்லது குழு ரீதியாகவோ அவர்களுக்குப் பாடம் புகட்டுதல் இயலாத காரியமாகும்.

அப்படியான பாடத்திட்டம் ஒன்றிருந்தாலும் அதனைக் கிரமமாகப் பின்பற்றுவதற்கான பயிற்சியை இவற்றிலே கற்பிக்கும் போதனாசிரியர்களும் பெரும்பாலோர் பெற்றிருக்கவில்லை.

'அஹதிய்யாப் பாடசாலைக்கும் குர்ஆன் பாடசாலைக்குமான ஆசிரியர் கைந்நூல்' பின்வருமாறு கூறுகிறது:

"தான் பேசாத, தனக்குச் சற்றும் விளங்காத மொழியொன்றை இப்பருவத்தில் வலிந்து புகட்ட முனைவதால் குழந்தைக்கு குர்ஆனிலும் குர்ஆன் பள்ளியிலும் குர்ஆன் ஓதிக் கொடுக்க எத்தனிக்கும் ஆசிரியரிலும் வெறுப்பு ஏற்படுகின்றது. வீடுகளிலே புரளி பண்ணக்கூடிய குழந்தைகளுக்குத் தண்டனையாக ஓதல் பலகையை எடு, குர்ஆனை எடுத்து ஓது என்று அடிக்கடி பெற்றோர்கள் சொல்வதை நாம்

கேட்டிருக்கின்றோம். அதிலிருந்து ஓதலும் குர்ஆனும் குழந்தைகளுக்கு எவ்வளவு வெறுப்புள்ளவையாய் இருக்கின்றன என்பதும் அவைகள் பெரும்பாலும் தண்டனைக்குரிய சாதனங்களாய் மாறியுள்ளன என்பதும் நுண்ணறிவுடைய எவருக்கும் நன்கு விளங்கும்.

இது சம்பந்தமாக நாம் வேறொரு உண்மையையும் கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது. இலங்கையில் வழங்கும் ஏனைய மொழி ஆசிரியர்களைப் போலன்றி அரபு மொழி ஆசிரியர்கள், அதாவது குர்ஆன் பள்ளிக்கூடங்களில் குர்ஆன் படிப்பிக்கும் ஆசிரியர்களுட் பெரும்பாலாரும் அந்த மொழியை நன்கு புரிந்து கொள்ள முடியாதவர்களாவர். எனவே இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்து உற்சாகமான முறையில் இந்தக் குர்ஆன் பாடத்தைத் தொடங்கப் புரட்சிகரமான நவீன முறைகள் கையாளப்படல் வேண்டும்."

ஓதல் பள்ளிக் கூடங்களில் போதனை நடத்துவோர் அதற்கான பயிற்சி எதனையும் பெற்றவர்களல்லர். சிலர் அரபு மத்ரஸாக்களிற் கற்ற மார்க்க அறிவுடையவராயினும் அவ்வறிவினைச் சிறுவருக்குப் போதிக்கும் வழி முறைகள் நன்கு அறிந்தவர்கள் அல்லர். வேறு சிலர் அத்தகைய அறிவு தானும் இல்லாது அனுபவ ரீதியான கற்பித்தலின் மூலம் நீண்டகாலம் இச்சேவையில் ஈடுபட்டுப் போதனாசிரியர்களானவர்களாவர். அதிலும் குறிப்பாகச் சிறு குழந்தைகளுக்கான கற்பித்தல் முறைகள் எதனையும் இவர்கள் அறிந்தவர்கள் அல்லர். இக்காரணத்தினால் இவர்களது கற்பித்தல் சிறப்பானதாயிருக்குமென எதிர்பார்க்க முடியாது. இந்நிலைமைகளை மாற்றி, ஓதல் பள்ளிக் கூடங்களை மிகப் பிரயோசனமுள்ளவையாய் மாற்ற முடியும்.

இஸ்லாம் தோன்றிய காலத்திலிருந்து பள்ளிவாசலே முஸ்லிம் சமூகத்தின் மத்திய தலமாக இருந்து வந்துள்ளது. தொழுகைத் தலமாக, நீதி மன்றமாக, கல்விக் கூடமாக, மக்கள் ஒன்று கூடிக் கலந்துரையாடும் பொதுவிடமாக, அதிமுக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் ஆலோசனை மன்றமாகவெல்லாம் விளங்கியுள்ளது. மார்க்கக் கல்வியின் மத்திய தலமாக இது இன்னும் தொடர்ந்து இயங்க முடியும். குர்ஆன் மத்ரஸாக் கட்டிடம் பள்ளிவாசலை அண்டியதாகவும் அதன் நிர்வாகத்திற்குட்பட்டதாகவும் அமைதல் வேண்டும். அவ்வாறு அமையும் பொழுது அதன் அமைப்பு, ஒழுங்கு நடைமுறைகள் என்பன சீராக அமைதல் முடியும்.

அவ்வாறு அமைந்ததற்கான உதாரணங்களும் உள்ளன. சாய்ந்தமருது ஜூம்ஆப் பள்ளிவாசல் கூட்டக் குறிப்பொன்று பின்வருமாறு கூறுகிறது:

1942ஆம் ஆண்டு சித்திரை மாதம் 10ஆம் திகதி:

இன்று பள்ளிவாசலில் சமூகமளித்த மரைக்கார்மார் களாலும், உலமாக்களாலும் பள்ளிவாசல் மத்ரஸாவை நடத்துவதற்கு உண்டாக்கிய நிபந்தனைகளாவன:

1. குறித்த மத்ரஸாவின் ஒழுங்கு முறைகளையும் நன்னடத்தைகளையும் மத்ரஸாவிற்குத் தேவையெனக் காணும் எவ்விசயங்களையும் மரைக்கார்மார்களுக்கு அறிவித்துப் பராமரிப்பதற்காக இவ்வூர் கனம் எஸ்.கே. அப்துல் காதர் மௌலானா, கனம் மு. அப்துல்கபூர் மரைக்கார், கனம் வை. யாசின் லெவ்வை மரைக்கார், கனம் மு. யூ. வ. வீ. ஆதம் லெவ்வை மரைக்கார், கனம் மு. மு. அப்துல் ஹமீத் மரைக்கார், கனம் ப. வீ. மு.

ஆதம் லெவ்வை மரைக்கார், கனம் மீ. முகம்மதிப்றா லெவ்வை மரைக்கார், கனம் அ. ப. அலியார் வைத்தியர் மரைக்கார் ஆகிய இந்த எட்டுப் பேர் களையும் ஒரு கொமிற்றியாய் நியமிக்கப்பட்டது.

2. மத்ரஸாவிற் சேரும் ஒவ்வொரு பிள்ளைகளின் உரித்தாளரும் மேற்படி மரைக்கார்மார்களின் சமூகத் தில் தங்கள் பிள்ளைகளை ஒழுங்காய்ப் பள்ளிக் கூடத் துக்கு அனுப்புவோமென வாக்களித்தல் வேண்டும்.

3. போதிய ஞாயமின்றி மத்ரஸாவுக்கு வரத்தவறிய மாணவர்களையிட்டு மரைக்கார்மார்களிடம் வழக்குப் போனால் அம்மாணவர்களின் பெற்றோர் அல்லது உரித்தாளர் மரைக்கார்மார்களின் தண்டனைக்குட்படப் பாத்திரராவர்.

4. மரைக்கார்மார்களால் கொடுக்கப்படும் தினவரவு இடாப்புப் புத்தகத்தில் மத்ரஸா ஆசிரியர் பிள்ளையின் வரவை நாளாந்தம் பதிந்துவர வேண்டும்.

5. மேற்படி கொமிற்றியார் ஒவ்வொரு வாரந்தோறும் மத்ரஸா நடப்பதையிட்டுப் பரிசோதித்தல் வேண்டும்.

6. மாதந்தோறும் மத்ரஸா இடாப்பைப் பார்வையிட்டு, ஒரு கிழமைக்கு மேற்பட வராத மாணவர்களை மரைக்கார்மார்களிடம் வழக்குத் தொடுக்கப்படல் வேண்டும்.

7. பிள்ளைகளின் உரித்தாளர் அவர்களின் அவசியத் தேவைகளிருப்பின் ஒரு கிழமைக்குட்பட மேற்படி கொமிற்றியாரால் லீவு பெற்றுக்கொள்ள வேண்டும்.

8. மத்ரஸா ஆசிரியர் வேறு ஊர்க் கடமைகளில் நின்றும் நீங்கியவராய் இருப்பதுடன் தஜ்வீது, காயிதாக்களில் கூடுதலான விளக்கமுடையவராய் இருத்தல் வேண்டும்.

9. மத்ரஸா மாணவர்களை வகுப்புப் பிரித்துப் பாடம் நடத்துவதுடன், ஏழு மணிக்கு இடாப்புக் கூப்பிடல் வேண்டும்.

10. அலிபு, பே பாடங்கள் தனிப்படையாய் ஒரு வகுப்பு; மேற்படி கூட்டெழுத்தால் உள்ள பாடங்கள் 2ஆம் வகுப்பு; அல் ஹம்து தொடக்கம் அம்ம ஜுஸுவு வரைக்கும் 3ஆம் வகுப்பு; அம்ம ஜுஸுவு தொடக்கம் ஹாமீம் ஜுஸுவு வரைக்கும் 4ம் வகுப்பு; ஹாமீம் தொடக்கம் பக்றா வரைக்கும் 5ஆம் வகுப்பு.

11. ஈமான், இஸ்லாத்தின் விபரங்ளை நாளாந்தம் ஒவ்வொரு பாடமாகச் சொல்லிக் கொடுப்பதுடன், ஸிபத்துக்களையும் தொழுகையின் விபரங்களையும் பாடங்களாய் ஒவ்வொரு வகுப்புக்கும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

12. காலை 6 மணி தொடக்கம் 7-30 மணி வரைக்கும் தமிழ்ப் பள்ளிக்குப் போகும் மாணவர்களுக்குப் பாடம் நடத்தி அனுப்புவதுடன், 7-30 தொடக்கம் 9 வரைக்கும் மற்ற மாணவருக்குப் பாடம் நடத்திக் கலைத்தல் வேண்டும். பிற்பகல் 2 மணி தொடக்கம் 4-30 மணி வரைக்கும் பாடங்கள் நடத்தப்படல் வேண்டும்.

13. குறித்த நேர முறைப்படிக்கு மத்ரஸா ஆசிரியர் நடத்தத் தவறினால் கொமிற்றியாரால் மரைக்கார்மார்களுக்கு

வழக்குத் தொடுத்து, ஆசிரியர் கண்டிக்கப்படல் வேண்டும்.

14. மத்ரஸா ஆசிரியரால் ஏதும் நீதியீனமாய்ப் பிள்ளைகளை அடித்ததாக அல்லது வேறு அநீதிகளுண்டானால் அதையிட்டும் ஆசிரியரிடம் பெற்றோர் அல்லது உரித்தாளர் தர்க்கம் பண்ணக்கூடாது. அதையிட்டும் குறித்த கொமிற்றியாரிடமே முறைப் பாடு பண்ண வேண்டும்.

இத்தகைய குர்ஆன் மத்ரஸாக்கள் மிகப் பயனுள்ளவையாய் இயங்குதல் முடியும். முஸ்லிம் சமுதாயத்தின் மிகச் சிறந்த பாலர் கல்வி நிலையங்களாக (நேர்சரிப் பள்ளிகளாக) அவை மாறலாம். ஒரு குழந்தையின் ஆரம்பக் கல்வி சமயச் சூழலில் தொடங்க வேண்டுமென்பதே கல்வித் தத்துவம். நல்லொழுக்கம், நற்பண்புகளை அக்கல்வி வழங்குதல் வேண்டும். அத்தகையை கல்வி வழங்கும் பாடசாலைகளாக இம் மதரஸாக்களை மாற்ற முடியும்.

முதலாவது, அவற்றின் அமைப்பிலும் சூழலிலும் பெரும்மாற்றங்கள் கொண்டு வரப்படல் வேண்டும். பெரும்பாலான மத்ரஸாக்கள் சீரற்ற கட்டிங்களிலேயே இயங்குகின்றன. அவற்றில் அழுக்கடைந்த பாய்களும் தளபாடங்களுமே உபயோகிக்கப்படுகின்றன. அங்கும் சுத்தம் அவ்வளவாகப் பேணப்படுவதில்லை. பிள்ளைகள் அழுக்கடைந்த உடையோடும் அசுத்தமான நிலையிலும் காணப்படுதல் சர்வசாதாரணமாகும். இந்நிலை மாறி, இப் பாடசாலைக் கட்டிடம் துப்பரவானதாயும் வசதியானதாயும்

அமைதல் வேண்டும். சாதாரண பாலர் பாடசாலையில் உபயோகிக்கப்படும் தளபாடங்களும் கற்பித்தல் உபகரணங்களும் இங்கும் உபயோகிக்கப்படல் வேண்டும்.

இரண்டாவது, திட்டவட்டமான பாடத்திட்டம் அவசியமாகும். இன்றைய நிலையில் இங்கு மாணவரை அனுமதிப்பதற்கான காலவரையறை எதுவும் கிடையாது. வருடத்தில் எந்நேரமும் மாணவர் அனுமதிக்கப்படுகின்றனர். அதனால் ஒவ்வொரு மாணவனும் வெவ்வேறு பாடத்தைப் படிக்கிறான். வகுப்பு ரீதியான அல்லது பாட ரீதியான கூட்டுப் பிரிவுகள் எதுவும் கிடையாது. ஒரேயொரு ஆசிரியர் முழு மாணவர் தொகையையும் கற்பிக்கும், மேற்பார்வை செய்யும் பணிகளைச் செய்கிறார்.

இம் முறையை நிச்சயம் மாற்றலாம். மாணவரின் அனுமதி குறிப்பிட்டவொருகால எல்லையில் நடைபெறுதல் வேண்டும். அதுவும் அங்குள்ள போதனாசிரியரின் தொகைக் கேற்பக் குறிப்பிட்ட அளவினராயிருத்தல் நன்று. திட்டவட்டமான பாடத்திட்டமும் அவசியமாகும். வகுப்பு ரீதியாக மாணவர் பிரிக்கப்பட்டு, அப்பாடத் திட்டத்திற்கேற்ப கற்பிக்கப்படல் வேண்டும்.

மூன்றாவது, இம் மத்ரஸாக்களிற் கற்பிப்போரின் அறிவுத்தரம் உயர்தல் வேண்டும். இதற்கான அடிப்படை விடயம் அவர்களது வேதனமாகும். இன்று குர்ஆன் மத்ரஸாக்களிற் தகுதி வாய்ந்த ஆசிரியர்களைப் பெற முடியவில்லையாயின், அதற்குரிய முக்கிய காரணம் அவர் களுக்குத் திட்டவட்டமான சம்பளம் இல்லாமையாகும். சில

இடங்களில் அவர்களுக்கு வழங்கப்படும் வேதனம் மிகக் குறைவாகும். வேறு சில இடங்களில் எச்சம்பளமுமே வழங்கப்படாது பிள்ளைகளிடமே ஏதாவது மாதச் சந்தா அறவிட வேண்டியுள்ளது. இக்காரணங்கொண்டு தகுதி வாய்ந்த நல்லாசிரியர்களைப் பெற முடியாதுள்ளது. இந் நிலை மாறவேண்டுமானால் அதற்குரிய ஒரே வழி நிலை யான சம்பளத்திட்டம் வகுத்தலேயாகும்.

இத்தகைய சீர்திருத்தங்களின் மூலம் குர்ஆன் மத்ரஸாக் களை சமூகத்துக்கு மிகப் பயனுள்ளவையாய் மாற்றுதல் முடியும். இக்கால கட்டத்தில் மக்கள் மிக வேண்டி நிற்கும் நேர்சரிப் பள்ளிக் கூடங்களாக அவை மாறி, மத அடிப் படையிலான ஆரம்பக் கல்வியை வழங்கலாம்.

அல்–இன்ஷிறாஹ்

முஸ்லிம் மஜ்லிஸ்,

பேராதனைப் பல்கலைக்கழகம், 1984–85,

பக்: 65–68.

# 17.

# முஸ்லிம் பாடசாலைகளில் இஸ்லாமியக் கல்வி

சில தசாப்தங்களுக்கு முன்னர் இருந்ததை விடத் தற்போது முஸ்லிம் இளைஞர்களிடையே மார்க்கப் பற்றும், சமுதாய உணர்வும், இஸ்லாமியப் பழக்க வழக்கங்களும் மிக அதிகரித்திருப்பதாகப் பலர் கூறக் கேட்கிறோம். இத்தகைய முன்னேற்றம் ஏற்படுவதற்கு முஸ்லிம் பாடசாலையின் செல்வாக்கும் ஒரு முக்கிய காரணம் எனலாம்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் பாடசாலைகளில் மதக்கல்விக்கு முக்கிய இடமொன்று வழங்கப்படவில்லை. அதுவொரு விருப்பப் பாடமாகவே சில பாடசாலைகளிற் கணிக்கப்பட்டு போதிக்கப்பட்டு வந்தது. பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர் இஸ்லாம் எனும் பாடத்திற்கு கட்டாயம் தோற்ற வேண்டும் எனும் அவசியமிருக்கவில்லை.

அக்காலத்தில் கல்வியில் முஸ்லிம்களில் அக்கறையும் மிகக் குறைவாகவே இருந்தது. 1880ஆம் ஆண்டில் இலங்கைப் பாடசாலைகளிற் கற்ற முஸ்லிம் மாணவரின் தொகை 2.2 சதவிகிதம் மட்டுமேயாகும். உதவிபெறும் முஸ்லிம் பாடசாலைகளின் எண்ணிக்கை 0.3 சதவிகிதம் மட்டுமே யாகும். எனவே பாடசாலைகளில் மதக்கல்விக்கு முக்கிய இடம் வழங்கப்படவில்லையென்பதோடு, இங்கு செல்லும் முஸ்லிம் மாணவரின் தொகையும் மிகக் குறைவாகவே இருந்தது.

மார்க்கக் கல்வியிலுள்ள இவ்விடைவெளியை ஓதல் பள்ளிக்கூடம் எனப்படும் குர்ஆன் மத்ரஸாக்களும், மௌலவி மாரைப் பயிற்றும் மத்ரஸாக்களும் நிரம்பி வந்தன. காலக் கிரமத்தில், இன்று முற்றிலும் நிலைமை மாறிவிட்டது. நாட ளாவிய ரீதியில் இன்று சுமார் 675 முஸ்லிம் பாடசாலை களில், 260,000 முஸ்லிம் மாணவர்களை 9,500 முஸ்லிம் ஆசிரியர்கள் பயிற்றுவிக்கின்றனர். இந்நாட்டின் மொத்த சனத்தொகையில் முஸ்லிம்களின் விகிதாசாரத்துக்கு இவை கிட்டத்தட்ட உரிய பங்காகும். எமது பல்கலைக்கழக அனுமதி விகிதமும் வெகுவாக அதிகரித்துக் கொண்டு வருகிறது.

இத்தகைய சூழ்நிலையிலும், இன்றுள்ள கல்வியமைப் பிலும், மதக் கல்வியையும் வழங்க வேண்டிய பொறுப்பு பாடசாலைகளையே சார்கிறது. குர்ஆன் பாடசாலைகளுக்குச் சென்று விசாலமான மார்க்க அறிவைப் பெறக்கூடிய நேரமோ, அவகாசமோ இன்றைய பாடசாலை மாணவருக்குக் கிடையாது. அதற்கேற்ப எமது ஓதல் பள்ளிக் கூடங்களும் அமையவில்லை. எனவே, சமயக் கல்வியிலும் முக்கிய இடத்தைப் பாடசாலை வகிக்கின்றது.

முதலாம் ஆண்டிலிருந்து பதினோராம் ஆண்டு வரை யான இஸ்லாம் பாடப் புத்தகங்களை ஆழமாகவும் அகல மாகவும் கற்பிப்பதன் மூலம் போதிய இஸ்லாம், அரபு பற்றிய அறிவினை மாணவர்களுக்கு வழங்கமுடியும். ஆரம்ப வகுப்பு களிலே சுத்தம், அன்பு, பண்பு, இறை நம்பிக்கை, ஈமான், அல்லாஹ், மலக்குகள், தொழுகை, நம்பிக்கை, நபிகள் நாயகம் (ஸல்), ஸகாத், நற்குணங்கள் போன்ற விடயங்கள் கற்பிக்கப்படுகின்றன. மேல் வகுப்புக்களிலே அல் ஈமான்,

அல் இபாதாத், அத் தாரீக் எனும் அடிப்படைகளிற் பரந்து பட்ட பல விடயங்கள் அடங்குகின்றன. மேற்போந்த விடயங் களைத் தெளிவுறக் கற்கும் மாணவனொருவன் சிறந்த இஸ்லாமிய அடிப்படை அறிவினையும் பழக்க வழக்கங் களையும் பெறமுடியும்.

நற்பழக்கங்களில் சுத்தம் பேணல், நல்லன பேசல், நேரத்துக்குக் கருமமாற்றல் போன்றன மிக முக்கியமாகும். இவற்றை மாணவர் இளமையிலிருந்தே பழக்கப்படுத்திக் கொள்ளல் மிகப் பயன் தரும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு குறிப்பிட்ட கருமத்தை நிறை வேற்ற முடியும் என்பதற்குச் சிறந்த உதாரணம் எமது தொழுகையாகும். சுபஹூக்கு பாங்கு சொல்லுதல் 4.37க்கு என்றால் முஅத்தினார் ஒரு வினாடியேனும் முந்தாமல், பிந்தாமல் பாங்கு சொல்லுவார். இரவெல்லாம் குளிராயிருந் தது, சிறிது படுப்போம் என அவர் தாமதிப்பது இல்லை. லுஹர் 12.20க்கு என்றால்,கொதிக்கும் உச்சி வெயிலிலும் பள்ளிவாசல் சென்று பாங்கு சொல்லுவார். இஷா 7.13க்கு என்றால் மின்சாரம் இல்லை, வெளிச்சம் வரட்டும் என அவர் தாமதிப்பதில்லை. இதனைத் தொடர்ந்து தொழுகையும் அவ்வாறே. முக்கியஸ்தர் எவரும் வர வேண்டியுள்ளதே எனத் தாமதிப்பதில்லை. எனவே நேரத்துக்கு கருமமாற்றப் பழக இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்?

ஸாஹிறா,

ஸாஹிறாக் கல்லூரி, கல்முனை

நவம்பர்–டிசெம்பர் 1987, பக்: 1.

# 18.

# கிழக்கின் சூறாவளிகள்

ஒன்பது ஆண்டுகளுக்கு முன் கிழக்கு மாகாணத்தில் வீசிய சூறாவளியின் அனர்த்தங்களை இன்றையத் தலை முறையினர் நன்கறிவர்.

23.11.1978 வியாழக்கிழமை பிற்பகல் மூன்று மணி யளவில் வேகமாக வீசத் தொடங்கிய காற்று அன்றிரவு சூறாவளியாக மாறி, பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. அதிகாலை மூன்று மணியளவில் ஓய்ந்தது.

அதற்குள் மட்டக்களப்பை மையமாகக் கொண்டு பேரழிவை ஏற்படுத்தியதோடு, கல்முனை, பொலநறுவைப் பிரதேசங்களிலும் சூறாவளி பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தி விட்டது.

ஏற்கனவே மூன்று தடவைகள் கிழக்கு மாகாணம் புயலினாற் தாக்குண்டுள்ளது.

1845ஆம் ஆண்டிற் சூறாவளியொன்று அடித்தது. அது பற்றிய தகவல்களைப் பெற முடியாதுள்ளது.

பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்தியது, 1907ஆம் ஆண்டுச் சூறாவளியாகும்.

1921 இல் கல்முனைப் பிரதேசத்தில் வீசிய பெருங் காற்று பாரதூர அழிவுகளை எற்படுத்தவில்லை.

1907 ஆம் ஆண்டு வீசிய சூறாவளி "பெரிய புயல்" என்றும், 1891 ஆம் ஆண்டு வீசிய சூறாவளி "சிறிய புயல்" என்றும் அழைக்கப்படுகின்றன.

1907 ஆம் ஆண்டைய சூறாவளி பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது. இதனைப் பற்றி அறிவதற்கு அக்கரைப் பற்று வரகவி ஷெய்கு மதார் புலவரின் “கோரப் புயல்” எனும் புயல் காவியம் பெருந்துணையாக இருக்கிறது.

அத்துடன் அரசாங்க அதிபரின் அறிக்கைகள், மட்டக் களப்புச் கச்சேரியின் பிரதம முதலியராகக் கடமையாற்றிய எஸ்.ஓ. கனகரத்தினம் 1921 ஆம் ஆண்டு வெளியிட்ட “கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்டத்தின் வரைவு நூல்” (Monograph of the Batticaloa District of the Eastern Province, Ceylon-Government Printer, Colombo, 1921) ஆகியனவும் பேருதவி புரிகின்றன.

அக்கரைப்பற்று கருங்கொடியூரில் வாழ்ந்த செய்கு மதார் புலவர் இளவயதிலேயே கண் பார்வை இழந்தவர். ஆனால் மனக்கண் திறந்து அதிசிறந்த பாடல்களைப் பாடி வரகவியாகத் திகழ்ந்தார்.

அவரது ‘புயற் காவியம்” முன்னுரை தவிர்ந்த 25 செய்யுள்களைக் கொண்டது. அச்செய்யுள்களிற் சில பின் வருமாறு:

வந்திடு பெரும்புயலோ தொள்ளாயிரத் தேழில்
வளர்கின்ற பங்குனி யிலொன்பதாம் நாளில்
இந்து வருமிரவு பன்னிரண்டுமணி நேரம்
எவருமறியுங்கிழமை ஞாயிறுதானே.
சோலைதரு பனை தென்னை கதலிகமு கன்னாசி
சொல்லரிய மா பலா முந்திரி முருங்கை
ஆலரசு பூவரசு புளிய மரமும் வம்மி

அனல் வாகை சமுளை விளா பாலையின மரங்கள்
இன்னமுமநேக மரமானவைகள் வேரோடு
இடையிடை தெறித்தவைகள் எண்ணவரி தததனால்
மண்ணிலுதிர் தேங்காய் பலாக்காய்கள் மாங்கனிகள்
மணமான வாழை மறு காலெண்ண வரிதே.
சொன்ன மரமன்றியே மாடாடு கோழிகள்
சொல்லுகிளி வரத்துத்தாரா கொக்குவக்கா
அன்னங்கள் கானான் வயற்கோழி ஊர்க்கோழி
ஆலா குளுப்பையிவை யோடு வெகு பறவை
பறவையோடு ஊர்வன நடப்பன வினங்களிலே
பலவகை பிராணி யுயர் பகரவரி தாகும்
இறைகருணையால் புயல் நின்றதுவே யன்று பகல்
ஏழுமணி நேர மதன் பின்னா லேதான்.

1907ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நள்ளிரவு பன்னிரண்டு மணியளவில் ஆரம்பித்த சூறாவளி அன்றிரவு முழுவதும் வீசியபின் அடுத்த நாட் காலை ஏழு மணியளவில் ஓய்ந்தது என்று செய்கு மதார் புலவரின் "புயற் காவியம்" விபரிக்கிறது.

இச்சூறாவளி பற்றிய செய்தி கொழும்பில் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் வெளியானது. அதன் பின்னரே கொழும்பு வாசிகள் விபரத்தை அறிந்தனர்.

அன்றைய ஆளுநருக்கும் இந்தப் பத்திரிகைச் செய் தியே முதலில் கிடைத்த தகவல் ஆகும். அவர் மட்டக்களப்பு அரசாங்க அதிபராகவிருந்த ஈ.எப். ஹொப்கின்ஸ் என்பா ருக்கு ஒரு அவசரத் தந்தி அடித்தார்.

"கல்முனை ஆஸ்பத்திரி இடிந்து வீழ்ந்து நோயாளிகள் இறந்து விட்டதாகவும் வாடி வீடு சேதமடைந்துள்ளதாகவும் அக்கரைப்பற்றில் 1700 பேர் வீடிழந்துள்ளதாகவும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

இச்செய்தி உண்மையானால் அது பற்றி ஏன் தனக்குத் தந்தி மூலம் அறிவிக்கவில்லை என்று ஆளுநர் அறிய விரும்புகிறார்." இவ்வாறு அந்த தந்தியின் வாசகம் இருந்தது.

தந்தி கிடைத்ததும் அரசாங்க அதிபர் ஹொப்கின்ஸ் பத்திரிகைச் செய்தி உண்மையே எனவும், தந்திக் கம்பிகளில் மரங்கள் வீழ்ந்து அச்சேவை தடைப்பட்டிருந்ததினால் தன்னால் அறிவிக்க முடியவில்லையெனவும் பதில் அனுப்பினார்.

சூறாவளி பற்றிய அரசு அதிபர் வெளியிட்ட குறிப்பில் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்திருந்தது:

"மட்டக்களப்புக்குத் தெற்கே 4ஆம் கட்டையிலும் 6ஆம் கட்டையிலும் புயலினால் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்ட இரு தோட்டங்களை அவதானித்தேன். ஆயினும் பாதிப்பு பாரதூரமில்லை. அவ்விடத்திலிருந்து சூறாவளியின் வேகம் அதிகரித்திருக்கிறது. அரைக்கட்டை தொலைவில் ஓர் இடத்தில் ஒரு தோட்டத்தின் சுமார் மூன்றிலொரு பகுதித் தென்னை மரங்கள் வீழ்ந்துள்ளன. 10ஆம் கட்டைக் கருகில், சுமார் 50 சதவீதம் மரங்கள் வீழ்ந்திருந்த தோட்டமொன்றை அவதானித்தேன்.

அவ்விடத்திலிருந்து தெற்காய் பேரழிவையே காண முடிந்தது. 20ஆம் கட்டையை அண்மியதும் நிலைமை மிகப் பரிதாபமாயிருந்தது. எல்லா வகையான மரங்களும் முற்றாக

வீழ்ந்துள்ளன. சில இடங்களில் ஒரு மரம் கூடக் காணப் படவில்லை.

தென்னை மரங்களும், கமுகு மரங்களும் நடுவால் தெறித்தும், வேரொடு வீழ்ந்துமிருந்தன. எஞ்சியிருந்த மரங்களின் ஓலைகளும் குருத்துக்களும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தன; அவை பிழைக்க முடியாது.

அப்பிரதேசத்தின் பேரழிவுகளை என்னால் வர்ணிக்க முடியாது. அதற்கான வார்த்தைகள் இல்லை. மரங்கள் வீழ்ந்து கூரைகள் நசிந்து கிடக்கின்றன. சில வீடுகளின் கூரைகள் முற்றாகப் பறந்துள்ளன.

அக்கரைப்பற்றிலுள்ள கருங்கொடித்தீவு கிராமம் முற்றாக அழிந்து விட்டது. பெரும்பாலான மரங்கள் சாய்ந்து விட்டன. அநேக வீடுகளும் சேதமடைந்து விட்டன. 38ஆம் கட்டைக்கு அப்பால் இரண்டு செழிப்பான இளம் தென்னந் தோட்டங்கள் அழிந்து விட்டன.

இளம் தென்னைகள் ஆகையால் அவை வேரோடு சாயவில்லை. ஆனால் அவை மிக மோசமாகத் தாக்கப்பட்டுள்ளதனால் சில மரங்களே தப்பிப் பிழைக்கும். இதற்கப்பால் சேதங்கள் அவ்வளவாயில்லை.

அக்கிராமத்தில் மனித உயிரிழப்புக்கள் அதிகமில்லாதிருப்பது பேரதிசயமாகும். ஏனெனில் அவ்வளவு மரங்களும் வலை பின்னியது போல் எங்கும் வீழ்ந்துள்ளன.

மொத்தமாகக் கூறுமிடத்து மட்டக்களப்பின் தென் திசையில் 10ஆம் கட்டையிலிருந்து 40ஆம் கட்டைவரை

தென்னைச் செய்கை முற்றாக நாசமாகி விட்டது." -இவ்வாறு அரச அதிபர் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசாங்க அதிபரின் குறிப்புக்களில் விபரிக்கப்படும் தென்னந் தோட்டங்களுள் அதிக சேதமடைந்தவற்றில் ஒன்று காரைதீவில் இருந்த "கரடித் தோட்டம்" ஆகும்.

ஓ.எஸ்.டி. ஒகிரேடி எனும் ஐரிஷ்காரர் காரைதீவு, ஒலுவில் ஆகிய இடங்களில் நிக்கோல் என்பவருக்காக இரு தோட்டங்களை ஆரம்பித்தார். காலக் கிரமத்தில் நிக்கோல் அவற்றை விற்றுவிட ஒகிரேடியே அவற்றின் சொந்தக் காரரானார்.

ஒகிரெடியின் காரைத்தீவுத் தோட்டம் சுமார் 1000 ஏக்கர்களைக் கொண்டது. இப்பிரதேச மக்களால் அது "கரடித் தோட்டம்" என அழைக்கப்பட்டது.

இதற்குக் காரணம் ஒகிரேடி மிக ஆஜானுபாகுவான தோற்றம் கொண்டவர். மிகக் கருமையான அடர்ந்த தாடியையும் கொண்டிருந்தார். கரடியின் உரோம அடர்த்தி யையும், கருமையையும் அவரது தாடி கொண்டிருந்ததினால் மக்கள் அவரை கரடித்துரை எனவும், அவரது மனைவியைக் கரடியம்மா எனவும் அழைத்தனர்.

ஒகிரேடி துரை என்று ஆரம்பத்தில் அழைக்கப் பட்டவரின் பெயர் பின்னர் திரிந்து "போய் கரடி" என்று ஆகியிருக்கவும் கூடும்.

ஒகிரேடியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஊழியர் வேலன். தோட்டத்தில் வளர்க்கப்பட்ட பன்றிக் கூட்டத்தை

பராமரிப்பதுதான் வேலனின் வேலை. அதனால் அவர் "பன்றி வேலன்" என அழைக்கப்பட்டார்.

அவருக்கு நெல் வேளாண்மை செய்யக் கூடிய நிலத் துண்டை ஓகிரேடி அன்பளிப்புச் செய்தார். அதுவே இன்று அல்லி மூலைச் சந்தி எனும் இடத்துக்கு அருகே உள்ள "பன்றி வேலன் வெளி" என அழைக்கப்படுகிறது.

இப்பிரதேச வரலாற்றோடு ஓகிரேடி பிறிதொரு வகையிலும் தொடர்பு பெறுகிறார். இந்த நூற்றாண்டின் ஆரம்பக் காலத்தில் மட்டக்களப்பின் தென் பகுதிக்கான வீதிப் போக்குவரத்து மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. கால் நடையாகவும், மாட்டு வண்டி மூலமாகவும், விசேட சந்தர்ப்பங்களில் குதிரைக் கோச்சி மூலமாகவுமே சென்று வரக்கூடியதாக இருந்தது.

வீதியும் மிகவும் முரடானது. இதில் புரட்சிகர மாற்றம் ஒன்றை ஓகிரெடி ஏற்படுத்தினார். கல்முனையில் கிட்டங்கி என்னுமிடத்தில் இருந்து வாவியினூடாக மட்டக்களப்பு வரை நீராவிப் படகுச் சேவை ஒன்றை ஆரம்பித்ததார். 1891 இல் அவரது நீராவிப் படகான "ஷாம்றொக்" தனது சேவையை ஆரம்பித்தது. தினசரி காலை கிட்டங்கித் துறையிலிருந்து புறப்பட்டு மட்டக்களப்பை அடைந்து பிற்பகல் அங்கிருந்து திரும்பியது. ஏழுமைல் வேகத்தில் சென்ற இப்படகு மூன்றரை, மணித்தியாலங்களில் ஒருவழிப் பயணத்தை முடித்தது.

1907ஆம் ஆண்டு சூறாவளியினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றிய மதிப்பீடுகளை அவ்வப் பிரதேச பிரதம தலைமைக்காரர்கள் (தற்போதைய உதவி அரசாங்க

அதிபருக்குச் சமம்) அரசாங்க அதிபருக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

அவ்வாண்டின் 41ஆம் இலக்க அறிக்கையில் ஏறாவூர் கோறளை, மண்முனை வடக்கு, மண்முனை தெற்கு, எருவில் போரதீவு, கரைவாகு, சம்மாந்துறை, அக்கரை, பாணமை, விந்தனைப் பற்றுக்களின் இழப்புகள் தனித்தனியாகவும் மொத்தமாகவும் தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| இறந்தோரின் எண்ணிக்கை | 64 |
| உயிரிழந்த மாடுகள் | 1436 |
| உயிரிழந்த ஆடுகள் | 175 |
| (சில பற்றுக்களின் தகவல் இல்லை) | |
| அழிந்த தென்னை மரங்கள் | 371053 |
| அழிந்த ஏனைய முக்கிய மரங்கள் | 40114 |
| சேதமடைந்த கட்டிடங்கள் | 1842 |
| (சில பற்றுக்களின் தகவல் இல்லை) | |
| சேதமடைந்த கட்டிடங்களின் பெறுமதி | ரூபா 1,05,733 |
| நெல் தானியங்களுக்கு ஏற்பட்ட சேதம் - | ரூபா 1,54,861 |
| மொத்த நஷ்டம் | ரூபா 38,72,017. |

அன்றைய நாணயப் பெறுமதியில் 38 இலட்சம் ரூபா மிகப்பெரிய தொகை ஆகும். ஏனெனில் அக்கால கட்டத்தில் ஒரு கூலியாளின் நாளாந்தச் சம்பளம் இருபத்தைந்து சதமே.

அந்த இருபத்தைந்து சதத்தோடு சகல நாளாந்த அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்து அவர்கள் சந்தோசமாக வாழ்ந்ததாக வயோதிபரொருவர் குறிப்பிட்டார்.

சேதமடைந்த அரசாங்கக் கட்டிடங்களை எஸ். ஓ. கனக ரெத்தினம் தமது நூலில் பட்டியலிட்டுள்ளார்.

செட்டிப் பாளையம் வாடி வீட்டின் கூரையும், சுவர்களும் கணிசமாகச் சேதமடைந்ததோடு தளபாடங்களும் நாசமாயின.

கல்முனை வாடி வீட்டின் கூரை பறந்ததோடு தளபாடங் களும் ஏனைய பொருட்களும் முற்றாகச் சேதமடைந்தன.

கல்முனையில் உள்ள பழைய, புதிய உப்புக் குதங்கள் இரண்டும் பாதிக்கப்பட்டன. கல்முனை மருத்துவமனையின் கூரை இடிந்து வீழ்ந்ததால் நோயாளிகள் அவ்விடி பாடு களுள் சிக்குண்டனர்.

ஐந்து நோயாளிகள் இறந்தனர். பலர் காயமடைந்தனர். சிலர் ஆஸ்பத்திரியை விட்டு ஓடி விட்டனர்.

இதேபோன்று பல நீராவிக் கப்பல்களும் படகுகளும் சேதமடைந்தன. "லேடி ஹவ்லொக்" என்னும் கப்பல் கல்குடா வில் தரைதட்டிச் சேதமடைந்தது. எவரும் இறக்கவில்லை.

"அப்துல் ஹமீத்" எனும் பாய்மரக் கப்பல் முற்றாக உடைந்தது. பதினாலு மாலுமிகள் அதிலிருந்தனர். அறுவர் காப்பாற்றப்பட்டனர். ஏனையோர் காணாமல் போயினர். மூன்று வள்ளங்களும் கல்குடாவில் உடைந்தன. அக்கால கட்டத்தில் கல்குடாவே மட்டக்களப்புப் பிரதேசத்தில் முக்கிய துறைமுகமாயிருந்தது.

"சவுந்தர லெட்சுமி" எனும் பாய்மரக் கப்பல் பூனொச்சி முனையில் அமிழ்ந்தது. ஐவர் தப்பினர். அறுவர் இறந்தனர்.

நெல் ஏற்றி வந்த "முஹம்மத் சவுந்தரி" எனும் பாய்மரக் கப்பலும் கிரான் குளத்தில் உடைந்தது.

அந்தச் சூறாவளியின் போது ஏற்பட்ட அனர்த்தங்களோடு ஒப்பிடுகையில் மனித உயிரிழப்புகள் குறைவாய் இருந்தது பேரதிஷ்டமே. இதற்கான காரணங்கள் உண்டு.

நள்ளிரவில் சூறாவளி அடிக்கத் தொடங்கிய காரணத்தினால் எல்லோரும் தத்தமது வீடுகளில் உறங்கிக் கொண்டிருந்தனர். அக்காலத்தில் கல் வீடு, ஓட்டு வீடு என்பன மிக அரிது. யாவும் "வரிச்சி" வீடுகளே.

வரிச்சி வீடென்பது, முதலில் சுவர்கள் கட்ட வேண்டிய இடங்களில் பலமான கம்புகள் நடப்பட்டு, குறுக்குக் கம்புகளும் கட்டப்பட்டு, இடைவெளிகள் களிமண்ணால் அடைக்கப்பட்டிருக்கும்.

கூரையும் பலமான கம்புகளால் கட்டப்பட்டு வைக்கோல் கோரைப் புல் என்பவற்றால் வேயப்பட்டிருக்கும். இதனால் கூரை மேல் மரம் விழுந்தாலும் அதனைத் தாங்கக் கூடிய பலம் இக்கட்டிட அமைப்புக்கிருந்தது. முதலில் வீழ்ந்த மரங்களைக் கூரையும் சுவரும் தாங்கிக்கொள்ள, பின்னர் வீழ்ந்த மரங்களின் தாக்கத்தை ஏனைய மரங்கள் மலை போல் பின்னித் தாங்கிக் கொண்டன. அதனால் வீடுகள் தரைமட்டமாகவில்லை.

காற்றின் பயங்கர ஓசையினாலும், கூடவே பெய்த பெரு மழையினாலும் கூரை மேல் மரங்கள் வீழ்ந்த சத்தம் கேட்கவில்லை என ஒரு வயோதிபர் குறிப்பிட்டார்.

கும்மிருட்டானபடியால் எவரும் வெளியே வர முடிய வில்லை. காலையில் பார்த்தபோது சகல மரங்களும், வேலி களும் வீழ்ந்திருப்பதைத் தாம் கண்டதாகவும், ஊரின் மேற் கெல்லையில் இருந்து பார்த்தபோது கிழக்கெல்லையில் இருந்த கடல் தெரிந்ததாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன் பல்லாயிரக்கணக்கான பறவைகளும் செத்துக் கிடந்தன.

சூறாவளியினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுவதற் காக அரசாங்க அதிபர், நிவாரண நிதி ஒன்றை உடனடியாக ஆரம்பித்தார். தாமே 500 ரூபா நன்கொடையை வழங்கி அதனைத் தொடங்கி வைத்தார். நாடளாவிய ரீதியில் மக்கள் இந்நிதிக்கு வாரி வழங்கினர். இதனால் மொத்தம் 35 லட்சம் ரூபா நிதியை மட்டக்களப்பு மாவட்டம் பெற்றது.

**சிந்தாமணி**

**கொழும்பு, 6–12–87**

**பக்: 9,15.**

# 19.

# நூற்றாண்டுத் திருப்பத்தில் மட்டக்களப்பு முஸ்லிம்களின் கல்வி

மட்டக்களப்பு மாவட்டமென்பது, தற்போதைய மட்டக் களப்பு, கல்முனை, அம்பாரைக் கல்வி மாவட்டங்களைக் கொண்டிருந்த காலம் அது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் எனும் அக்காலப் பரப்பில் இப்பிரதேசத்தின் பொதுக்கல்வி நிலை மிகவும் கீழ் மட்டத்திலிருந்தது. கல்வியை வழங்குவதில் அரசாங்கத்தின் நேரடிப் பங்கு மிகக் குறைவாகவேயிருந்தது. மிஷனரி மாரின் தொண்டே அவ்விடை வெளியை நிரப்பியது.

1918ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்த பாடசாலைகளின் எண்ணிக்கை வருமாறு:-

| | ஆண் | பெண் | கலவன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| வெஸ்லியன் மிஷன் | 3 | 9 | 70 | 82 |
| றோமன் கத்தோலிக்க மிஷன் | 3 | 2 | 33 | 38 |
| ஆங்கிலத் திருச்சபை | 1 | - | 07 | 08 |
| இந்துப் பாடசாலைகள் | - | - | 10 | 10 |
| அரசினர் | 6 | - | 02 | 08 |
| மொத்தம் | 13 | 11 | 122 | 146 |

இப்பாடசாலைகளிற் கல்வி கற்ற மொத்த மாணவர் சுமார் ஏழாயிரம் ஆவர்.

மெதடிஸ்த திருச்சபையினரே கிழக்கு மாகாணத்தில் முதன் முதலாகப் பாடசாலைகளை ஆரம்பித்தனர். 1814இல் காலித் துறைமுகத்தில் வந்திறங்கிய வண. வில்லியம் ஒல்ட் என்பவர் கடல் மார்க்கமாக மட்டக்களப்பை வந்தடைந்து முதலாவது ஆங்கிலப் பள்ளிக்கூடமான புளியந்தீவு மெதடிஸ்த மத்திய கல்லூரியை அவ்வாண்டில் நிறுவினார். ஆயினும் வண. வில்லியம் ஒல்ட் அவ்வாண்டிலேயே மரண மடைந்தார். அவரின் நினைவாகக் கட்டப்பட்டு மட்டக்களப்பு மத்தியக் கல்லூரிக்கும் அலுவலகத்திற்கும் இடையே அமைந்திருந்த ஒல்ட் மண்டபம் 1918 சூறாவளியில் சேமடைந்தது.

வின்செண்ட் மகளிர் கல்லூரி 1820ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கல்முனையில் பெண்கள் விடுதிப் பாட சாலையை (G.B.S.) 1883இல் மெதடிஸ்த திருச்சபையினர் ஆரம்பித்தனர். இதனைத் தொடர்ந்து ஆண்களுக்கான (லீஸ்) உயர்தர பாடசாலை 1901 இல் ஆரம்பிக்கப்பட்டது. இவையிரண்டும் 1953 ஆம் ஆண்டு ஒன்றிணைக்கப்பட்டு இன்று உவெஸ்லி உயர்தர பாடசாலையென இயங்கி வருகிறது.

கத்தோலிக்க திருச்சபையினர் மட்டக்களப்பில் தமது தலையாய பாடசாலைகளாக அர்ச். மைக்கேல் கல்லூரியை 1873ஆம் ஆண்டிலும், அர்ச். சிசிலியா கன்னியர் மடப் பாட சாலையை 1876இலும் நிறுவினர். கல்முனையில் ஆரம் பிக்கப்பட்ட புனித மரியாள் பாடசாலை, 1938 இல் புனித வளனார் துறவிகளினாற் பொறுப்பேற்கப்பட்டு 1951இல் பாத்திமாக் கல்லூரியெனப் பெயர் மாற்றம் பெற்றது. இத்

திருச்சபையினர் 1928இல் கல்முனை கார்மேல் ஆங்கிலப் பாடசாலையைப் பெண்களுக்கென ஆரம்பித்தனர். கார்மேல் பாடசாலையும், பாத்திமாக்கல்லூரியும் 1976இல் ஒன்றிணைக் கப்பட்டு இன்று கார்மேல் பாத்திமாக் கல்லூரியாக இயங்கி வருகிறது.

தலையாய இந்துப் பாடசாலையான சிவானந்த வித்தி யாலயம், கல்லடி உப்போடை இந்து ஆண்கள் ஆங்கிலப் பாட சாலையெனும் பெயரோடு ஆரம்பிக்கப்பட்டது. இதற் கான அடிக் கல்லினை 6.11.1925இல் சுவாமி விபுலானந்தர் நாட்டினார். கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்டு 1.5.1929 அன்று வகுப்புக்கள் ஆரம்பித்தன.

இக்காலப் பரப்பில் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் களால் நடத்தப்பட்ட பாடசாலைகள் எதுவும் இருக்கவில்லை.

நாடளாவிய ரீதியிலும் முஸ்லிம்களின் நிலை இவ்வாறே யிருந்தது. 1900ஆம் ஆண்டில் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் 1328இலங்கையில் இருந்தன. இவற்றுள் முஸ்லிம்களால் நடத்தப்பட்டவை ஆக நான்கு மட்டுமே. இது மொத்தத்தில் 0.3 சதவீதமேயாகும்.

இலங்கையிலிருந்த பாடசாலைகள் மூன்று வகையின: 1. ஆங்கிலப் பாடசாலைகள் 2. ஆங்கில-சுயபாஷா (இரு மொழிப்) பாடசாலைகள் 3. சுயபாஷாப் பாடசாலைகள். இக்கால கட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரசினர் எட்டுப் பாடசாலைகளை நடாத்தினர். அவை எட்டும் தமிழ் மொழி மூலமான சுயபாஷாப் பாடசாலைகளே. முஸ்லிம் கிராமங்களிலேயே அவை அமைந்திருந்தன. ஏனைய

கிராமங்களில் மிஷனரிமாரின் பாடசாலைகள் இருந்த காரணத்தினால் அங்கு அரசினர் பாடசாலைகளை நிறுவ வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி, மருதமுனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, இறக்காமம் எனும் இடங்களில் இவ் அரசினர் பாடசாலைகள் அமைந்திருந்தன. இவற்றில் முஸ்லிம் மாணவர் தமிழ் மொழி மூலமான அடிப்படைக் கல்வியை மட்டுமே பெறக் கூடியதாயிருந்தது.

ஆங்கிலக் கல்வி கற்கச் சென்ற முஸ்லிம்களின் தொகை மிக அரிதாகவேயிருந்தது. 1887ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தில் அரசினால் நடத்தப்பட்ட ஆங்கிலப் பாடசாலைகளோ, ஆங்கில-சுயபாஷாப் பாடசாலைகளோ இருக்கவில்லை. மிஷனரிமாரின் உதவி நன்கொடை பெறும் ஆங்கிலப் பாடசாலைகளில் 437 மாணவர் கற்றுக் கொண்டிருந்தனர். அவர்களுள் 23பேர் மட்டுமே முஸ்லிம் மாணவராவர். இவ் வேளையில் கிழக்கு மாகாண மக்கட் தொகையில் முஸ்லிம்கள் சுமார் 40 வீதமாவர்.

கல்வியில் முஸ்லிம்களின் அக்கறையின்மைக்குப் பல காரணங்களைக் கூறலாம். அன்றையப் பொருளாதாரம் வேளாண்மைச் செய்கையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. பாரிய விவசாயத் திட்டங்களோ, தொழில் முயற்சிகளோ இருக்கவில்லை. இது இருபக்க விளைவுகளை ஏற்படுத்தியது. ஒரு புறத்தில், வேளாண்மைச் செய்கை போதுமான அளவு உணவையும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி

செய்வதற்கான வருமானத்தையும் தந்த காரணத்தினால் கல்வி கற்று அதன் மூலம் வருவாயைத் தேடி வேண்டிய அவசியம் இருக்கவில்லை. அவர்களின் தேவைகள் குறைவாகவே யிருந்தன. அத்துடன் பணத்தேவையும் மிகக் குறைவாகவே யிருந்தது. இத்தகைய விவசாயத்திற்கு மனித உழைப்பு மிகவும் தேவைப்பட்டது. அதனால் தமது பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதைவிட வயல்களில் வேலைக்கழைத்துச் செல்வதையே பெற்றோர் விரும்பினர்.

மறுபுறத்தில், இத்தகைய விவசாய முறை பெரும் வருவாயைத் தருவதாக அமையவுமில்லை. கல்லோயா நீர்ப்பாசனத் திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன் வருடத்துக் கொருமுறை ஒருபோக வேளாண்மையே செய்யப்பட்டது. தண்ணீர் பற்றாக் குறைவினாலும் பூச்சி புழுக்களினாலும் விவசாயம் அடிக்கடி தோல்வியடைந்தது. பல ஏக்கர் நிலத்தை உடைமையாகக் கொண்ட போடிமார் சிலர் இருந்த போதிலும் அவர்களிடம் கூட நிலம் இருந்ததேயொழியப் பணப்புழக்கம் இருக்கவில்லை. எனவே தூரவிடங்களிலுள்ள மிஷனரிப் பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அனுப்பிக் கல்வி கற்பிக்கக்கூடிய பணவசதி படைத்தோர் மிக அரி தாகவே யிருந்தனர். போக்குவரத்துச்சாதனங்கள் இன்மையும் நிலைமையை மோசமாக்கின.

அரசாங்க உத்தியோகத்தின் மூலம், அதிலும் குறிப்பாக ஆங்கிலக் கல்வியறிவு மூலம் பெறக்கூடிய பலனையும் அன்றையச் சமூகம் அறிந்திருக்கவில்லை.

எல்லாவற்றையும் விட மிக முக்கியமான காரணம் மத மாற்றம் தொடர்பான அச்சமேயாகும். மிஷனரிப் பாடசாலை

களுக்குத் தங்கள் பிள்ளைகளை அனுப்புவதன் மூலம் அவர்கள் இஸ்லாமிய வாழ்க்கை முறையைக் கைவிட்டு விடுவரெனவும் மதமாற்றம் செய்யப்படுவரெனவும் முஸ்லிம் கள் அச்சம் கொண்டிருந்தனர். அதனாற் தமது பிள்ளைகளை மிஷனரிப் பாடசாலைகளுக்கு அனுப்ப அவர்கள் தயங்கினர்.

இவற்றுக்கு மாற்று வழியாக முஸ்லிம் பிரதேசங்களில் அதிகளவு அரசினர் பாடசாலைகள் நிறுவப்படுவதை வலியுறுத்தக்கூடிய அல்லது முஸ்லிம் பாடசாலைகளைத் தாபிக்கக் கூடிய கல்விமானோ, கல்வி இயக்கமோ இப் பிரதேசத்தில் இல்லாது போயிற்று.

இவற்றின் விளைவாக 1911இல் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் கல்வியறிவு நிலை பின்வருமாறு இருந்தது.

மக்கட் தொகை 60,000

தமிழில் எழுத வாசிக்கத் தெரிந்தோர்

ஆண்கள் - 3860

பெண்கள் - 47

ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்தோர்

ஆண்கள் - 92

பெண்கள் - இல்லை

தேசிய ரீதியிலும் முஸ்லிம்கள் கல்வியிற் காட்டிய அக்கறை மிகக் குறைவாகவேயிருந்தது. 1883இல் நாட்டின் எல்லாப் பாடசாலைகளிலும் கல்வி கற்ற மாணவரின் எண்ணிக்கை வருமாறு:

| | | |
|---|---|---|
| சிங்களவர் | - | 56487 |
| தமிழர் | - | 28916 |
| ஐரோப்பிய வழித்தோன்றல் | | -2286 |
| முஸ்லிம் | - | 1531 |
| ஆங்கிலேயர் | | -116 |
| ஏனையோர் | | -103 |
| | மொத்தம் | -89439 |

எனவே முஸ்லிம்களின் தொகை 1.7 சதவீதம் மட்டுமே யாகும்.

1918ஆம் ஆண்டளவிலான கணக்கெடுப்பொன்றின் படி கிழக்கு மாகாணத்தில் 45குர்ஆன் மத்ரஸாக்கள் இருந்துள்ளன. இவற்றின் சராசரி வரவு 1114 சிறுவரும் 97 சிறுமியருமாவர். பல குர்ஆன் மத்ரஸாக்கள் இக்கணக் கெடுப்பிற் சேராது விடுபட்டும் போயிருக்கலாம்.

இத்தரவுகளைக் கொண்டு பார்க்குமிடத்து இப்பிரதேச முஸ்லிம்களும் சுயபாஷாப் பாடசாலைகளிற் தமிழ்மொழி மூலக் கல்வி கற்றோர் கூட மிகச் சிறு தொகையினரே. உதவி நன்கொடை பெறும் ஆங்கிலப் பாடசாலைகளுக்குச் சென்றோர் விரல் விட்டு எண்ணக்கூடியோரே. பெண்கள் பாட சாலைக்குச் செல்லவேயில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலக் கல்வியின் அவசியம் முஸ்லிம் மத்திய வர்க்கத்தினரால் மிக நன்கு உணரப்பட்டது. ஆங்கிலம் வர்த்தக மொழியாக இருந்ததனாலும் அநேக முஸ்லிம்கள் அதிலேயே ஈடுபட்

டிருந்ததனாலும் தமது வர்த்தக விருத்திக்கு ஆங்கில மொழி யறிவு அவசியம் என்பதை உணர்ந்தனர். அத்துடன் நாட்டின் சட்டவாக்க மொழியும் ஆங்கிலமாகவேயிருந்தது. குறிப்பாக முஸ்லிம் விவாகப் பதிவுச் சட்டம் தமக்கு மிகவும் பாதக மானதென முஸ்லிம்கள் கருதினராயினும், அது நிறைவேறு வதனைத் தடுக்க அவர்களால் முடியாது போயிற்று. இதற்கான காரணங்களுள் தமது எதிர்ப்பை ஆங்கில மொழி மூலம் வலுவாகக் காட்ட முடியாமல் போனமையும் ஒன்று எனக் கருதினர். எனவே ஆங்கிலக் கல்வியின் முக்கியத் துவம் உணரப்பட்டது.

முஹம்மது காஸிம் சித்திலெவ்வை தொடங்கிய இயக் கம்; அரபிப் பாஷாவின் வருகை; மொஹம்மதன் கல்விச் சங்கம் ஸ்தாபிதம் என்பவை இவ்வியக்கத்தை வலுப்படுத்தி, பிற்காலத்தில் கொழும்பு ஸாஹிறாக் கல்லூரியாகப் பரிண மித்த மருதானை மொஹம்மதன் ஆங்கிலப் பாடசாலை 1892இல் ஆரம்பிக்கப்பட்டதோடு முன்னெடுத்துச் செல்லப் பட்டது.

முஸ்லிம் பெண் கல்வி பற்றிய கரிசனை முகிழ்ந்த தசாப்தங்களும் இவையேயாகும். 1891இல் மூன்று பெண் பாடசாலைகள் கண்டி, கம்பளை, குருநாகலை ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டன. கண்டிப் பாடசாலை கட்டுக் கலையில் கிளையொன்றையும் கொண்டிருந்தது. சித்தி லெவ்வை அவரது மனைவி, சகோதரி ஆகியோர் இவற்றில் முன்னின்றுழைத்தனர். குருநாகலைப் பாடசாலையை நிறுவு வதில் அக்காலை தபாலதிபராகப் பதவி வகித்த யூ.எல்.ஏ. கரீம் என்பாரும் பெரும் பங்கு வகித்தார்.

இதே ஆண்டில் தென் மாகாணத்திலும் இரு முஸ்லிம் பெண் பாடசாலைகள் நிறுவப்பட்டன. 1891 அக்டோபர் முதலாம் திகதி காலியிலும், அதே மாதம் 15ஆம் தேதி மாத்தறையிலும் அவை திறக்கப்பட்டன. தென் மாகாணக் கல்வித்துறை முயற்சிகளில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் டபிள்யூ.எல்.எம். மரிக்கார் என்பவராவர். இப்பாடசாலை களில் அரபு, தமிழ், கணிதம், தையல்வேலை என்பன பாடங்களாயிருந்தன. ஆயினும் இப்பெண் பாடசாலைகள் ஐந்தும் அன்றையச் சூழலில் தாக்குப் பிடிக்க முடியாமற் தோல்வியடைந்தன.

நாட்டின் ஏனைய பகுதிகளில் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் கிழக்குப் பிரதேசத்தில் அவற் றின் தாக்கம் உணரப்படவுமில்லை. அத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்படவுமில்லை என்பது விசனிக்கத்தக்கதே.

**கலை அமுதம்,**
**அரசினர் முஸ்லிம் ஆசிரியர் கலாசாலை,**
**அட்டாளைச்சேனை,**
**1988 பக்: 15–18**

# 20.

# நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிழக்கின் போக்குவரத்து

இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் கிழக்கு மாகாணப் போக்குவரத்து வசதிகள் எவ்வாறிருந்தன? அக்கால அரசு அதிபர்களின் வருடாந்த அறிக்கைகள், எஸ்.ஓ. கனகரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட "கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட வரைபு நூல்" (*Monograph of the Batticaloa District*), அன்று வாழ்ந்தோருடனான உரையாடல் என்பனவற்றிலிருந்து பல தகவல்களைப் பெற முடிகின்றது.

ஆங்கிலேயர் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் கிழக்கு மாகாணத்தின் தலைநகராகத் திருகோணமலை இருந்தது.

1870 மே மாதத்தில் தலைநகர் மட்டக்களப்புக்கு மாற்றப்பட்டு அதன் முதல் அரச அதிபராக ஆர்.டபிள்யூ.ரி. மொரிஸ் என்பவர் பதவி ஏற்றார்.

மட்டக்களப்புக் கல்வித் திணைக்களம் இருந்த கட்டிடமே அரச அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமாக இருந்தது. தலைநகரை மீண்டும் திருகோணமலைக்கே கொண்டு செல்ல வேண்டுமெனும் முயற்சிகள் ஓரிரு முறை மேற்கொள்ளப்பட்டனவாயினும் அவை வெற்றி அளிக்கவில்லை.

மட்டக்களப்பிலிருந்து மூன்று பிரதான வீதிகள் சென்றன. ஒன்று பதுளைக்கும், மற்றொன்று வடகரை

வீதியெனும் பெயரில் திரிகோண மலைக்கும், பிறிதொன்று தென்கரை வீதியென கும்புக்கன் ஆறு வரையும் சென்றன.

நூற்றி மூன்று மைல் நீளமுடைய வீதி பதுளை வரைக்கும் சென்று, அங்கிருந்து பதினெட்டு மைல்கள் பண்டாரவளை வரை சென்றது.

குதிரை வண்டியே இப்பிரயாணத்திற்குப் பயன்பட்டது. கொழும்பு செல்வோர் பண்டாரவளை வரை, இவ்வாறு சென்று அங்கிருந்து புகையிரதத்தில் பயணத்தை மேற் கொண்டனர். கல்குடாவிலிருந்து நீராவிக் கப்பல் மூலம் கொழும்புக்கு செல்லும் பிராயண முறையும் வழக்கில் இருந்தது.

திருகோணமலை வீதி 84மைல் தூரமுடையது. இடை யில் ஏழு துறைகளைத் தோணி, வள்ளம் என்பன மூலம் கடந்து செல்ல வேண்டியிருந்ததனால் இதில் பிரயாணம் செய்வது கஷ்டமாயிருந்தது.

கும்புக்கன் ஆறு வரையுமான தென்கரை வீதி நூற்றி இரண்டு மைல் நீளமுடையது. மட்டக்களப்பிலிருந்து கோரைக் களப்பு வரையுமான 49 மைல்கள் கல் வீதியாயும், அங்கிருந்த நாவலாறு எனும் இடம் வரையில் ஆன 23 மைல்கள் கிரவல் வீதியாயும், எஞ்சிய 30 மைல்கள் காட்டு வண்டிப் பாதையாயும் இருந்தன.

“கல்றோட்டு” எனும் பொழுது தற்போதுள்ளது போன்ற தார் வீதிகளல்ல அவை. பாரிய கருங் கற்களைப் பரவி அதன் மேல் சிறு கற்களைப் போட்டு அதற்கு மேல் களி கலந்த மணலைப் போட்டு அமர்த்தியிருப்பர்.

இன்னொரு வகை, அம்மிக்கல் போன்ற அமைப்பில் பாரிய துண்டுகளாக கருங்கல் வெட்டப்பட்டு பரவி அடுக்கப் பட்டிருக்கும்.

இத்தகைய வீதியொன்று காரைதீவுச் சந்தியிலிருந்து மாவடிப்பள்ளி வரை மிகச் சமீப காலம் வரை இருந்தது.

இவ்வீதிகளைப் போடவும் பராமரிக்கவும் "பைனர்" எனப்படும் இந்தியத் தொழிலாளர் வேலைக்கு அமர்த்தப் பட்டிருந்தனர். அத்துடன் வீதியோரங்களில் ஆல், அரசு, வாகை, மருதம் போன்ற நிழல் தரு மரங்களை நடவும் நீருற் றவும், பராமரிக்கவும் தொழிலாளர் அரசினால் நியமிக்கப் பட்டிருந்தனர்.

கால் நடையாகவும், வண்டியிலும் பிரயாணம் செய்வோ ருக்கு இவை சுகமான நிழலை வழி நெடுகிலும் வழங்கின.

கடந்த இரண்டு மூன்று தசாப்தங்களுள் தந்திக் கம்பி களை இணைப்பதற்காக வீதியில் ஒரு புறமிருந்த மரங்கள் வெட்டப்பட்டன. மின்சாரக் கம்பிகளை இணைப்பதற்காக மறுபுறத்திலிருந்த மரங்களும் வெட்டப்பட்டு விட்டன.

மட்டக்களப்புக்கும் கும்புக்கன் ஆறுக்கும் இடையே கிளை வீதிகள் மிக அரிதாகவே இருந்தன. கல்முனையில் இருந்து கடற்கரையிலிருந்த வாடி வீட்டுக்கு ஒரு கிளை வீதியும் இரு மைல் தொலைவிலுள்ள கிட்டங்கித்துறை என்னுமிடத்திற்கு ஒரு கிளை வீதியும் இருந்தன. அவற்றைத் தாண்டிச் சென்றதும் காரைதீவுச் சந்தியிலிருந்து சம்மாந்துறை ஊடாக இறக்காமத்திற்கு ஒரு வீதி சென்றது.

சம்மாந்துறையில் அதன் ஒரு கிளை பிரிந்து அம்பாரை சென்றது. காரைதீவுக் கப்பால் அரசடி எனுமிடத்தில் (தற் போதைய அல்லிமூலைச் சந்தி) இருந்து மல்கம்பிட்டி வரை ஒரு வீதி சென்று சம்மாந்துறையூடாக இறக்காமத்துப் பாதையுடன் இணைந்தது.

அக்கறைப்பற்றிலிருந்து சாகாமம் வீதியும், இறக்காமம் வண்டிப் பாதையும் பிரிந்து சென்றன.

“இரவுச் சாப்பாட்டின் பின் இரட்டை மாட்டுக் கூட்டு வண்டியில் சாய்ந்த மருதூரில் இருந்து புறப்படுவோம். வண்டியில் வைக்கோல் பரப்பி மெத்தை போன்றிருக்கும். அதன்மேல் பாய் விரிந்திருக்கும். புறப்பட்டுச் சிறிது நேரத் தில் வண்டிக்காரன் உட்பட அனைவரும் நித்திரையாகி விடுவோம். மாடுகள் தம் பாட்டுக்கு நடந்து கொண்டிருக் கும். வண்டியின் கீழ் தூங்கும் ஹரிக்கேன் லாம்பு மிக மங்க லான வெளிச்சத்தைப் பரப்பும். பட்டிருப்புத் தோட்டத்தடியில் சிறிது இளைப்பாறி, மீண்டும் பயணத்தைத் தொடர்ந்து விடியற் காலையில் கல்லடித் துறையை அடைவோம்.

அப்போது கல்லடிப் பாலம் கிடையாது. அது 1930ஆம் ஆண்டே கட்டப்பட்டது. காலைக் கடன்களை முடித்து அவ் விடத்திலேயே சாப்பிட்டு விட்டுத் தோணி மூலம் வாவியைக் கடந்து புளியந்தீவுக் கோட்டையடியில் இறங்குவோம்.

ஒல்லாந்தரினால் கட்டப்பட்ட இக்கோட்டையிலேயே கச்சேரியும் ஏனைய அரச அலுவலகங்களும் அமைந் திருந்தன. கச்சேரி அலுவல்களை முடித்துக் கொண்டு பிற்பகலில் தோணி மூலம் இப்பால் வருவோம்.

வண்டிக்காரன் அங்கேயே மீன் வாங்கி பயணத்தின் போது கொண்டுபோன சமையற் பொருட்களைக் கொண்டு சோறு, கறி ஆக்கி வைத்திருப்பார்.

சாப்பிட்டு விட்டு மீள் பயணத்தை ஆரம்பித்து அடுத்த நாள் அதிகாலை ஊரை அடைவோம்." எனத் தாம் அக் காலத்தில் மேற்கொண்ட பயணத்தைப் பற்றி முதியவர் ஒருவர் குறிப்பிட்டார்.

இதே காலகட்டத்தில் கல்முனைக்கும் மட்டக்களப்புக் கும் இடையேயான பிரதான போக்குவரத்துப் பாதையாக மட்டக்களப்பு வாவி விளங்கியது.

இப்பாதை ஒரு காலத்தில் சம்மாந்துறை வரை நீண் டிருந்தது. 15ஆம் நூற்றாண்டில் ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் சுமாத்திராவிலுள்ள பாலம்பாங் எனும் இடத்திலிருந்து இலங்கை வந்து வாழ்ந்த ஆனந்த தேரரின் கூற்றுப்படி, காசியப்ப மன்னன் நாட்டின் வடக்கு, மேற்கு, கிழக்கு மூன்று துறைமுகங்களை அமைத்தான் எனவும், அவை வல்லிபுரம், களனி, சம்மாந்துறை எனவும் அறியக் கிடக்கிறது. எனவே சம்மாந்துறை நீண்ட காலத் திற்கு முன்னர் துறைமுகமாக இருந்திருக்கிறது.

சம்பன் எனும் வகை வள்ளம் வந்தடையும் துறை எனப் பொருள்படும். இவ்வூர்ப் பெயரும் அதை நிலை நிறுத்தும் எனினும் இந்நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் கிட்டங்கியில் இருந்தும் சம்மாந்துறை வரையிலான வாவி, மண் அரிப்பி னாலும் நாணற் புதர்களினாலும் மூடப்பட்டதனால் காலக் கிரமத்தில் உபயோகிக்க முடியாது போய்விட்டது.

கிட்டங்கித்துறை எனும் பெயர் ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்டது. அவ்வாட்சிக் காலத்தில் நெல், கொப்பரா முதலிய பொருட்களைச் சேமித்து வைப்பதற்கான கட்டிடமொன்றை பர்னாம் எனும் ஒல்லாந்தர் இவ்விடத்தில் நிறுவினார். அக்கட்டிடம் கிட்டங்கி எனப்பட்டது. அதையொட்டியே இவ்விடமும் கிட்டங்கித்துறை எனப் பெயர் பெற்றது.

மிகச் சமீப காலம் வரை கல்முனையின் மேற்கே அமைந்துள்ள கிராமங்களுக்கும் கல்ஓயா குடியேற்றத் திட்டத்தின் சில கொலனிகட்கும் வாவியைக் கடந்து செல்ல இவ்விடத்தில் வள்ளங்களும் தோணிகளும் பயன்பட்டன.

1975ஆம் ஆண்டளவிலேயே கிட்டங்கி-சவளக்கடை வீதி வாவிக்குக் குறுக்கே அமைக்கப்பட்டது.

வாவிப் போக்குவரத்தில் பாரிய அபிவிருத்தி ஒன்று 1891இல் ஏற்பட்டது. அவ்வாண்டிலே தான் ஓ.எஸ்.டி. ஓகிரேடி என்பார் "ஹாம்றொக்" (*Shamrock*) எனும் நீராவிப் படகுச் சேவையை ஆரம்பித்தார்.

ஓகிரேடி எனும் இவர் காரைத்தீவு, ஒலுவில் ஆகிய இடங்களில் பாரிய தென்னந் தோட்டங்களை ஆரம்பித்து நடத்தியவர் ஆவார். இவரை கரடித்துறை எனவும் இவரது மனைவியை கரடியம்மா எனவும் இப்பிரதேச மக்கள் அழைத்தனர்.

இவரால் ஆரம்பிக்கப்பட்ட இப்படகுச் சேவை அக்காலத்தில் புரட்சிகரமாகக் கருதப்பட்டது. மணிக்கு 7மைல் வேகத்தில் பயணம் செய்து மூன்றரை மணித்தியாலங்களில் இப்பயணத்தை முடித்தது. தினசரி காலையில் கிட்டங்கியில்

இருந்து புறப்பட்டு மட்டக்களப்பை அடைந்து, பிற்பகல் கிட்டங்கி மீளும். காலக் கிரமத்தில் ஸ்டான்லி கிரீன் என்பவர் 1907இல் அலிஸ், பிரைல் ஆகிய இரு படகுகளை இப் பாதையில் சேவைக்கு விட்டார்.

மட்டக்களப்பின் தென் பகுதியிலிருந்து கண்டிப் பிர தேசத்துடனான போக்குவரத்து 'தாவளம்' மூலம் மேற்கொள்ளப் பட்டது. தாவளம் என்பது காளை மாடுகளின் துணையுடன் செய்யப்படும் பிரயாணமாகும். பொருட்களைச் சாக்குகளில் கட்டி மாட்டு முதுகின் இருபுறமும் தொங்கவிடுவர்.

ஒரு தாவளத்தில் இருபதிலிருந்து நாற்பது வரையான மாடுகள் இருக்கும். அம்மாடுகள் காட்டினூடான ஒற்றையடிப் பாதையால் ஒன்றன் பின் ஒன்றாய்ச் செல்லும். அவற்றின் கழுத்திலே கட்டப்படும் சகடை எனும் மணி பெரும் ஓசையை எழுப்புவதனால் வனவிலங்குகள் வெருண்டோடி விடும்.

ஒக்காஸ்பிட்டி, வெல்லஸ்ஸ, பிபில எனும் பிரதேசத்தி னூடாகவே இக்கண்டிப் பயணம் நிகழ்ந்தது. கரையோரப் பிரதேசத்திலிருந்து உப்பு, கருவாடு, வெற்றிலை, சுண் ணாம்பு, புகையிலை முதலிய பொருட்களைக் கொண்டு செல்வர். மீண்டும் வரும்பொழுது குரக்கன், இறுங்கு, மிளகு, பாக்கு, பழவகைகள், சோளகம், தினை, மண்டு, வத்தாளைக் கிழங்கு என்பவற்றுடன் வருவர். வர்த்தகம் அனைத்தும் பண்டமாற்று முறையில் நடந்தது.

இத்தகைய மெதுவான போக்குவரத்து முறைகள் இந்த நூற்றாண்டின் முதல் மூன்று தசாப்தங்களில் மெல்ல மெல்ல மாற்றமடைந்தன.

1910ஆம் ஆண்டளவில் பைசிக்கிள் இப்பிரதேசத்தில் அறிமுகமாகியது. 1912இல் பஸ் ஓட ஆரம்பித்தது. திருகோணமலை, புகையிரதப்பாதை 1927 மே 2ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு, 1928இல் புகையிரதம் மட்டக்களப்பை வந்தடைந்தது. கல்லடிப்பாலம் 1930இல் கட்டி முடிக்கப் பட்டது.

கிழக்கு மாகாணத்தின் போக்குவரத்து வசதிகளை அதிகரிப்பதில் அப்போதைய சட்ட நிரூபண சபை அங்கத் தினராயிருந்த ஈ.ஆர். தம்பிமுத்துவின் பங்கு மிக முக்கிய மானது.

இலங்கையின் ஏனைய பகுதிகளுடன் புகையிரத சேவையினால் மட்டக்களப்பை இணைத்தல் வேண்டும். அப்புகையிரதப் பாதை நிந்தவூர் வரை அமைதல் வேண்டும். மட்டக்களப்பு வாவிக்குக் குறுக்கே கல்லடியில் பாலம் அமைத்தல் வேண்டும் எனச் சட்ட நிருபண சபையில் அவர் மிக வலியுறுத்தினார்.

கிழக்கு மாகாண மக்களினதும், அவர் தம் பிரதிநி தியினதும் இரு கோரிக்கைகள் 50 ஆண்டுகளுக்கு முன்பே நிறைவேறி விட்டன.

பொத்துவில் வரையான புகையிரதப் பாதை நீடிப்பு எப்போதாவது நிறைவேறுமா?

**சிந்தாமணி,**

**கொழும்பு, 26.02.1989,**

**பக்: 9.**